24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 | கதிர் 31 | மார்கழி 11ஆம் நாள் | வியாழக்கிழமை | 27 டிசெம்பர் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


## வடக்கின் பாதிப்பு தொடர்பில் 'அப்டேற்' இல்லாத அமைச்சர்!

யாழ்ப்பாணம், டிசெ. 27

வடக்கில் ஏற்பட்ட வெள்ள இடரில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 86 ஆயிரத்தைத் தாண்டிவிட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 75 ஆயிரம் என்று குறிப்பிட்டார் அரச நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மதுத்தும பண்டார. வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பில் அமைச்சர் உரிய புள்ளி விவரங்கள் இல்லாமல் இருக்கின்றமை வடக்கு மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. » 06



## சுனாமிப் பேரிடர் நினைவலையால் கண்ணீரில் நனைந்தது வடபகுதி!

யாழ்ப்பாணம், டிசெ.27

ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் 14ஆம் ஆண்டு நினைவுநாள் வடமாகாணத்தில் நேற்றுப் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

வடமாகாணத்தில் உடுத்துறை, கட்டைக்காடு, மணற்காடு, தெல்லிப்பழை, மன்னார், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வவுனியா போன்ற பகுதிகளிலும் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, செங்கலடி, மட்டக்களப்பு மற்றும் காலி உள்ளிட்ட இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் சுனாமியால் உயிரிழந்தோருக்கு அஞ்சலிகள் செலுத்தப்பட்டன. சுனாமி நினைவாலயங்கள் நேற்றுக் கண்ணீரால் நனைந்தன. (விரிவு: பக். 4.5)

## எரிபொருள்களின் விலைக் குறைப்பை அடுத்து

## பேருந்து, ஓட்டோ என்பனவற்றின் கட்டணம் 4 வீதத்தால் குறைப்பு

கொழும்பு, டிசெ. 27

இடைக்கால கணக்கறிக்கையின் மூலம் எரிபொருள்களின் விலைகளை அரசு குறைத்துள்ளதால் முச்சக்கர வண்டிக் கட்டணங்கள், பேருந்துக் கட்டணங்கள் மற்றும் பாடசாலை வாகனங்களின் கட்டணங்கள் என்பனவற்றை நேற்று நள்ளிரவு முதல் குறைக்க உரிய தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

கடந்த 21ஆம் திகதி இடைக்கால கணக்கறிக்கையை நிதி அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தார். அதன் பிரகாரம் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தன. பெற்றோல் ஒரு லீட்டரின் விலை 10 ரூபாவாலும், டீசல் ஒரு லீட்டரின் விலை 5 ரூபாவா » 06

# வெள்ளப் பாதிப்பு இமாலயமாகிறது!

## பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தொட வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 27

வடக்கில் ஏற்பட்டுள்ள வெள்ள இடரால் 28 ஆயிரத்து 806 குடும்பங்களைச் சேர்ந்த 90 ஆயிரத்து 402 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று மாலை தெரிவித்தது. புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் கடும் மழை பெய்து வருகிறது. கடந்த 22ஆம் திகதி இரணைமடுக் குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறந்து விடப்பட்டன. இதனால் கிளிநொச்சியில் மிகப்பெரும் வெள்ள இடர் » 06


## அதே நாள்கள் அதே வலிகள்...

யகார்த்தா, டிசெ. 27

2014ஆம் ஆண்டு இலங்கை சுனாமிக்கு முகம் கொடுத்ததைப் போன்று ஏனைய சில நாடுகளும் சுனாமியால் தாக்கப்பட்டன. அவற்றில் ஒன்று இந்தோனேசியா. இந்தப் பேரிடர் ஏற்பட்டு சுமார்



» 06



கிளிநொச்சியில் தொடர்கிறது கன மழை

## இரணைமடுக் குளத்தின் 9 வான் கதவுகள் திறப்பு!

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று அதிகாலை முதல் மீண்டும் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக இரணைமடுக் குளத்துக்கான நீர் வரத்து அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் 9 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

தற்போது இரணைமடுக்குளத்தின் நீர் மட்டம் 35 அடி 11 அங்குலமாகக் காணப்படுகின்றது. மழை காரணமாக தொடர்ந்து நீர் வரத்து அதிகரித்துள்ளமையால் இரணைமடுக் » 06

## முல்லைத்தீவில் இயற்கை இடரால் பெரும்தொகை கால்நடைகள் சாவு

*மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, டிசெ. 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்ட இயற்கை இடர் காரணமாக பெரும் தொகையான கால்நடைகள் உயிரிழந்துள்ளன. ஆயிரத்து 861 கால் நடைகளும் 4 ஆயிரத்துக்கும் அதிகளவான கோழிகளும் உயிரிழந்துள்ளன என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். » 06

## கிளிநொச்சிக்கு நாளை வரவுள்ளார் ரணில்

கிளிநொச்சி, டிசெ. 27

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் குறித்துப் பார்வையிடுவதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாளை வருகை தரவுள்ளார். இதன்ால் வெள்ள இடரால் ஏற்பட்ட சேத விவரங்கள் தற்போது தீவிர கதியில் திரட்டப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கடந்த 21ஆம் திகதி முதல் கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அந்தப் பகுதிகளில் » 06

*வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட*

## வடக்கு மாணவர்களிடத்தில் சிறப்புக் கவனமெடுக்கப்படும்

*கல்வி அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 27

வடமாகாணத்தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட வடக்கு மாணவர்களிடத்தில் சிறப்புக் கவனமெடுக்கப்படும் என்று தெரிவித்தார் கல்வி » 06

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு ஒருவர் சாவு; மூவர் காயம்!

கொழும்பு, டிசெ. 27

கொழும்பு மோதறைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று புதன்கிழமை காலை 8.15 மணியளவில் இடம் » 06




# காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுங்கள்


*கூட்டமைப்பு எம்.பிக்கள் 14 பேருக்கும் அவைத் தலைவர் சி.வி.கே. கடிதம்*

**யாழ்ப்பாணம், டிசெ. 27**
**தொல்பொருள் திணைக்களம், வனவள பாதுகாப்புத் திணைக்களம், வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்பன வடக்கில் காணிகளை ஆக்கிரமிக்கின்றன.**

அவற்றை அரசின் நிர்வாகப் பணிப்புரை ஊடாகத் தடுக்க முடியும். அதற்குரிய நடவடிக்கைகளை எடுங்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள அறிக்கையில், வடக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களம் மத ரீதியான முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்றது. இந்துமத அடையாளங்களை அழித்து பௌத்த மதச்சின்னங்கள் திணிக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் என்பன தான்தோன்றித்தனமாகக் காணிகளை ஆக்கிரமித்து மக்களின் வாழ்வாதாரத்தைச் சிதைக்கின்றன.

வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் ஆகியோர் பெரும்பான்மை இனத்தவர்கள். அவர்களால் தமிழ் மக்களின் உணர்வுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை. இரண்டாம் நிலை உயர் அதிகாரியாவது தமிழராக நியமிக்கப்பட வேண்டும். தொல்பொருள் திணைக்களம், வடக்கில் தொல்லியல் பிரதேசத்தை ஒதுக்கீடு செய்யும்போது அந்தப் பகுதி பிரதேச செயலக கலாசார அலுவலர்



ஊடாக மாகாண கலாசாரத் திணைக்களத்தின் ஒத்திசைவைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவற்றை அரசின் நிர்வாகப் பணிப்புரை ஊடாகச் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளார். (ம-5)

## ராஜித சேனாரத்னவின் ஊழல் வெகுவிரைவில் அம்பலமாகும்

*பொதுமக்கள் முன்னணி எச்சரிக்கை*

கொழும்பு, டிசெ. 27
சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன செய்துள்ள ஊழல்களை இன்று அல்லது நாளை அம்பலப்படுத்தவுள்ளதாக சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி (சிறிலங்கா பொதுஜன பெரமுன) எச்சரிக்கை விடுத்துள்ளது.

பத்தரமுல்லை நெளும் மாவத்தையில் அமைந்துள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமையகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் பியால் நிஷாந்த இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச ஊழல்கள் செய்துள்ளார் என்று கூறிவரும் அமைச்சர் ராஜித சேனாரத்ன கடந்த அரசில் சுகாதார அமைச்சராக இருந்போது பெரிய ஊழல்களில் ஈடுபட்டுள்ளார். அது தொடர்பிலான தகவல்களை நாளை (இன்று) அல்லது நாளைமறுதினம் (நாளை) அம்பலப்படுத்தவுள்ளோம். எம்மிடம் அவர் ஊழலில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. முடிந்தால் பேருவளை தேர்தல் தொகுதியில் இம்முறை அமைச்சர் ராஜித சேனாரத்ன வெற்றிப்பெற்றுக் காட்டட்டும். மகிந்த ராஜபக்சவுக்கு ஜம்பர் அணிவிக்க முயற்சித்தவர்களுக்கு நாம் ஜம்பர் அணிவிப்போம்" - என்றார். (ம)

## சிங்களவர்களின் மனதை வென்றுள்ளார்கள் தமிழர்

*ராஜித கூறுகின்றார்*

கொழும்பு, டிசெ. 27
அரசியல் சூழ்ச்சியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் ஓரணியில் செயற்பட்டார்கள். தமிழர்கள் தமது ஒற்றுமையின் மூலம் சிங்கள மக்களின் மனங்களை வென்றுள்ளனர்' என்று தெரிவித்தார் சுகாதார அமைச்சர் ராஜித.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

'தமிழர்கள் தங்கள் ஒற்றுமையின் ஊடாக தெற்கில் உள்ள சிங்களவர்களின் மனதை வென்றுள்ளார்கள். தமிழர்களின் இந்த ஒற்றுமை தொடர்ந்தால் தேசிய இனப்பிரச்சினைக்கு நாம் விரைவில் அரசியல் தீர்வைக் கண்டுவிடலாம். எந்தத் தடைகள் வந்தாலும் புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வை இந்த அரசு அடைந்தே தீரும்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## வடக்கு மாகாணத்தை குறிவைக்கிறது சீனா!

*தொல்பொருள் தடயங்களைத் தேடுகிறதாம்*

கொழும்பு, டிசெ. 27
யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியைத் தொடர்ந்து, மன்னார் மாவட்டத்தின் மாந்தைப் பிரதேசத்தில் தொல்பொருள் ஆய்வு நடவடிக்கைகளை சீனா முன்னெடுத்துள்ளது.

சீனா நாட்டின் சிசுவான் பல்கலைக் கழகமும், இலங்கையின் களனிப் பல்கலைக் கழகமும் இணைந்து இந்த ஆய்வுப் பணிகளை முன்னெடுத்துள்ளன. இரு நாடுகளினதும் தொல்பொருள் ஆய்வுக் குழுவினர் அங்கு கடந்த சில நாள்களாக தமது பணிகளை முன்னெடுத்துள்ளார்கள்.

'மாந்தை துறைமுகம் தொடர்பாக, எந்த விரிவான ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை' என்று, ஆய்வுக் குழுக்களுக்குத் தலைமை தாங்கும், களனி பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி மங்கள கட்டும்பொல, தெரிவித்துள்ளார்.

சீன தொல்பொருள் ஆய்வாளர்கள் யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியிலும் சீன வணிகத் தொடர்புகள் குறித்த அகழ்வாய்வுகளில் அண்மையில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-5)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு துரிதமாக இழப்பீடு வழங்கத்திட்டம்

*கொழும்பில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் முடிவு*

யாழ்ப்பாணம், டிசெ. 27
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதமாக இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பேரிடர் தொடர்பான அவசரக் கலந்துரையாடல் கொழும்பில், தலைமை அமைச்சர் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, அகில விராஜ் காரியவசம், ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் பங்கேற்றிருந்தார். வன்னியில் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விவரித்திருந்தார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக இழப்பீடு, உதவிகள் வழங்குதல், உணவு வழங்குதல் தொடர்பில் கூட்டத்தில் நீண்ட நேரம் ஆராயப்பட்டுள்ளது. மக்களின் சுகாதாரம் அவர்களுடைய உணவு போன்ற விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாக 10 ஆயிரம் ரூபா உதவி வழங்குதல் தொடர்பிலும், பயிரழிவு, கால்நடைகள் உயிரிழப்பு என்பவற்றுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பிலும் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. (ம-5,222)

## கடமைகளை பொறுப்பேற்றார் இராஜாங்க அமைச்சர் காசிம்!



கொழும்பு, டிசெ. 27
சுகாதார இராஜாங்க அமைச்சர் பைசல் காசீம் நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். கொழும்பு பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தையில் அமைந்துள்ள சுகாதார அமைச்சில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், இராஜாங்க அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம)

## தென்னிலங்கையில் கூட்டமைப்பின் மதிப்பு அதிகரித்துள்ளது இவ்வாறு தெரிவிக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

மட்டக்களப்பு, டிசெ. 27
தென்னிலங்கையில் உள்ள மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான மதிப்பு இன்று வானுயர வளர்ந்திருக்கின்றது. இது புதிய அரசமைப்புத் தொடர்பில் அவர்களுடன் உரையாடும்போது, அதனைக் கொண்டு செல்கின்றபோது எங்கள் மீதுள்ள அந்த மதிப்பு புதிய அரசமைப்பை ஏற்றுக்கொள்ளச் செய்யும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 13ஆம் ஆண்டு நினைவு தினம் மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணியின் ஏற்பாட்டில் அதன் தலைவர் கி.சேயோன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இந்த நாட்டில் சர்வாதிகாரத்துக்கு வித்திடுகின்ற - சர்வாதிகாரத்துக்கு நாட்டைக் கொண்டு செல்கின்ற முயற்சியைத் தடுத்து நிறுத்திய பெருமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் ஐயாவையே சாரும். இந்த நாட்டில் ஜனநாயகம் வீழ்ச்சியடையும்போது முதலாவது பாதிக்கப்படுவது தமிழ் மக்களாகவே இருப்பார்கள்.

நாங்கள் பல தடவைகளில் 'பிச்சை வேண்டாம்; நாயைப்பிடி' என்ற நிலையில் செயற்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். கடிநாயைக்கட்டி வைக்க வேண்டிய தேவையிருக்கின்றது. அதனையே நாங்கள் செய்துள்ளோம். நாங்கள் பேரம் பேசிக் கொண்டிருக்கின்றபோது பேரம் பேசியவர்களைத் துரத்திவிட்டு கடிநாயை ஏவிவிட்டபோது அந்தக் கடிநாயைக் கட்டிப்போட வேண்டிய தேவை எங்களுக்கு இருந்தது. அதனையே நாங்கள் செய்தோம்" - என்றார். (ம-5,46)

வெள்ளப் பெருக்கின்போது

## தெற்கில் வழங்கிய உதவிகள்போன்று வடக்கு மக்களுக்கும் வழங்கவேண்டும்

ஆனந்தன் எம்.பி. கோரிக்கை





யாழ்ப்பாணம், டிசெ. 27
தென்பகுதியில் வெள்ள இடர் ஏற்பட்டபோது எடுத்த துரித நடவடிக்கையை வடக்கு மாகாணத்திலும் எடுக்கவேண்டும்என்றுவன்னித்தேர்தல்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

தங்களது கிணறுகளில் வெள்ளம் புகுந்துள்ளதால் அந்த நீரைப் பயன்படுத்த முடியவில்லை என்று முல்லைத்தீவில்பாதிக்கப்பட்டமக்கள்தெரிவிக்கின்றனர். வெள்ளத்தால் நூற்றுக்கணக்கான மாடுகளும், ஆடுகளும், ஆயிரக்கணக்கில் கோழிகளும் உயிரிழந்துள்ளன. நெற்செய்கையில்ஈடுபட்டிருந்த நாம் இந்த வருடம் நிறைவான விளைச்சலை எதிர் பார்த்திருந்தோம். நாங்கள் வீடுகளுக்குத் திரும்பியதும் முக்கியமாகத் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்கொள்ளப் போகிறோம்" என்று கூறினர்.

தென் பகுதியில் வெள்ள இடர் ஏற்பட்ட போது உதவியமை போல் கிளிநொச்சி மக்களுக்கும் உதவவேண்டும். தற்போதையநிலையில்கிணறு இறைப்பது கடினம். நீரிறைக்கும் 3 இயந்திரங்களைப் பயன்படுத்தியும் இறைக்க முடியவில்லை. தண்ணீர் ஊற்றெடுத்தவாறுள்ளது. இதனால் சுகாதாரமானதண்ணீரைப்பெற்றுக்கொள்ளமுடியாமலுள்ளது.

போரால் அனைத்தையும் இழந்து. ஓரளவுக்குத் தலைநிமிரலாம் என்று எண்ணியிருந்த வேளையில். மழையும் வெள்ளமும் எங்களது வாழ்க்கையை மீண்டும் சோதித்துள்ளது. எமக்கு என்று விடிவுகாலம் பிறக்காதா என்று அவர்கள் அங்கலாய்க்கின்றனர் என்று சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு பிரான்சில் இயங்கும் ரீ.ஆர்.ரீவானொலியின்சமூகப்பணிக்குழுவினரின் பங்களிப்புடன்அத்தியாவசியஉதவிப்பொருள்களை ஐந்து முகாம்களில் தங்கியுள்ள சுமார் 464 குடும்பங்களுக்குவழங்கப்பட்டன. நான்குஇலட்சம்ரூபா பெறுமதியானஉலர்உணவுப்பொருள்களைநேற்றுமுன்தினம் சிவசக்தி ஆனந்தன் வழங்கி வைத்தார். இதன்போதே மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர் என்று சிவசக்தி ஆனந்தனின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4)

# தமிழ் அரசியல்வாதிகள் கேட்பதைப் போன்று இராணுவ முன்பள்ளியிலிருந்து நீக்காதீர்கள்!

## அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் ஆளுநருக்கு மனு

யாழ்ப்பாணம், டிசெ. 27

**தமிழ் அரசியல்வாதிகள் கேட்பதைப் போன்று எம்மை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழான முன்பள்ளி ஆசிரியர் பணியில் இருந்து நீக்கிவிடாதீர்கள் என்று முன்பள்ளி ஆசிரியர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக்க் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டுப் பின்னர் ஆளுநரைச் சந்தித்து அவர்கள் மனுவைக் கையளித்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.**



முன்பள்ளிஆசிரியர்களாகசிவில்பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளாகப்பணியாற்றிகடன்களைப்பெற்ற நிலையில். தற்போது திடீரென்று ஜனவரியுடன் இடைநிறுத்துமாறு அரசதலைவர் தெரிவித்துள்ளார் என்று எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எமது குடும்பங்க ளின் நிலமைகருதிசிவில்பாதுகாப்புத்திணைக்களத்தின் கீழான முன்பள்ளி ஆசிரியர் பணியில்தொடர்ந்தும்பணியாற்றஅனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் எம்மை பணிநீக்கம் செய்ய வேண்டாம். யாழ்ப்பாணத்தில்13முன்பள்ளிஆசிரியர்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 322 பேரும் பணியாற்றுகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தில்173 பேர் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றோம். தமக்கு 32 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுகின்றது. அதனைநம்பியே கடன்பெற்றிருக்கிறோம். எனவேமுன்பள்ளிஆசிரியர்பணியிலிருந்து நீக்கிவிடாதீர்கள். சிவில் பாதுகாப்புத்திணைக்களம்இயங்கஅனுமதிக்க வேண்டும். அதே சம்பளத்தைத் தொடர்ந்தும் வழங்குங்கள் என்று கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறு கோரிக்கை விடுத்துக் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்த முன்பள்ளி ஆசிரியர்களிடம், "ஆளுநரிடம் என்ன விடயத்தைக் கோரி வந்தீர்கள், தொடர்ந்தும் பணியாற்றமுடியாதுஎன்றுயார்தெரிவித்தனர், எதன் அடிப்படையில் கூறுகின்றீர்கள்" என்று கேட்டபோது "எதுவுமே தெரியாது" எனப் பதிலளித்தனர். "தம்மை அழைத்து வந்த முன்பள்ளி இணைப்பாளர்களான ஆண் பணியாளர்களிடம் கேளுங்கள்"என்றும்அவர்கள்தெரிவித்தனர்.

இதன்போது ஐவர் ஆளுநரைச் சந்தித்துத் தமது மனுவைக் கையளித்தனர். சிவில் பாதுகாப்புத்திணைக்களத்தின்கீழ்உள்ள முன்பள்ளி ஆசிரியர்களை கல்வித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவர வேண்டும்என்றுநாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனே கோரிக்கை விடுத்திருந்தார். அதனால் சிறிதரன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோரிடம் சென்று பேசுங்கள் என்று ஆளுநர் ஆரம்பத்தில் கூறினார். தாங்கள் சிறிதரனுடன் பேசமாட்டோம் என்று ஆசிரியர்கள் பதிலளித்தனர்.

இதன்போது, அரசதலைவருக்கு உடனடியாகக் கடிதம் எழுதி உங்களைத் தொடர்ந்தும் பணியாற்ற ஏற்பாடு செய்து தருகின்றேன். அதற்குக்காலஅவகாசம்வேண்டும் என்று அவர்களுக்கு ஆளுநர் பதிலளித்தார்.

இதேநேரம்அரசதலைவர்தலைமையில் அண்மையில் இடம்பெற்ற வடக்கு - கிழக்குக்கான அபிவிருத்திச் செயலணிக் கலந்துரையாடலில், வடக்கில் படைக் கட்டுமானத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிகள் பன்னாடுகளுக்குத் தவறான செய்தியையும் வடக்கு மாகாண முன்பள்ளி நியதிச் சட்டத்தைமீறுவதாகவும்உள்ளன. அவற்றைக் கல்வித் திணைக்களத்திடம் ஒப்படைத்தே ஆக வேண்டும் என்ற கோரிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேதான் ஆரம்பத்தில் முன்வைத்திருந்தார். இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகளைத்தொடர்புகொண்டுகேட்டபோது,

முன்பள்ளிநிர்வாகத்தின்கீழ்பலநூறுமுன்பள்ளிகள் உள்ளன. அவற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கல்வி அமைச்சர் அனுமதித்த 10 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படும்நிலையில்அவர்களின்நிரந்தரநியமனம்தொடர்பில்சிந்திக்கின்றோம். அதேநேரம் வலயக் கல்வித் திணைக்களங்கள் நிர்வகிக்கும் முன்பள்ளி ஆசிரியர்கள்க.பொ.தஉயர்தரம்அல்லதுசாதாரண தரத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து தகமை அடிப்படையில் பயிற்சி அளிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

ஆனால் படையினரின் முன்பள்ளியில் பணியாற்றும் ஆயிரக் கணக்கான முன்பள்ளி ஆசிரியர்களில் நூற்றுக் கணக்கானோர் 8ஆம் தரம் கல்வி கற்றவர்களும் உள்ளனர். அதனால் பெரும்நிர்வாக முரண்பாடு உள்ளது - என்றனர்.

இதேவேளை, "கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றும் எந்தவொரு முன்பள்ளி ஆசிரியர்களையும் பணியில் இருந்து நிறுத்துமாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பு கோரவில்லை என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார். ஒரு பகுதியினருக்கு 32 ஆயிரமும் மறுதரப்பிற்கு 6 ஆயிரம் ரூபாவும் வழங்குவதனைச் சீர் செய்யும் நடவடிக்கையையே கோருகின்றோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

"சிவில்பாதுகாப்புத்திணைக்களத்தின்கீழ் இயங்குபவர்களுக்கு இந்த அரசு 32 ஆயிரம் ரூபா வழங்க முடியுமானால் மாகாணம் முழுதுமுள்ள ஏனைய முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஏன் 32 ஆயிரம் ரூபா வழங்க முடியாது என்பதே எமது கேள்வி.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம் 8 ஆம் வகுப்புடனும் வயதுக் க்ட்டுப்பாடு இன்றியும் ஆளணியினரை நியமனம் செய்தபின்னர்பயிற்சிவழங்கிபணியாற்ற அனுமதிக்கலாம் என்றால் க.பொ.த உயர்தரம் மற்றும் சாதாரண தரம் சித்தி எய்திய ஆயிரம் ஆசிரியர்கள் மட்டும் 6 ஆயிரத்துக்காகப் பணியாற்றுவது சரியானதுதானா? இதற்கு வடக்கு மாகாண ஆளுநர்பதில்கூறவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் 6 ஆயிரம் ரூபாவுடன் நிரந்தரமும் இன்றி. ஒய்வூதியமோஅல்லதுஊழியர்சேமலாபநிதிகளோஇன்றிஇத்தனைஆண்டுகளாகப் பணியாற்றும் 4 ஆயிரம் ஆசிரியர்களும் ஆளுநர் செயலகம் முன்பாகச் செல்லும் நிலையை ஆளுநர் உருவாக்குகின்றார். 4ஆயிரம்ஆசிரியர்களுக்குஒருசட்டமும் 600ஆசிரியர்களுக்குவேறொருசட்டமும் நடைமுறைப்படுத்தமுடியாது.

இராணுவத்தின் துணைப்படைக் கட்டமைப்பின் கீழ் முன்பள்ளிகளை அனுமதிக்க முடியாது. 4 ஆயிரத்து 600 ஆசிரியர்களும்கல்வித்திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும். அனைவருக்கும் அரசு நியாயமான வாழ்வாதாரத்துக்குஏற்றஊதியம்வழங்க வேண்டும்" - என்றார்.

(4,105)

# மகிந்த ஆட்சி அமைப்பதையே ஆனந்தன் எம்.பி. விரும்புகிறார் போலுள்ளது!

## மாகாண முன்னாள் உறுப்பினர் கூறுகிறார்



வவுனியா, டிசெ. 27
சில்லறைத்தனமாக, அரசியல்வாதிகளின் கருத்துக்காக எங்கள் கொள்கையை மாற்றமாட்டோம். நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்திஆனந்தனின்கருத்துமகிந்தவின்ஆட்சிஅமைய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறதுபோலுள்ளது என்று வடக்குமாகாணசபையின்முன்னாள்உறுப்பினர்செ.மயூரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

காணாமல்ஆக்கப்பட்டோர்சங்கத்தினர்கடந்ததிங்கட்கிழமை நடத்திய கலந்துரையாடலில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துகொண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்14நாடாளுமன்றஉறுப்பினர்கள்வரவு - செலவுத்திட்டத்தை எதிர்க்கவேண்டும். அரசின் பாதுகாப்புக்கான பாதீட்டை தோற்கடிக்கவேண்டும்என்ற கருத்தை முன்வைத்திருந்தார்.

அவருடையநோக்கங்களைப்பார்க்கின்றபோதுதமிழ்த்தேசியக் கூட்டமைப்பால் கொண்டுவரப்பட்ட கூட்டரசைக் கவிழ்ப்பதற்கான இரண்டாம் கட்ட முயற்சியையே இவர் கொண்டு செல்கின்றார் என்று நான் எதிர்பார்க்கின்றேன். எங்களுடன் இருக்கின்றபோதுமைத்திரி - ரணில்அரசைக்கொண்டுவரவேண்டும். கூட்டரசுக்கு வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட சிவசக்தி ஆனந்தன், தற்போது எங்களைவிட்டுப்பிரிந்து சென்று எதிர்க்கவேண்டும் என்று இரண்டாம் கட்ட இரட்டை வேடம் போடுகின்றார் என்றே நான் எதிர்பார்க்கின்றேன்.

எங்களைப்பொறுத்தவரையில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள். அதை எவராலும் மாற்றியமைக்க முடியாது. அதற்கேற்ப தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக நிச்சயமாக விவாதிக்கும். இந்த அரசுடன் எத்தனை கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் மக்களுக்காக விவாதித்துக்கொண்டிருக்கும்.

சில்லைறைத்தனமான அரசியல் செய்கின்ற சில்லறை அரசியல்வாதிகளின் கருத்துகளுக்காக நாங்கள் எங்கள் கொள்கைகளை மாற்றியமைக்க முடியாது. பாதீட்டை எதிர்க்க வேண்டும்என்பதன்நோக்கத்தைப்பார்க்கின்றபோது மீண்டும் மகிந்த ராஜபக்சவின் அரசாட்சி துளிர் விடுவதற்கான நிகழ்வாகவே பார்க்கின்றேன். எங்களை அழித்தொழித்த மகிந்த ராஜபக்ச அரசு மீண்டும் துளிர்விடுவதற்கான சந்தர்ப்பத்தை தமிழ்த்தேசியக்கூட்டமைப்புமுன்னெடுக்காது. சிவசக்திஆனந்தனின் கருத்துக்களை எதிர்க்கின்றோம்.

அதற்காக இந்த அரசுக்கு நாங்கள் துணைபோவோம் என்று கூறவில்லை. தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினைகள் காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பாக நாங்கள் இந்த அரசுக்கு அழுத்தத்தையும் எதிர்ப்பையும் தெரிவிப்போம் என்று மேலும் தெரிவித்தார். (4,111)

# ஆழிப்பேரலையின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல்


முல்லைத்தீவு




கள்ளப்பாடு










உடுத்துறை


தெல்லிப்பழை


வவுனியா


பூந்தோட்டம்


யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்


புதுக்குடியிருப்பு


அம்பாறை


கல்முனை

# ஆழிப் பேரலைக் காவியம் இறுவெட்டு நேற்று வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 27
ஆழிப் பேரலை காவியம் எனும் இறுவெட்டு நேற்று வெளியிடப்பட்டன.
வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து இதை வெளியிட்டன.
வடமாராட்சி கிழக்குப் பிரதேச செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் நேற்றுமுற்பகல் நிகழ்வு இடம்பெற்றது. முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள அதிகாரி திருமதி சுஜீவா அவர்களும் சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதேச சபைச் செயலாளர் புத்திரசிகாமணி, செந்தமிழ் சொல்லருவி லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
முதற்பிரதியை சுஜீவா வெளியீட்டு வைக்க கொடுக்கிளாய் கலைமதி கலாமன்றம் பெற்றுக் கொண்டது.
சிறப்புபிரதிகளை ஏனைய விருந்தினர்கள் வெளியிட்டனர். லலீசன் விமர்சன உரை நிகழ்த்தினார். வடமாராட்சி கிழக்குப்பிரதேசசெயலக அலுவலர், பிரதேசகலாசாரப் பேரவை உறுப்பினர்கள், கலைஞர்கள் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர். வெளியீடுசெய்யப்பட்ட இறுவெட்டில் பதினொருபாடல்கள் இடம்பெற்றுள்ளன. வடமாராட்சி கிழக்கு கலைஞர்கள் கவிஞர்கள் இணைந்து இதை உருவாக்கியுள்ளனர். இதற்கான இசை வடக்கு மாகாணக் கலாசாரப் பேரவை இசைக்கூடத்தில் இசை அமைக்கப்பட்டது. (4,26,160)

# உயிரிழந்தோரின் நினைவுக் கல் உடுத்துறையில் நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.27
ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தில் சிக்கி உயிரிழந்த வடமராட்சி உடுத்துறைப் பகுதியைச் சேர்ந்த உறவுகளுடையபெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல் நேற்று உடுத்துறையில் திறந்து வைக்கப்பட்டது.
ஆழிப்பேரலையின்14ஆம் ஆண்டுநினைவுநாள்நேற்று உடுத்துறையில் கடைப்பிடிக்கப்பட்டபோதே இந்த நினைவுக் கல் திரைநீக்கம் செய்யப்பட்டது. உடுத்துறை சுனாமி பொது நினைவாலயத்தின் வாயிலுக்கு வலது பக்கமாக அந்த நினைவுக் கல் அமைக்கப்பட்டுள்ளது.
நேற்றயதினம்குறித்தநினைவுக்கல்லை மருதங்கேணிப் பிரதேசசெயலர், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்எம்.கே. சிவாஜிலிங்கம் உள்ளிட்டகுழுவினர் திறந்துவைத்தனர். அதைத் தொடர்ந்து நினைவுநாள் கடைப்பிடிக்கப்பட்டது. (21,26)



# இடர்களை எதிர்கொள்ள ஓரணியில் செயற்படவும்

*யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், டிசெ. 27
இயற்கை இடர்களை எதிர்கொள்வதற்கு நாம் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டும். அப்போதுதான் அதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்று யாழ்ப்பாணம் மாவட்டச்செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.
ஆழிப் பேரலையின் நினைவாக தேசிய பாதுகாப்பு தினம் யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் நேற்று காலைகடைப்பிடிக்கப்பட்டது. தேசியக் கொடி ஏற்றல், இரண்டு நிமிட அக வணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"இடர் முகாமைத்துவநிலையம்நிறுவப்பட்டுஅதன்பின்னர் தொடர்ச்சியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறன. இது ஆயிரக்கணக்கானோரைக் காவு கொண்டதால்இந்த ஆழிப் பேரலை தேசிய பாதுகாப்புதினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இடர்களை எதிர் கொள்வதற்குநாம்அனைவரும்ஒன்றுசேர்ந்துசெயற்படவேண்டும்"-என்றார். யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு உதவிப் பணிப்பளார் தெரிவித்ததாவது:
"யாழ்ப்பாணமாவட்டத்தில்இடர்முன்னெச்சரிக்கைமற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் சற்று முன்னேற்றம் கண்டுள்ளன. பத்திரிகைகளும்சரியான பணியை மேற்கொண்டன. அனைத்துதரப்பினரும்இதற்குஒன்றிணைந்தார்கள்" - என்றார். நிகழ்வில் அரச அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தினர், கடற் படையினர், சர்வ மதத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (4,7)

# நினைந்துருகும் உறவுகளை மறந்து ஒலிக்கவிடப்பட்டது தேசியகீதம்

## உடுத்துறையில் மக்கள் விசனம்

**யாழ்ப்பாணம், டிசெ. 27**
**ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்தவர்களை அவர்களுடைய உறவுகள் நினைந்துருகிக் கதறிஅழுது தமது ஆறாத்துயரை ஆற்றிக் கொள்ளும் புனித இடமான சுனாமி நினைவாலயத்தில் நேற்று இலங்கையின் தேசியக் கொடி ஏற்றப்பட்டு இலங்கையின் தேசியகீதம் ஒலிக்கவிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு அங்கிருந்த பெரும்பாலானவர்களை விசனத்துக்குள்ளாக்கியது.**

உயிரிழந்தவர்களை அஞ்சலிக்கும் இந்த நிகழ்வில் தேசியக் கொடி ஏற்றப்படவேண்டுமா, துள்ளல் இசையுடன் கூடியகீதம்ஒலிக்கப்படவேண்டுமா என்று அவர்கள் விசனித்தனர்.
ஆழிப்பேரலை அள்ளிச் சென்றவர்களுடைய 14ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று வடமராட்சி உடுப்பிட்டி பொது நினைவாலயத்தில் இடம்பெற்றது. உயிரிழந்தவர்களை அஞ்சலிப்பதற்காக நேற்றுக் காலையே நினைவாலயத்துக்குச் சென்ற உறவுகள் உயிரிழந்தவர்களுக்குப் பிடித்த உணவுப் பண்டங்களை அவர்களுடையசமாதிகளில் படைத்து, அவர்களை நினைத்துகண்ணீர்வடித்தவாறும், அழுது புலம்பியவாறும்



இருந்தனர். இதன்போது தேசியக் கொடி ஏற்றும் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் ஒலிபெருக்கில்அறிவித்தனர். தேசியக் கொடியை ஏற்றுவதற்காக மருதங்கேணி பிரதேச செயலர் வருகை தந்தார். அவர் தேசியக் கொடியை ஏற்றவே துள்ளல் இசையுடன் கூடிய தேசிய கீதம் ஒலிபரப்பப்பட்டது. இந்தச்சம்பவமேமக்கள்மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.
எங்குதேசியக்கொடியைஏற்றுவது என்ற ஒரு சிந்தனை இல்லாது, இறந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வில்தேசியக்கொடியைஏற்றுவது, தேசியகீதத்தை இசைக்கவிடுவது குறித்து மக்கள்கவலையடைந்தனர். குறித்த நிகழ்வில் வடக்கு மாகணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்து கொண்டிருந்தார். (21,26)

# சுனாமியில் உயிரிழந்தோருக்காக உறவுகள் அழுது புலம்பி நினைவேந்தல்

யாழ்ப்பாணம், டிசெ. 27
ஆழிப்பேரலையில் சிக்கி உயிரிழந்தவர்களின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் வடக்கு உட்பட நாடு முழுவதும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.
வடக்கில் பல இடங்களிலும் பலரும் நினைவேந்தலில்நேற்றுஈடுபட்டிருந்தனர். அவர்கள்கண்ணீர்மல்கதீபங்கள் ஏற்றி, உணவுகள் படைத்து ஓலமிட்டு அழுது அஞ்சலி செலுத்தினர். யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திலும்நினைவேந்தல்சிறப்பாகநேற்றுஇடம்பெற்றது.

**தெல்லிப்பழை**
ஆழிப் பேரலையின் நினைவேந்தல் தெல்லிப்பழை சிற்பாலயக் கலைக்கூடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது. யாழ்ப்பாண திருமறைக்கலாமன்றம் மற்றும் மல்லாகம் தெல்லிப்பழை லயன்ஸ்கழகத்தின் அனுசரணையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. சிறப்பாலயத்தில் உள்ள கலைக் கூடத்தை சிற்பி ஏ.வி ஆனந்தன் வடிவமைத்திருந்தார். ஆழிப் பேரலை நினைவுச் சிற்பத்தின் முன்பாக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி ஆனந்தனின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்குக்கற்றல்உபகரணங்கள்வழங்கப்பட்டன. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், சிற்பி ஆனந்தனின் உறவுகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**முல்லைத்தீவு**
மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் அஞ்சலிநிகழ்வுகள்இடம்பெற்றன. முல்லைத்தீவில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்தில் முல்லைத்தீவுப் பங்கு சுனாமி நினைவாலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் முல்லைத் தீவுப்பங்கு தந்தை அருட்பணி அன்ரன்ஜோர்ச் தலைமையில்சிறப்புஆராதனை, அஞ்சலி என்பன இடம்பெற்றன.
பின்னர்இந்துமதவழிபாடுகளில்இந்து மதகுருவும், இஸ்லாம்மதவழிபாட்டில் மௌலவியும் ஈடுபட்டனர். தொடர்ந்து கத்தோலிக்கமதவழிபாடுயாழ்ப்பாண மறைமாவட்டகுருமுதல்வர்அருட்பணி ஜோ.ஜெபரட்ணம்தலைமையில்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு வழிபாடு இடம்பெற்றது.

**புதுக்குடியிருப்பு**
வன்னிக்குறோஸ்அமைப்பின்ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு வணிகர் சங்கம், அழககசங்கம், முச்சக்கரவண்டிச் சங்கம், பனைதென்னைவளஅபிவிருத்திச் சங்கம் ஆகியனவற்றின் ஒத்துழைப்புடன்புதுக்குடியிருப்பில்நினைவேந்தல் இடம்பெற்றது.
சுனாமியில்ஆயிரத்து300க்கும்அதிகமான மக்களைப் புதைத்த இடமான சுனாமிநினைவாலயத்தில்மக்கள்சுடர் ஏற்றி மலர்தூவி அகவணக்கம் செலுத்தினர். அங்கு மக்களுக்கான பிரார்த்தனை வழிபாடுகள், நினைவுரைகள் இடம்பெற்றன.

**வவுனியா**
சுனாமியில் இறந்தவர்களுக்கு ஆத்ம சாந்திப்பிரார்த்தனை கந்தசுவாமிஆலயத்தில் இடம்பெற்றது. வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் இடர் முகாமைத்துவ நிலையம் இதை ஏற்பாடு செய்தன.
நெய்விளக்கேற்றி, அர்ச்சனை செய்து தீபங்கள் ஏற்றப்பட்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இடம்பெற்றது. மாவட்டச் செயலர், மேலதிகசெயலர், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.
இவ்வாறே, வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயப் பரிபாலனசபையின் ஏற்பாட்டில்சுனாமிபேரலையில்உயிர் நீத்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வும் பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டுகழக மைதானத்தில்அமைந்துள்ளசுனாமிநினைவுத்தூபியில்பிரார்த்தனையும் நடைபெற்றன.
நிகழ்வில் பொதுமக்கள், அரசியல்வாதிகள் கலந்துகொண்டனர்.
இறம்பைக்குளம் நாகபூசணி அம்மன் ஆலயத்தில் வவுனியா அந்தணர் ஒன்றியத்தின்ஏற்பாட்டில்சுனாமியில்உயிர் நீத்தவர்களுக்காகச்சிறப்புவழிபாடுகள் நடைபெற்றன.

**மன்னார்**
மன்னார்மாவட்டதேசியபாதுகாப்புதின நினைவேந்தல் நிகழ்வு மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் மன்னார் பள்ளிமுனை லூசியா ம.வியில் இடம்பெற்றது. உறவுகளை நினைவு கூர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு, சர்வமதப்பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

**அம்பாறை**
அம்பாறை மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்ட கரையோரத்தமிழ்,முஸ்லிம்பிரதேசங்களில் சோகம் ததும்ப நினைவேந்தல்கள் இடம்பெற்றன.
ஆயிரக் கணக்காண உயிர்கள்காவு கொள்ளப்பட்ட நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு, நிந்தவூர், திருக்கோவில் முதலான பிரதேசங்களில்நினைவுதினநிகழ்வுகள் உணர்வு பூர்வமாக இடம்பெற்றன.
கல்முனை மாநகரசபையின் தமிழ் அரசுக்கட்சிஉறுப்பினர் ரீ.ராஜனின்ஏற்பாட்டில்அன்னதானம்வழங்கலும்இடம்பெற்றது. இந்தநிகழ்வில்கல்முனைதமிபிரிவு பிரதேச செயலர் ரீ.ஜே.அதிசயராஜ் உட்பட உயரதிகாரிகள்கலந்துகொண்டனர்.

**செங்கலடி**
சுனாமியில் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் நினைவேந்தல்கள் மட்டக்களப்பு நாவலடி, கல்லடி புதுமுகத்துவாரம், அட்டன் போன்ற இடங்களில் நேற்று நடைபெற்றன. மெழுகுவர்த்தி ஏந்தி உயிர் இழந்தோருக்கு இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தபட்டது.

**மட்டக்களப்பு**
மட்டக்களப்பு ஓந்தாச்சிமடம் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவுத்தூபியில் நினைவேந்தல் இடம்பெற்றது. உயிர்நீத்தவர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பலர் அதில் கலந்துகொண்டனர்.
(4,7,26,110,246,222,,56,ரி3,160,30)

# சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு எண்ணவில்லை

## மைத்திரிபாலவின் ஆசையில் மண் போடுகிறது மகிந்த அணி

கொழும்பு, டிசெ. 27

மகிந்தவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்தே எதிர்காலத் தேர்தல்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்கொள்ளும் என்று மைத்திரிபால சிறிசேன தெரிவித்த 48 மணி நேரத்துள், அவ்வாறான எந்தவொரு உடன்பாடும் எந்தக் கட்சியுடனும் இதுவரை செய்து கொள்ளப்படவில்லை என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கூறியுள்ளது.

மகிந்தவுடன் இணைந்தே எதிர்காலத் தேர்தல்களில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிடும் என்றும் அதனை விரும்பாதவர்கள் கட்சியிலிருந்து வெளியேறலாம் எனவும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கட்சியின் அமைப்பாளர்களுடனான சந்திப்பில் கூறியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் கருத்து வெளியிட்டுள்ள சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பொதுச் செயலர் சாகர காரியவசம், 'அரசியல் கூட்டணியை அமைப்பதற்கான கதவை நாங்கள் திறந்தே வைத்துள்ளோம். ஆனால் இன்னமும் எவருடனும் உடன்பாடு ஏதும் எட்டப்படவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்டதும், கூட்டணியில் இணைந்து செயற்பட விரும்பும் தரப்புகளுடன் பேச்சு நடத்துவோம். எனினும், அந்தக் கூட்டணிக்கு சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியே தலைமை தாங்கும். அத்துடன், அந்தக் கூட்டணி தாமரை மொட்டு சின்னத்தில் தான் போட்டியிடும்' என்றும் அவர் தெரிவித்தார். (ம-5)



இ.போ.சபையின் வடபிராந்திய இணைந்த தொழிற்சங்கத்தினரால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தாயக மக்களுக்கு உலர் உணவுகள், உடுப்புக்கள் மற்றும் குடிதண்ணீர் ஆகியவை நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தை சுற்றியுள்ள சிறு வர்த்தகம் செய்பவர்களும் குருநகர் வாழ் மக்களும் பொருள்களை அன்பளிப்பாக வழங்கினர். (ம-8)

## வெள்ளப்...

ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக நிலைமை நாளுக்குநாள் மோசமாகி வந்தது. நேற்று மாலை நிலவரப்படி 28 ஆயிரத்து 806 குடும்பங்களைச் சேர்ந்த 90 ஆயிரத்து 402 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மழை தொடர்கின்றமையாலும் கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் 9 வான் கதவுகள் நேற்றும் திறந்த விடப்பட்டுள்ளமையாலும் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இன்று அல்லது ஓரிரு தினங்களில் ஒரு லட்சத்தைத் தாண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**முல்லைத்தீவு**

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 488 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 774 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 755 குடும்பங்களைச் சேர்ந்த 15 ஆயிரத்து 138 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 331 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 4 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 291 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 413 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 409 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 467 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வெலியோயா பிரதேசத்தில் இருந்தும் மக்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். அங்கு 8 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவில் மொத்தமாக 8 ஆயிரத்து 282குடும்பங்களைச் சேர்ந்த 26 ஆயிரத்து 815 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் 85 வீடுகள் முழுமையாகவும், ஆயிரத்து 754 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

**கிளிநொச்சி**

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 624குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 986 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 20 வீடுகள் முழுமையாகவும் 99 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 665 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 980 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 3 வீடுகள் முழுமையாகவும் 141 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 188 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 179 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 109 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அங்கு 2 ஆயிரத்து 599 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 143 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு வீடுகள் முழுமையாகவும், 172 வீடுகள் பகுதியளவிலும் சேதடைந்துள்ளன.

**மன்னார்**

மன்னார் நகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் காற்றின் தாக்கத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**யாழ்ப்பாணம்**

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 257 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 642 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**வவுனியா**

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 152 குடும்பங்களைச் சேர்ந்த 516 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-8)

## இரணைமடுக்...

குளத்தின் 9 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதில் 5 வான் கதவுகள் 1.5 அடியாகவும் 4 வான்கதவுகள் 6 அங்குலமாகவும் திறக்கப்பட்டுள்ளன. வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களின் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாகப் பெய்த கனமழை வெள்ளப்பெருக்குக் காரணமாக பல கிராமங்களின் மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ள நிலையில் சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (ம-426-105)

## வடக்கு...

அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம்.

வடக்கில் ஏற்பட்டுள்ள வெள்ள இடர் தொடர்பில் தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கில் ஏற்பட்டுள்ள வெள்ள இடரால் பாடசாலை மாணர்கள் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் சீருடைகள் பாடப் புத்தகங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. அவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள், புத்தகப் பைகள், காலணிகள் மற்றும் சீருடைகள் என்பன வழங்குவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்" - என்றார். (ம-10)

## அதே...

14 ஆண்டுகளின் பின்னர் அதே காலப்பகுதியில் சுனாமியின் தாக்குதலுக்கும் அதன் வலிகளுக்கும் முகம் கொடுத்து வருகிறது இந்தோனேசியா.

இந்தோனேசியாவின் சுந்தா ஜலசந்தியில் உள்ள சைல்டு எரிமலை கடந்த 23ஆம் திகதி இரவு வெடித்துச் சிதறியது. இதனால் ஏற்பட்ட சுனாமி பேரலைகள் மேற்கு ஜாவா, தெற்கு சுமத்ரா தீவுப் பகுதிகளைத் தாக்கின. இதன் காரணமாக கடற்கரையோரம் இருந்த ஆயிரக்கணக்கான குடியிருப்புகள் இடிந்தன. இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொண்டனர். நேற்று நள்ளிரவு நிலவரத்தின்படி இந்த இடர்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500இனைத் தாண்டியுள்ளது என்று இந்தோனேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பு தெரிவித்துள்ளது. உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்ற அச்சத்தையும் அது வெளியிட்டது. (ம)

## முல்லைத்தீவு...

முல்லைத்தீவில் பெய்யும் தொடர்ச்சியான மழை மற்றும் வெள்ள இடர் தொடர்பில் உதயனுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை மற்றும் வெள்ள இடர்களால் பெரியளவான பாதிப்புக்கள் உணரப்பட்டுள்ளன. ஒப்பீட்டளவில் நேற்று (நேற்று முன்தினம்) மாலை மழை ஓரளவு குறைவடைந்திருந்த போதிலும் இன்று (நேற்றையதினம்) மழை மீண்டும் பெய்ய ஆரம்பித்துள்ளது. முல்லைத்தீவில் ஏற்பட்ட வெள்ளத்தால் 8 ஆயிரம் ஏக்கர் வயல் நிலம் முற்றாக அழிவடைந்துள்ளது. 13 பாலங்கள் அழிவடைந்துள்ளன. ஆயிரத்து 281 மாடுகளும் 621 ஆடுகளும் உயிரிழந்துள்ளன என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகள் உயிரிழந்துள்ளன. இவ்வாறு உயிரிழந்த கால்நடைகளை அப்புறப்படுத்துவதற்கு அதிக செலவுகள் ஏற்படுகின்றன. எனினும் பொதுச் சுகாதாரம் கருதி அந்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ம-105)

## கிளிநொச்சிக்கு...

வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்தனர். வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. வீட்டிலிருந்த உடமைகளைக் கைவிட்டு மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள். இந்த இடர் காரணமாக வீடுகள், வீட்டு உடமைகள், வயல்கள், வீதிகள், பாலங்கள் என்று பல்வேறு வகையான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கால்நடைகள் உயிரிழந்தும் காணாமலும் போயுள்ளன.

இடர் ஏற்பட்டு 5 நாள்கள் ஆகின்ற நிலையில் சேதவிவரங்கள் திணைக்களங்களால் முழுமையாக இன்னமும் கணக்கெடுக்கப்படவில்லை. திணைக்களங்களிடமிருந்து உரிய விவரங்கள் தமது கைக்கு வந்து சேரவில்லை என்று தெரிவிக்கும் மாவட்டச் செயலக வட்டாரத்தினர், நாளை வெள்ளிக்கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொச்சிக்கு வருகை தருவதற்கு முன்னதாக அந்த விவரங்கள் திரட்டப்படும் என்று தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டச் செயலர்களுக்கும் தலைமை அமைச்சர் ரணிலுக்கும் இடையிலான சந்திப்பும் இன்று இடம்பெறவுள்ளது என்று தெரியவருகிறது. (ம-5,105,214)

## கொழும்பில்...

பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம், கொழும்பு மோதரை பகுதியில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் நால்வர்; படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பயனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மோதரை ஹேனமுல்ல பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய தினேஸ் எரங்க என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் குறித்த பகுதியில் முச்சக்கர வண்டி ஓட்டுனராக பணிப்புரிந்து வந்துள்ளார். துப்பாக்கிச் சூட்டில் இவரே இலக்கு வைக்கப்பட்டுள்ளார். உந்துருளிகளில் வந்த இருவரே மேற்படி துப்பாக்கிச் சூட்டை நடத்தி தப்பிச்சென்றுள்ளனர். இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்டிருந்த மோதலே சம்பவதற்குக் காரணமாக அமைந்துள்ளது. துப்பாக்கிச் சூட்டை கொழும்பு புளுமெண்டல் சங்கா தலைமையிலான பாதாள உலகக் குழுவே நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது - என்று தெரிவித்துள்ளது. சம்வபவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொழும்பு கிராண்பாஸ் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை குடாவெல்ல மீன்பிடித்துறை முகத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-8)

## வடக்கின்...

தலைமை அமைச்சரின் அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் ரஞ்சித் மதுத்துமபண்டார இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

"வடமாகாணத்தில் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த மக்களுக்கு சமைத்த உணவுகள், உலர் உணவுப் பொருள்கள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மத்தியில் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். 5 மாவட்டங்களில் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் (நேற்றுமுன்தின நிலவரத்தின்படி) பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. அதன் பிரகாரம் பாதிக்கப் பட்டுள்ளவர்களுக்கு துரித கதியில் நிவாரணங்களை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இழப்பீடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன" - என்றார். (ம-10)

## பேருந்து...

லும் குறைக்கப்பட்டது. இதனையடுத்து பேருந்துக் கட்டணமும், முச்சக்கர வண்டிக் கட்டணமும் குறைக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதன் அடிப்படையிலேயே பேருந்துக் கட்டணம் நேற்று நள்ளிரவு முதல் 4 வீதத்தால் குறைக்கப்படுகிறது என்று தனியார் பேருந்துகள் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்திருந்தது. அதேபோல் இலங்கைப் போக்குவரத்து சபையும் கட்டணங்களைக் குறைத்துள்ளது. இதேவேளை முச்சக்கர வண்டி கட்டணங்களும் நேற்று நள்ளிரவுமுதல் குறைக்கப்பட்டுள்ளன. 50 ரூபா ஆரம்ப கட்டணம் என்ற அடிப்படையில் முச்சக்கர வண்டிக் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளன. (ம-10)

# காணி அளவீடு முடியும் வரை மயானம் அமைக்கவேண்டாம்

## மாவட்டச் செயலர் பணிப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 27**
**யாழ்ப்பாணம் வலி.வடக்கு ஆவளை பகுதியில் காணி அளவீடு முடியும் வரை மயானம் அமைக்கும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது பற்றிய தொடர் கலந்துரையாடல் மீண்டும் இடபெறவுள்ளது என்று மாவட்டச் செயலர் கூறியுள்ளார்.**

இது பற்றிய கலந்துரையாடல் ஒன்று தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. அதில் மயானம் அமைக்க வேண்டாம் என்று கோரிக்கை விடுப்பவர்களும், மயானம் அமைக்க வேண்டும் என்று கோருபவர்களும் அழைக்கப் பட்டிருந்தனர். குறித்த பகுதியில் கடற்றொழிலுடன் தொடர்புபடும் கரையோரம் தவிர்ந்த ஏனைய நிலப்பகுதியான காணியை அளந்து பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும். அதனால் காணி அளக்கும் வரையில் மயானம் அமைக்கக்கூடாது என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதனை மாவட்டச் செயலர்ஏற்றுக்கொண்டு மயானம் அமைக்கத் தற்காலிக தடை விதித்தார்.

ஆவளை பகுதியில் இந்து மயானம் அமைக்க பிரதேச சபை நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த இடம் மீன்பிடியுடன் தொடர்புடைய இடம் என்பதால் அங்கு மயானம் அமைக்கக்கூடாது என்று அந்தப் பகுதி மீனவர்கள் மயானம் அமைக்க எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். இது பற்றிய மனு ஒன்றை மாவட்டச் செயலரிடம் கடந்தவாரம் வழங்கியிருந்தனர். அது பற்றிக் கலந்துரையாடுவதாகக் கூறிய தன் பேரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடல் இடம்பெற்றது. (ஐ-106)

---

தனது கருத்து இடம்பெறவில்லையாம்

## சபையில் கூட்ட அறிக்கையை கிழித்தெறிந்தார் உறுப்பினர்

வலி.தென்மேற்கு, டிசெ.27
கூட்ட அறிக்கையில் தனது கருத்துக்கள் பதியப்படாமை தொடர்பில் ஆட்சேபனை தெரிவித்த உறுப்பினர் ஒருவர் அந்த அறிக்கையைச் சபையில் வைத்து துண்டு துண்டாகக் கிழித்துள்ளார்.

உறுப்பினரின் இந்தச் செயல் சபையில் இருந்த சக உறுப்பினர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான பாதீடு தொடர்பான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சபை மண்டபத்தில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே உறுப்பினர் இவ்வாறு நடந்துகொண்டார்.

பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக தவிசாளர் உரையாற்றியதைத் தொடர்ந்து கடந்த கூட்டத்தின் அறிக்கை அங்கிருந்த உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

அதன்போது ஐ.தே.கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ரமணன் கடந்த கூட்டத்தில் தனது கருத்துக்கள் அறிக்கையில் பதியப் படாமல் இருப்பது தொடர்பில் ஆட்சேபனை தெரிவித்து அறிக்கையைத் துண்டு துண்டாகக் கிழித்து எறிந்தார்.

இவரின் இந்தச் செயல் குறித்து விசனம் அடைந்த சில உறுப்பினர்கள் அறிக்கை கிழிக்கப்பட்டமை தொடர்பில் பல தரப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்தனர். (ஐ-115)

---

## தவிசாளர் பாரபட்சமாகச் செயற்படுவதாக சுட்டிக்காட்டிய உறுப்பினர் வெளிநடப்பு

வலி.தென்மேற்கு, டிசெ.27
பிரதேசத்தில் மேற்கொள்ளப் பட்டுவரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் தவிசாளர் உறுப்பினர்களுக்கிடையில் பாரபட்சமான முறையில் செயற்படுவதாகச் சுட்டிக்காட்டிய ஆளும் கட்சி உறுப்பினர் இது சம்பந்தமாக விடுக்கப் பட்ட வினாக்களுக்குத் தவிசாளர் பதில் வழங்காததனை அடுத்து சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் 2018ஆம் ஆண்டுக்கான இறுதிக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை சபை மண்டபத்தில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றி ஆராயப்பட்ட போது ஆளும் கட்சி உறுப்பினர் ஜோன் ஜிப்றிக்கோ உரையாற்றுகையில்,


"வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் 2018ஆம் ஆண்டின் பாதீட்டை வகை மாற்றம் செய்து பிரதேசசபையின் உறுப்பினர்களால் ஏகமனதாக எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தலா 7 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந் தது.

பாரபட்சமான வகையில் தவிசாளர் சில உறுப்பினர்களுக்கு ரூபா 7 இலட்சத்துக்கும் அதிகமான நிதியை வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கியிருந்தார். சில வட்டாரங் உறுப்பினர்களுக்கான 7 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கான வேலைத் திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட தவிசாளர் கவனம் செலுத்தவில்லை.

இதனாலேயே எனது கேள்விக்குத் தவிசாளர் சரியான பதிலை அளிக்காமல் மூடி மறைக்க முயல்கிறார்.

இவரின் பாரபட்சமான செயற்பாட்டால் சபைக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புப் செய்கின்றேன்"- என்றார். (ஐ-115)

---



## மதிப்பளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ.27
தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படும் உயரிய விருதான 'கலைசாகரம்' விருதுகளைப் பெற்றவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தினரின் ஏற்பாட்டில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றது.

கல்வயலைச் சேர்ந்த திருமதி. சுந்தரவல்லி ஆனந்தராசா, கா.சிவஞானசுந்தரம் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

அத்துடன் கடந்த வருடம் இடம்பெற்ற ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் அதிசிறப்பு சித்தி பெற்ற கிருபானந்தக் குருக்கள் சுதர்கனும் மதிப்பளிக் கப்பட்டார்

நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் கலந்து கொண்டார். (ஐ 9, 159)

---

## புயல், மழையால் பாதிக்கப்பட்ட 572 குடும்பங்களுக்கு உதவிகள்

தென்மராட்சி, டிசெ.27
தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மாதம் வீசிய 'கஜா' புயல் மற்றும் பெருமழை ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட 572 குடும்பங்களுக்கான முதல் கட்ட உதவியாகத் தலா பத்தாயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளன.

கரம்பைக் குறிச்சி, கெற்பேலி ஆகிய பகுதிகளில் 3 வீடுகள் முழுமையாகவும், கச்சாய் கடலேரியில் நிறுத்தப்பட்டிருந்த 3 படகுகள் சேதமடைந்ததுடன் ஏனைய குடியிருப்புக்கள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கவென இடர்முகாமைத்துவ அமைச்சினால் நிதி அனுப்பி வைக்கப்பட்டதை அடுத்து முதல்கட்ட உதவிகளை இந்த வாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை குடியிருப்பாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பாக உதவிப்பிரதேச செயலர் தலைமையிலான மதிப்பீட்டுக் குழுவினர் சேதங்களை மதிப்பீடு செய்து வருவதாகவும், மதிப்பீட்டு பணிகள் நிறைவடைந்ததும் ஏனைய இழப்பீடுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

---



## கற்றல் உபகரணங்கல் வழங்கல்

சாவகச்சேரி,டிசெ.27
நத்தார் பண்டிகையை முன்னிட்டு சாவகச்சேரி ரீ.பீ. ஹன்ட் ஓவியக் கலைக்கூடத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 33 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை நேற்றுமுன்தினம் வழங்கிவைத்தனர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் எட்டு மாணவர்களுக்கும், மிருசுவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலயம், வரணி வடக்கு அ.த.க.பாடசாலை ஆகியவற்றில் தலா 5 மாணவர்களுக்கும் சாவகச்சேரி ரீ.பீ.ஹன்ட் நினைவு முன்பள்ளி ஆகியவற்றில் கற்கும் சிறார்களுக்கும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் ஓவியக்கூட வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயற்படும் அலுவலர்களுக்கும் கிறிஸ்மஸ் பரிசுகள் வழங்கப்பட்டன. திருக்கோவில் கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் து.சிறிதரன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். (ஐ-9)

---

## சேவை நலன் பாராட்டு

யாழ்ப்பாணம், டிசெ.27
யாழ்ப்பாண சுகாதாரத் திணைக்களப் பயிற்சி பாடசாலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பயிற்சி வகுப்புக்களில் போதனாசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் கந்தையா தெய்வேந்திரத்துக்குப் பயிற்சி பெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதர்களால் சேவை நலன் பாராட்டு நிகழ்வு அண்மையில் பயிற்சி மையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பிராந்திய சேவைகள் பணிப்பாளர், பிராந்திய பயிற்சி நிலையப் பணிப்பாளர், அகில இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர், பொதுச்சுகாதாரப்பயிற்சி பாடசாலை அதிபர், பயிற்சி நிலையப் போதனாசிரியர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-9)

---

## உடல், உள ஆரோக்கியம் தொடர்பில் பரிசோதனை

கொடிகாமம்,டிசெ.27
சாவகச்சேரிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு 'உடல் உள ஆரோக்கியத்தைப் பாதிக்கும் உடற் பருமன்' எனும் தொனிப் பொருளில் மக்களுக்கான இலவச சேவைகள் வழங்கப்பட்டன.

கொடிகாமம் பேருந்து தரிப்பு நிலையத்துக்கு முன்பாக உள்ள பழைய பிரதேச சபை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் மருத்துவக் கலாநிதி திருமதி சியாமளா துரைரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக கொடிகாமம் கிராமிய சித்த மருத்துவமனை மருத்துவ பொறுப்பதிகாரி மருத்துவக் கலாநிதி திருமதி கனகேஸ்வரி ஜெபநாமகணேசன், சாவகச்சேரிப் பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போதுஉடல் எடை, உயரம் அளவிடப்பட்டு ஆலோசனை வழங்கப்பட்டது. ஆரோக்கிய உடற்பயிற்சி 8 நடை தொடர்பான விளக்கம், உடற் பருமனைக் குறைப்பதற்குரிய யோகாசனப் பயிற்சி மற்றும் குருதி அமுக்கம், நீரிழிவு போன்ற நோய்கள் தொடர்பான் அறிவுரைகளும் வழங்கப்பட்டன. இந்த இலவச சேவையில் கலந்து கொண்ட அனைவருக்கும் இலைக்கஞ்சியும், மூலிகை கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஐ-159)



வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலக கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு மாதகல் பகுதியில் அண்மையில் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன் மற்றும் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.மு.சுலோச்சனா, உதவி மாவட்டச் செயலர், பிரதேச செயலர், உதவித் திட்டப் பணிப்பாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ- 7)

# யாழ்.மாநகரில் இன்றும், நாளையும் டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ. 27

**யாழ்ப்பாணம் மாநகரப் பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இன்றும்,நாளையும் இடம்பெறும் என்று மாநகர் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கடந்த சில நாள்களாக பெய்துவரும் மழையை அடுத்து டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.**

இன்று வியாழக்கிழமை நாவாந்துறைப் பிரதேசத்தில் ஜே/86,ஜே/84,ஜே/83 ஆகிய கிராம அலுவலகர் பிரிவு மற்றும் யாழ்ப்பாண நகரை அண்டிய ஜே 76,ஜே 78 ஆகிய கிராம அலுவலகர் பிரிவுகளிலும் இந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை இடம்பெறும்.

நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேசத்தில் ஜே 105,ஜே/108 ஆகிய கிராம அலுவலகர் பிரிவு, அரியாலையில் ஜே/92 கிராம அலுவலகர் பிரிவு,



வண்ணார்பண்ணையில் ஜே/100,101 ஆகிய கிராம அலுவலகர் பிரிவுகளிலும் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

இந்த இருநாள்களும் டெங்கின் தாக்கம் காணப்படும் இடங்களில் உள்ள சகல குடியிருப்பாளர்களின் சுற்றாடல்களும் சோதனை செய்யப்பட உள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணம் மாநகர பிரதேசத்தில் இந்த மாதத்தில் நேற்று வரை 70 பேர் வரையில் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெங்கின் தாக்கம் காணப்படும் இடங்களில் அதற்கான கட்டுப்பாட்டு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக மாநகர சுகாதாரப்பிரிவு தெரிவித்தது. (ஐ-17)

## நத்தார் கரோல் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.27

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நத்தார் கரோல் நிகழ்வு யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாண பாதுகாப்புப் படைக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் வழிகாட்டலுக்கு அமைவாக 523 படை பிரிவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சாவகச்சேரி புனித அந்தோனியார் தேவாலய பாடகர் குழு வினரைச் சேர்ந்த மாணவர்கள் 142 பேருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஐ)

## கிராமியக் கலைகளின் சங்கமம்

யாழ்ப்பாணம், டிசெ.27

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிராமியக் கலைகளின் சங்கம முன்னோடி நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நாளைமறுதினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வானது இந்து கலாசார திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமை இரண்டு அமர்வுகளாக நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நாடகமும் அரங்கியலும் துறை மூத்த விரிவுரையாளார் கலாநிதி க. சிதம்பரநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

## உணவகம், பலசரக்குக் கடைகளின் உரிமையாளருக்கு எதிராக வழக்கு

கொடிகாமம், டிசெ.27

கொடிகாமம் நகரப்பகுதியில் பொது சுகாதாரப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது உணவகம் ஒன்றும், பலசரக்குக் கடைகள் 3 க்கும் எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டன.

சாவகச்சேரி சுகாதர திணைக்களம் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் நேற்று கொடிகாமம் நகரப் பகுதியில் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இதன்போது சுகாதார சீர்கேடான முறையில் உணவு தயாரித்தார் என்று உணவக உரிமையாளர் ஒருவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன் காலாவதியான கேக், பிஸ்கட், மென்பானப் பைக்கட்டுகள், குடிதண்ணீர்ப் போத்தல்கள் போன்றவற்றை விற்பனைக்காக வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 3 பலசரக்குக் கடை உரிமையாளர்களுக்கு எதிராகவும் வழக்குத் தொடுக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் பொதுச் சந்தையில் உள்ள கடலுணவு, இறைச்சி, மரக்கறி, பழவகைகள் ஆகிய இடங்களில் பரிசோதனைகளை மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது பழுதடைந்த புழுக்களுடன் காணப்பட்ட பழவகைகள், பீடைகொல்லி மருந்து மணத்துடனான மரக்கறி வகைகள், சுட்டுத்துண்டு குறியீடுகள் காணப்படாத குடிநீர் வகைகள், காலாவதியான அப்பளம், மிக்சர் பைக்கட்டுக்கள் போன்றவற்றைக் கைப்பற்றியிருந்தனர். இவ்வாறான பொருள்களை வைத்திருந்த வியாபாரிகள் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ-9)

## சீருடைக்கான வவுச்சர்களை 30ஆம் திகதிவரை பெறமுடியும்

கொடிகாமம், டிசெ.27

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் இதுவரை சீருடைக்கான வவுச்சர்களைப் பெற்றுக்கொள்ளாவிடின் எதிர்வரும் 30ஆம் திகதி பாடசாலையில் பெற்றுக் கொள்ளமுடியும் என்று அதிபர் அறிவித்துள்ளார். அன்றைய தினம் காலை 8.30 மணியிலிருந்து முற்பகல் 10.30 மணிவரை சீருடைக்கான வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன. சீருடைக்கான வவுச்சர்கள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் வழங்கப்படுகின்றன. (ஐ-159)

## வவுச்சர்களுடன் வர்த்தக நிலையங்களில் முண்டியடிக்கும் மக்கள்

சாவகச்சேரி, டிசெ.27

மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் வவுச்சர்களுக்குச் சீருடைத் துணிகள் மற்றும் காலணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக வர்த்தக நிலையங்களில் மக்கள் வெள்ளம் அலை மோதுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

வவுச்சர்களுக்கான கொள்வனவுகளை மேற்கொள்ள இறுதிநாள் பெப்ரவரி 28ஆம் திகதி என்று கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதால் சீருடைத் துணிகள் மற்றும் காலணிகளை வாங்குவதற்கு அவசரப்படவேண்டாமென வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் உள்ள அனைத்துக் கிராமப்புறப் பாடசாலைகளிலும் சீருடைக்கான வவுச்சருடன், காலணிக்கான வவுச்சர்களும் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுவருகின்றன. (ஐ-9)

## கலந்துரையாடல்

தென்மராட்சி, டிசெ.27

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும்.

2019 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுக்களை நடத்துவதற்கான முன்னாயத்தம் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது.

மாகாண விளையாட்டுத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களே விளையாட்டில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

இதுவரை பதிவு செய்யப்படாத விளையாட்டு கழகங்கள் இன்று பதிவு செய்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறும் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு அறிவித்துள்ளார்.

விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோருடன் மகளிர் பிரதிநிதி ஒருவரும் இந்தக் கலந்துரையாடலுக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள கழக உறுப்பினர்களான வீர, வீராங்கனைகளின் பெயர்ப்பட்டியலை எதிர்வரும் 31ஆம் திகதி பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)





வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று மாணியவளை அம்மன் ஆலயத்தின் திருத்த வேலைகளுக்காக 52 பைக்கற் சிமெந்துகள் ஆலய நிர்வாகத்தினரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் மூலமாக மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தனால் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-70)

# சாவ. பிரதேச சபையின் பாதீடு நிறைவேற்றம்

**யாழ்ப்பாணம், டிசெ.27**
**சாவகச்சேரி பிரதேசசபையின் 2019 ஆம் ஆண்டுக்கானபாதீடு 17 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது என்று தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.**


சாவகச்சேரிப் பிரதேசசபை சபா மண்டபத்தில்கடந்ததிங்கட்கிழமைபாதீடுசமர்பிக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டமை தொடர்பில் சில உறுப்பினர்கள் வாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.
ஏனைய உறுப்பினர்களின் வேண்டுகோளுக்குஅமையபாதீடுதொடர்பானவாக்கெடுப்பு இடம்பெற்றது.
உறுப்பினர்கள் 31பேரில் பாதீட்டுக்கு ஆரவாக 22 உறுப்பினர்கள் வாக்களிதனர். பாதீட்டு எதிராக 5 உறுப்பினர்களும், நடுநிலைமை 2 உறுப்பினர்கள் வகித்ததுடன், இருவர் சபை அமர்வுக்கு சமூகமளிக்கவில்லை.
பாதீடுநிறைவேற்றப்பட்டதையடுத்து தவிசாளர் கருத்து தெரிவிக்கையில்:
"2019 ஆம் ஆண்டு ஆகக் குறைந்தது 200வீதிகளையாவது சீரமைக்கவேண்டும்.
அதற்கு ஒவ்வொரு உறுப்பினர்களின் பங்களிப்பும் தேவை மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்" - என்றார். (ஐ-159,9)

## இளைஞனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.27
போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிமன்றால் உத்தரவிடப்பட்டுள்ளது.
6 கிராமும் 106 மில்லி கிராம் போதைப் பொருளைத் தன்வசம் வைத்திருந்தபோதே சிறப்பு அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.
யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் வைத்து சந்தேகநபரை கடந்த திங்கட்கிழமை மாலை சிறப்பு அதிரடிப் படையினர் கைதுசெய்தனர்.
கிளிநொச்சி- கனகாம்பிகைகுளம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடமிருந்து 6 கிராம் 106 மில்லி கிராம் போதைப்பொருளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தியபோது நீதிவான் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஐ-106)

## தவிசாளரின் அனுமதியின்றி அறிக்கைகள் பெறமுடியாது

கொடிகாமம், டிசெ.27
சுற்றறிக்கையின் பிரகாரம் எந்தவித காரணம் கொண்டும் சபையின் தவிசாளரைத் தவிர ஏனையோருக்கு எந்தவித அறிக்கையும் வழங்கப்படமாட்டாது என்று சாவகச்சேரி பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார்.
சபை அறிக்கை தேவையாயின் சபையின் தவிசாளருடன், எழுத்து மூலமாகத் தொடர்புகொண்டு அவர் மூலம் அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என அரசினால் அறிவிக்கப்பட்ட நிலையில், சில சபைகளின் உறுப்பினர்கள் சபைகளின் செயலர் மற்றும் அதிகாரிகளை அச்சுறுத்தி அறிக்கைபெறமுயல்கின்றனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.
உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் கடமையாற்றும் செயலர் உட்பட எந்தவொரு உறுப்பினர்களும் தமது அதிகாரத்தை முறைகேடு செய்யும் வகையில் அறிக்கைகள் பெற முயற்சிக்கக் கூடாது என அரசினால் அறிவிக்கப்பட்டிருந்தது.
இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையில் நடைபெற்ற சிறப்பு அமர்வில் இதுதொடர்பில் உறுப்பினர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ஐ-159,9)



சுன்னாகம் மத்திய சந்தைப்பகுதியில் வெற்றிலை, பாக்குவியாபாரநிலையத்துக்கு முன்பாகவுள்ள வாய்க்கால் பகுதியில் அகற்றப்படாதுதேங்கிக்காணப்படும்கழிவுகளால்துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர். இதனால்இப்பகுதி சுகாதாரச் சீர்கேடாகக் காணப்படுவதுடன் சந்தைக்குவரும் மக்கள் மூக்கை பொத்தியபடியே பயணிக்கின்றனர். எனவே இதுதொடர்பில்சம்மந்தப்பட்ட அதிகாரிகள்நடவடிக்கைஎடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-36)

## மெய்வன்மைப் போட்டி

சுன்னாகம்,டிசெ.27
சுன்னாகம் ஜனசக்தி சனசமூக நிலையத்தினரின் இந்த வருடத்துக்கான 52 ஆவது மெய்வன்மைப்போட்டி நிலைய முன்றிலில் நாளை மறுதினம் சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு தலைவர் அ.சந்திரகுமார் தலைமையில் இடம்பெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி. தெற்குப் பிரதேச சபைத் தவிசாளர் க.தர்சன், சிறப்புவிருந்தினராகவலி.தெற்குப்பிரதேச செயலகநிர்வாககிராம அலுவலர்சே.சிறிஸ்கந்தராசா, வலி.தெற்கு உடுவில் பொது நூலக அலுவலகர் திருமதி மலர்மகள் தயாபரன், சுன்னாகம் மயிலணி சைவமகாவித்தியாலய அதிபர் திருமதி றிசா தனஞ்செயன், சுன்னாகம் மயிலணி வித்தியாலய அதிபர், சமாதான நீதிவான் ராமதாஸ், சுன்னாக நகர் வடக்கு கிராம அலுவலகர் ம.கபிலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

## கிராம சக்தி வேலைத்திட்டம் மாந்தை கிழக்கில் ஆரம்பம்

மாந்தை, டிசெ.27
அரச தலைவரின் எண்ணக்கருவில் உருவான ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் மில்லியன் ரூபா கிராம சக்தி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர்பிரிவில்மூன்றுகிராமஅலுவலர்பிரிவில்கிராமசக்தி வேலைத்திட்டங்கள் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் பால் சேகரிப்புநிலையம் அமைப்பதற்கெனகரும்புள்ளியான்கிராமஅலுவலர்பிரிவில் பதில் முதன்மை முகாமைத்துவ உதவியாளரும், பொன்னகர் கிராம அலுவலர் பிரிவில் குழாய்க் கிணறு அமைக்கும் பணியை பதில் உதவித் திட்டமிடல் பணிப்பாளரும், விநாயகபுரம் கிராம அலுவலர் பிரிவில் வயல் வீதி சீரமைப்புக்கான பணியை பிரதேசசெயலரும்ஆரம்பித்துவைத்தனர்என்று பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம் தெரிவித்தார். (ஐ-9)



## குளிக்க சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம்.டிசெ.27
குளத்தில் குளிக்கச் சென்றவர் மறுநாள் காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணம் மணியம் தோட்டம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
அதேபகுதியைச்சேர்ந்த 3பிள்ளைகளின்தந்தையானராசன்குலேன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நத்தார் தினமாகிய நேற்றுமுன்தினம் மாலை மணியம் தோட்டம் பகுதியில்உள்ளகுளத்தில்குளிக்கச் சென்றுள்ளார்.
நேரமாகியும் வீடு திரும்பா ததையடுத்துஉறவினர்கள்இவரைத்தேடியுள்ளனர்.
அதன் பின்னர் நேற்றுக் காலை. குளத்தில் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தை மீட்டனர்.
சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணபோதனாமருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். இந்த இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ் போதனா வைத்தியசாலையின் தீடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ஐ.8,106)

## திருவாசக முற்றோதல்

வவுனியா.டிசெ.27
திருவாசக முற்றோதல் நிகழ்வு வவுனியா மகம் திருக்கோவிலில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறும்.
வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் அறங்காவலர்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் உள்ள திருத் தலங்களில் திருவாசக முற்றோதல்கள் நடைபெற்று வருகின்றன. (ஐ)

## இதயநிறைவு தியானப் பயிற்சி

அளவெட்டி,டிசெ.27
இளையோருக்கான இதயநிறைவு தியானப் பயிற்சி உடுவில் பிரதேச செயலகத்தில் நாளைமறுதினம்காலை.8.30மணிதொடக்கம் மாலை 4.30மணிவரை நடைபெறும் எனவே இந்தப் பயிற்சியில் இளையோர்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயனடையுமாறு யாழ்ப்பாணம் இதயநிறைவுதியானப் பயிற்சி இயக்க ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டது. இந்தப்பயிற்சியில்பங்குபெறவிரும்புவோர் 0777253338 என்ற அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டுபதிவுகளை மேற்கொள்ளமுடியும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது. (ஐ-36)



முல்லைத்தீவு மாவட்டச் செயலர் வெற்றிக் கிண்ணத்துக்கான சதுரங்கப் போட்டிகளில்மாந்தைகிழக்குப்பிரதேசசெயலகஆண்கள்அணிமுதலாம் இடத்தையும், பெண்கள் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர் என்று பிரதேச செயலர் ரஞ்சனா நவரத்தினம் தெரிவித்தார். (ஐ-9)





# பூநகரியின் ஒரு பகுதிக்கான போக்குவரத்து முற்றாகத் தடை

கிளிநொச்சி, டிசெ.27
வெள்ள இடர் காரணமாகப் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த கிராஞ்சி. வலைப்பாடு, பல்லவராயன்கட்டு, பாலாவி, பொன்னாவெளி ஆகிய கிராமங்களுக்கான முதன்மை வீதியை வெள்ள நீர் மேவிப்பாய்கின்றமையால் அந்தப் பகுதிக்கான போக்குவரத்து முற்று முழுதாகத் தடைப்பட்டுள்ளது.

இடர் நிலைமையை அறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அந்தப் பகுதிக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்த்து மக்களுடன் கலந்துரையாடியதுடன், மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக உரிய அதிகாரிகளுடனும் தொடர்புகொண்டு அவர்களை விரைந்து செயற்படுமாறும் கேட்டிருந்தார்.
வடபகுதியில் பெய்து வரும் கனமழை வெள்ளப்பெருக்குக் காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளைச் சேர்ந்தமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளதுடன். மழை இடையிடையே தொடர்ந்து பெய்த வண்ணமுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (426)

## ‘உதவு இதயங்கள்’ நிறுவனத்தினால் வெள்ள இடர் உதவி வழங்கல்



கொடிகாமம், டிசெ. 27
ஜேர்மனியில் இயங்கும் 'உதவும் இதயங்கள்' நிறுவனத்தின் ஊடாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பொது இடங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உடனடித் தேவையான உலர் உணவுப் பொருள்களை வழங்கினர்.
ஜேர்மனி கைல்புறோன், கந்தசுவாமி கோயில் பக்தர்கள் மற்றும் நிர்வாகத்தி னரின் நிதியுதவியுடன் மாங்குளம் துணுக்காய் வீதியில் அமைந்திருக்கும் செல்வராணி மாவீரர் குடியேற்றத் திட்டத்தில் வாழும் 35 குடும்பங்களுக்கும், திருமுறிகண்டி இந்துபுரம் பொது மண்டபத்தில் தங்கியுள்ள 25 குடும்பங்களுக்கும் 88 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை வழங்கினர். (159)

## பாதிக்கப்பட்டோருக்கு உலருணவு வழங்கல்

கொடிகாமம், டிசெ.27
வெள்ள இடரினால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்கியுள்ள வன்னி மக்களுக்கு, வரணி பிரதேசத்திலிருந்து பிரதேச சபை உறுப்பினர் சி. பிரபாகரன் தலைமையில் ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.
கண்டாவளைப் பெரியகுளம் பொதுநோக்கு மண்டபத்தில் தங்கியுள்ள 85 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப்பொருள்கள், மற்றும் சிறுவர்களுக்கான சத்துணவுகள், காய்ச்சல், தடிமன் போன்றவற்றுக்கு உபயோகிக்கும் மருந்துப் பொருள்கள், நுளம்புச்சுருள் பெட்டிகள் உள்ளிட்ட பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டன. (159)



## கனகரத்தினபுரம் மக்களுக்கு வெள்ள உதவி வழங்கல்



முல்லைத்தீவு, டிசெ.27
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கனகரத்தினபுரம் கிராம மக்களுக்கு நேற்று முன்தினம் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 110 குடும்பங்களைச் சேர்ந்த 411 பேருக்கே உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. ஐயை, உலகத் தமிழ் மகளிர் குழுமம், ஏ.எஸ்.என் கல்விநிலைய மாணவர் குழுமக் கழகம் ஆகியன இணைந்து இந்த உதவிப் பொருள்களைப் பாதிக்கப்பட்ட மக்களிடம் கையளித்தனர். (222)

## பாதிக்கப்பட்டோருக்கு தேசிய சேமிப்பு வங்கியால் உதவி



கொடிகாமம், டிசெ.27
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, நலன்புரி நிலையத்தில் தங்கி இருப்பவர்களுக்கு வழங்குவதற்காகத் தேசிய சேமிப்பு வங்கியின் வடபிராந்திய பணியாளர்களின் பங்களிப்புடன் திரட்டப்பட்ட ஒரு தொகுதிப் பொருள்கள் முல்லை மாவட்ட செயலரிடம் கையளிக்கப்பட்டன.
பால்மா பைக்கற்றுகள், குடிதண்ணீர் போத்தல்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள்,நெத்தலியாறு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் வைத்து முல்லை மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் புதுக்குடியிருப்புப்பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோரிடம் கையளித்தனர். (159)

வவுனியாவில்

## ஆறாயிரத்து 529 ஏக்கர் நிலத்தில் இந்த ஆண்டு சிறுபோகச் செய்கை

*நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.சுகந்தலிங்கம் தெரிவிப்பு*



வவுனியா, டிசெ.27
மத்திய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வவுனியாவில் ஆறாயிரத்து 529 ஏக்கரில் நெல் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரி.சுகந்தலிங்கம் தெரிவித்தார்.
வவுனியா மாவட்டத்தில் மத்திய அரசின் கீழ் உள்ள நீர்பாசனக்குளங்களின் கீழ், செய்கை பண்ணப்படும் நெற்பயிர்ச் செய்கை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வவுனியா மாவட்டத்தில் மத்திய நீர்ப் பாசனத் திணைக்களத்தின் பராமரிப்பில் காணப்படும் பாவற்குளத்தின் கீழ் நான்காயிரத்து 134 ஏக்கர், முகத்தான் குளத்தின் கீழ் 845 ஏக்கர், மருதமடுக் குளத்தின் கீழ் 438 ஏக்கர், ஈரப்பெரியகுளத்தின் கீழ் 617 ஏக்கர், இராசேந்திரங்குளத்தின் கீழ் 295 ஏக்கர், கல்லாறு அணைக்கட்டின் கீழ் 200 ஏக்கர் என ஆறாயிரத்து 529 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த முறை பெரும்போக நெற்பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
கடந்த சில நாள்களாக வவுனியாவில் மழையுடன் கூடிய காலநிலை காணப்பட்டமையால் ஈரப்பெரியகுளம், முகத்தான்குளம், மருதமடுக்குளம் ஆகிய குளங்கள் வான் பாய்ந்த போதும், வயல் நிலங்களுக்கு எந்தப்பாதிப்பும் ஏற்படவில்லை.
அத்துடன் நீர்வரத்து அதிகரித்துள்ளமையால் எதிர்வரும் காலத்திலும் இந்தக் குளங்களின் கீழ் சிறுபோக நெற்செய்கையும் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார். (110)



## பாடசாலையில் தங்கியுள்ள மக்களுக்கு உதவி வழங்கல்


கிளிநொச்சி, டிசெ.27
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் புளியம்பொக்கணை நாகேந்திரபுரத்தைச் சேர்ந்த 160இற்கு மேற்பட்ட குடும்பங்கள் நாகேந்திரபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
இவர்களுக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.
புலம்பெயர் சமூகத்தின் நிதி உதவியுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்படுகின்றன. (ரி3)

# மாவீரரின் பெற்றோர்கள் யாசகம் எடுக்கும் நிலை

## கண்டும் காணாமல் இருக்கும் சமூகத்தலைமைகள்

மன்னார், டிசெ.27

**தமிழ் மக்களின் வரலாற்றில் முக்கிய இடம்பிடித்த ஆயுதப்போராட்டத்துக்கு, பெரும் பங்காற்றி உயிரிழந்த மாவீரர்களின் பெற்றோர் மன்னாரப் பகுதியில் யாசகம் எடுப்பது கண்டறியப்பட்டுள்ளது.**



2009ஆம் ஆண்டின் போரின் பின் இலங்கையின் வடக்கில் வன்னி உட்டபட்ட மாவட்டங்களில் போரால் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ளனர்.
போருக்குப் பெரும் பங்களிப்புச் செய்த குடும்பத்தின் முதியவர்கள் தற்போது வீதியில் யாசகம் எடுப்பது தெரியவந்துள்ளது.
முல்லைத்தீவைச்சேர்ந்த வயோதிபத் தம்பதியினர், மன்னாரில் அதிக மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் யாசகத்தில் ஈடுபட்டவேளை சமூக ஆர்வலர்களால் இனம்காணப்பட்டுள்ளனர்.
ஒரு பிள்ளையை விடுதலைப் போராட்டத்தில் மாவீரராகவும் இன்னொரு பிள்ளையைப் போரின்போது எறிகணைத்தாக்குதலிலும் இழந்து கைவிடப்பட்ட நிலையில் இந்த முதிய தம்பதியினர் உணவுக்காக யாசகம் எடுப்பதில் ஈடுபட்டுள்ளனர்.
பலவிதமான நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகி சரியான சிகிச்சைகள் பெற்றுக்கொள்ளாமலும் இவர்கள் இருவரும் நடமாடுவது அவதானிக்கப்பட்டுள்ளது. (56)

## புதுக்காட்டு மக்களுக்கு இளையோரால் உதவி




கிளிநொச்சி,டிசெ.27
வெள்ள இடரால் தமது அன்றாடம் கூலித்தொழில் பாதிப்படைந்த வட்டக்கச்சி புதுக்காடு பகுதி மக்கள் ஒரு தொகுதியினருக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.
வி3 யின் யாழ்ப்பாண இணைப்பாளர் மென்பொறியியலாளர் சண்முகநாதன் சஞ்சேய் அங்குள்ள இளைஞர்களின் வேண்டுதலின் பேரில், நேரில் சென்று பார்வையிட்டு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான 30 உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (222)



## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கிய ஆளுநர்

முல்லைத்தீவு, டிசெ.27
வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை நேரடியாகச் சென்று பார்வையிட்ட வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே மக்களின் உடனடித் தேவைகளுக்கான உதவிப் பொருள்களையும் வழங்கி வைத்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், பேராறு, பன்னங்கண்டி, சுதந்திரபுரம், மாணிக்கபுரம் பகுதிகளில் அமைந்துள்ள முகாங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை, தர்மபுரம், முரசுமோட்டை, பரந்தன், ஆனந்தபுரம், முறிகண்டி உள்ளிட்ட பகுதிகளில் அமைந்துள்ள முகாங்களையும் ஆளுநர் அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டுப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கினார். (222)



வடமாகாண சபையினால் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சீரமைப்புச் செய்யப்பட்ட வலைப்பாடு செல்லும் பிரதான வீதி அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரால் 5 கிலோமீற்றருக்கும் அதிகமான தூரம் தண்ணீல் மூழ்கியுள்ளது.



## விழிப்புணர்வுக் கூட்டம்

முல்லைத்தீவு, டிசெ.27
இயற்கை இடர் ஏற்படும்போது நம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.
நேற்றுத் தேசிய பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், மாவட்ட செயலக அரச அதிகாரிககள், பிரதேச செயலர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள், மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தினர் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். இடர் ஏற்படின் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரனால் விளக்கமளிக்கப்பட்டது. (ரி3)

## இயற்கை இடரால் முல்லைத்தீவில் 865 வீடுகள் சேதம்

முல்லைத்தீவு,டிசெ.27
கடந்த நான்கு நாட்களாக பெய்த மழைவெள்ளம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 801 வீடுகள் பகுதியளவிலும், 64 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.
முல்லைத்தீவுமாவட்டத்தில் 8ஆயிரத்து 25 குடும்பங்களைச் சேர்ந்த 25 ஆயிரத்து 889 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இவர்களில் ஆயிரத்து 625 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 108 மக்கள் 9 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ரி3)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

முல்லைத்தீவு,டிசெ.27
முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தங்கியிருந்த இடைத்தங்கல் முகாம்களை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டதுடன் அவர்களுக்கு உத விப் பொருள்களையும் வழங்கிவைத்திருந்தார்.
பிரான்சில் இயங்கும் ரீ.ஆர்.ரீ சமூகப் பணிக் குழுவினரின் பங்களிப்புடன் முல்லைத்தீவில் ஐந்து முகாம்களில் தங்கியுள்ள 464 குடும்பங்களுக்கு நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை வழங்கிவைத்தார். (110)









கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிப்படைந்த 2ஆயிரத்து 968 பொது மக்களுக்கும் மேலானவர்களை ,15 ஆவது சிங்கப் படையணியைச் சேர்ந்த 230 இராணுவத்தினரின் பங்களிப்புடன் இடர்ப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு மாவட்டங்களிலும் 600க்கும் மேற்பட்ட படையினர் மீட்புப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.



## கற்றல் உபகரணம் வழங்கல்

வவுனியா.டிசெ.27
கிறிஸ்மஸ் நாளில் வவுனியா பொது உளநல பயனாளிகளின் பிள்ளைகள் 30 பேருக்கு ஒன்னூர் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
இங்கிலாந்தில் வசிக்கும் நிலானி கணேஸ்வரனின் தந்தை அமரர் இராஜரட்ணம் நவரட்ணத்தின் 35 ஆவது ஆண்டு நினைவாக கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (222)




வவுனியா,டிசெ.27
எம்.ஏ.ரேட் மொழிபெயர்ப்பகத்தின் அனுசரணையுடன் வறிய நிலையில் உள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
பிரான்ஸ் நாட்டில் வசித்து வந்தவர் அமரர் கிருஷ்ணமூர்த்தி கனகலட்சுமியின் 10 ஆவது ஆண்டு நினைவு தினத்தினை முன்னிட்டு வவுனியா வேப்பங்குளம் குகன் நகர் கிராம மாணவர்களுக்கு நேற்று இந்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. .(222)




## ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நிகழ்வு

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 15ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுநேற்று முன்தினம் மூங்கிலாறு பகுதியில் அமைந்துள்ள மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.
நிகழ்வில் பொதுச்சுடரினை புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஆ.ஜோன்சன் ஏற்றிவைக்க அகவணக்கத்தினை தொடர்ந்து பிரதேச மக்களால் மலர் வணக்கம் செலுத்தி நினைவிற்கொண்டுள்ளார்கள்.
இந்த நிகழ்வில் நினைவுரையினை பிரதேச சபை உறுப்பினர் ஆ.ஜோன்சன் வழங்கினார். (ரி3)

# மாந்தை ஆட்காட்டிவெளியில் இயேசு சொரூபம் உடைப்பு







மன்னார், டிசெ.27
மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆட்காட்டிவெளி பரப்புக்கடந்தான் முதன்மை வீதியில் அமைக்கப்பட்டிருந்த 40 வருடங்கள் பழமை வாய்ந்ததும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான புனித கர்த்தரின் சொரூபம் நேற்று முன்தினம் நள்ளிரவு இனம் தெரியாத நபர்களினால் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு குறித்த வீதியூடாகக் கரோல் நிகழ்வில் கலந்து கொண்டு விட்டு, மீண்டும் குறித்த வீதியூடாகப் பங்கு மக்கள் சென்று கொண்டிருந்த போதே சொரூபம் உடைக்கப்பட்டதைக் கண்ட மக்கள் ஆக்காட்டிவெளி பங்குத்தந்தை ச.சத்தியராஜ் அடிகளாரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்ற பங்குத்தந்தை நிலமையைப் பார்வையிட்டதோடு, மன்னார் ஆயர் இல்லத்துக்குத் தெரியப்படுத்தி, அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.
இந்த நிலையில் நேற்று புதன்கிழமை காலை சம்பவ இடத்துக்கு வந்த அடம்பன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், சிறப்புதடயவியல் நிபுணத்துவப் பொலிஸார் தடையங்களைப் பெற்றுக்கொண்டனர்.
இந்தச் சம்பவம் அந்தப் பகுதி மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனப் பிரதேச மக்களும் கத்தோலிக்க சமூகத்தினரும் கோரிக்கை விடுத்துள் ளனர். சிலை உடைக்கப்பட்ட பின் நிலமையை நேரில் சென்று பார்வையிட்ட மாந்தை மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர் செல்லத்தம்பு சந்தியோகு கருத்து தெரிவிக்கையில் "மனிதர்களின் முரண்பாடுகளுக்கு தெய்வச் சிலைகளை உடைப்பது ஏற்கமுடியாதது. ஒரு சமூகத்தில் அனைவரும் இவ்வாறான செயலை செய்யமாட்டார்கள். மனிதர்களின் முன்னேற்றத்தையும் மத.நல்லிணக்கத்தையும் விரும்பாதவர்களே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று தெரிவித்த அவர் இந்த செயலை எவர் செய்திருந்தாலும் அது கண்டிக்கத்தக்கது" - என்று தெரிவித்தார்.
(56, 213)

### நாற்சதுர சுவிசேச சபையின் நத்தார்தின ஆராதனை நிகழ்வு

வவுனியா.டிசெ.27
வவுனியா மன்னார் வீதியில்அமைந்துள்ள நாற்சதுர சுவிசேசக சபையின் நத்தார்தின ஆராதனை நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் ஆலயத்தின் தலைமை போதகர் பி.என். சேகர் தலைமையில் இடம்பெற்றது.
நிகழ்வில் யேசு கிறிஸ்துவின் பிறப்பின் நோக்கம் குறித்தும் அவரது இரண்டாம் வருகை குறித்தும் தெரிவிக்கப்பட்டதுடன், எதிர்வரும் வரும் ஆண்டில் நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலவுவதற்காக பிரார்த்திக்கபட்டது.
நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான கிறிஸ்தவ மக்கள் கலந்துகொண்டு ஆராதனையில் ஈடுபட்டிருந்தனர். (110)





## மாடுகளை வெட்டி காயப்படுத்தும் இனந்தெரியாத நபர்கள்

வவுனியா.டிசெ.27
வவுனியாசெட்டிகுளம் காந்தி நகர் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இனம்தெரியாத நபர்களினால் மாடுகள் வெட்டி காயப்படுத்தப்பட்டுள்ளன.
இதனைத் தொடர்ந்து நேற்றும் இவ்வாறான சம்பவம் அதே கிராமத்தில் நடைபெற்றுள்ளது. கால்நடை உரிமையாளர்கள் இது தொடர்பாக தெரிவிக்கையில். இரண்டு நாள்களாக இவ்வாறு எமது மாடுகள் கொடூரமான முறையில் வெட்டி காயப்படுத்தப்பட்டுள்ளன.
ஐந்தறிவு கொண்ட கால்நடை ஒன்றை வெட்டுவது இரக்கமற்ற செயற்பாடாகும் என்று தெரிவித்து கவலையடைந்தனர். அத்துடன் இது தொடர்பாக கிராம அபிவிருத்தி சங்கத்தினரிடம் முறையிடப்பட்டுள்ளது. (222)






## வயோதிபர் காப்பகத்துக்கு தொலைக்காட்சி வழங்கல்

வவுனியா,டிசெ.27
வவுனியா மாணிக்கபுரத்தில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் காப்பகத்துக்கு நேற்றுத் தொலைக்காட்சி மற்றும் டிஸ் அன்டனா என்பன வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பினருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக லண்டனின் புலம்பெயர்ந்து வசித்து வரும் முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த சகோதரர்களினால்,தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் எஸ். சந்திரகுமாரினால் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (111)

# படையினரின் நத்தார் கொண்டாட்டங்கள்

முல்லைத்தீவு.டிசெ.27
முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள படையினர் நத்தார் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.
படை முகாம்களிலும், படைத் தலைமையகம் அமைந்துள்ள கேப்பாபுலவிலும், முகாம்களின் முன்பாக பாலன் பிறப்பினை எடுத்துக்காட்டும் அலங்காரங்கள், மின்விளக்குகள் என்பன படையினரால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள இனியவாழ்வு இல்லத்தில் கல்விகற்கும் மாற்று வலுவுடைய மாணவர்



களை மகிழ்விக்கும் நோக்கில் படையினரின் நத்தார் நிகழ்வு ஒன்றும் நடைபெற்றுள்ளது.
முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையக கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் துஸ்யந்த ராஜகுரு வின் வழிகாட்டலுக்கு அமைவாக பிரிகேடியர் கிரிதிகொஸ்தாவினால் இந்த நத்தார் கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.
இனியவாழ்வு இல்லத்தில் கல்விகற்று வரும் 52 மாணவர்களுக்கு இரவு உணவும், அவர்களின் கற்றல் செயற்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக சில பரிசுப் பொருள்களும் படையினரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன், படையினரின் இன்னிசை நிகழ்வு இடம்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது. (ரி3)

# செவிவழி நிலவி வந்த கதை நிஜமானது சிங்கராச வனத்துக்குள் சிவன் ஆலயம்!

இரத்தினபுரி, டிசெ.27

**இரத்தினபுரியில் இருந்து 53 கிலோமீற்றர்கள் தொலைவிலுள்ளஇறக்குவானைக்கிராமத்தைச்சூழ்ந்துள்ளசிங்கராச வனத்துக்குள் கி.பி.1800ஆண்டுகள் பழமையானது என்று கருதப்படத்தக்கசிவன் ஆலயம்ஒன்றுகண்டுபிடிக்கப்பட்டது.**



இந்தப் பகுதியைச் சூழ்ந்துள்ள சிங்கராச வனத்துக்குள் அதி சக்தி வாய்ந்த சிவன் ஆலயம் ஒன்று இருப்பதாகப் பல நூற்றாண்டுகளாகவே அந்தப் பகுதி மக்கள் மத்தியில் செவி வழிக் கதையாகக் குறித்த ஆலயம்பற்றிய கருத்தாடல்கள் இருந்து வந்தன. அந்தச்செவிவழிக்கதைகள்மூலம்அந்த வனப் பகுதியில் பழமையான ஆலயம் இருப்பதாக நம்பப்பட்டுக் காலம் காலமாகத்தேடப்பட்டும்வந்தது. இந்த நிலையிலேயே மிகப் பழமையான இந்தச் சிவன் ஆலயம் கண்டுபிடிக்கப்பட்டது.

"பழங்காலத்துக் கோயில் ஒன்று காட்டுக்குள் இருக்கிறது. கனங்கொடை என்கிற இடத்தைத் தாண்டிக் காட்டு வழியாகப் போனால், யானை உருவில் ஓர் ஆலமரம் வரும் அதுதான் அடையாளம். அதைத் தாண்டிப் போனால்,கோவில்வரும்", "ரெண்டாயிரம் வரு சமா இந்தக் காட்டுக்குள்ள கோவில் இருக்கிறதாத் தன்னோட தாத்தாசொன்னதாஎன்னோடதாத்தா எனக்குச்சொன்னார்"

இறக்குவானைக்காட்டைஅண்மித்த கிராமத்து மூதாதையர்கள் மத்தியில் இந்த ஆலயம் குறித்து இவ்வாறே செவி வழிக் கதைகள் இருந்து வந்தன. அதே போல அச்சுப் பிசகாமல் குறித்த பகுதிக் காட்டுக்குள் இந்தக் கோவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இறக்குவானையிலிருந்து 8கிலோமீற்றர்கள்தொலைவுவரை அபாயம் நிறைந்த காட்டுப் பாதையில் கால்நடையாகப் பெரும் சிர மத்துக்கு மத்தியிலே பயணம் செய்தால், கரடுமுரடான காட்டுப் பாதையின் முடிவில் யானைமுகஆலமரம்ஒன்றுஅமைந்திருக்கிறது. ஆலமரத்தின் ஒரு கிளையமைப்புயானையின்துதிக்கை,முக பாவனையுடன் காட்சி அளிக்கிறது. இந்த ஆலமரத்துக்கு அப்பால் செல்வதற்குப் பாதை இல்லை. அங்கிருந்து குறிப்பிட்டளவுதூரத்தில்மலைஒன்று தென்படுகிறது. அதன் உச்சியல் சிறிதாய் ஓர்ஆலமரமும்,ஓங்கி உயர்ந்த தென்னை மரத்தோடு கிழே கடவுள் சிலைகளும் இருப்பதைத் தூரத்தில் இருந்தே காணமுடிகிறது. அந்த மலைக் கோவிலுக்குள் ஏறிச் செல்வதற்கு அமைக்கப்பட்டிருக்கின்ற படிக்கட்டுக்கள் சிதைவடந்து காணப்படுகின்றன. மிகப் பழமையான வரலாற்றை எடுத்துக் காட்டுகின்றன. பரந்த பாறையின் மீது அமைந்திருக்கிறது இந்த ஆலயம். அதில் சிவலிங்கம் மற்றும் உருவம் சிதிலமடைந்த இந்துத் தெய்வச் சிலைகள் அமைந்திருக்கின்றன. இவை காலத்தால் பழமையானவை என்பதைப் பறைசாற்றி நிற்கின்றமை குறிப்பி டத்தக்கது.







## சமூகத்துக்கு முன்மாதிரியாக பல்கலை மாணவர்கள் செயற்படுதல் வேண்டும்

திருகோணமலை.டிசெ.27



பல்கலைக்கழகமாணவர்பேரவையிலேபால்நிலைச்சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில்பெண்களின்வகிபாகம் அதிகரிக்கப்படவேண்டும். பல்கலையில் பெண்களுக்குச் சமவுரிமைவழங்கிச்செயற்படுவதுசமூகத்துக்குஎடுத்துக்காட்டானசெயல்-என்றுஅம்பாறை மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உதவி ஆணையாளர் ஏ.எல்.இசடீன் தெரிவித்தார். திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் கடந்த திங்கள் கிழமை நடந்த மனித உரிமைகள் அரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர்மேற்படிவிடயத்தை வலியுறுத்தினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகங்களில்உள்ளமாணவர்கள்பேரவைகளில் அதிகளவிலானமாணவர்கள்பெண்களாக இருக்கின்றனர். 80வீதமான பெண் மாணவர்கள் உள்ளபோதிலும் மாணவர்கள் பேரவை போன்ற அமைப்புக்களில் 20 வீதமான பிரதிநிதித்தவத்தைக் கொண்ட ஆண்களே முக்கிய பதவிகளில் இருக்கிறார்கள். பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறான பேரவைகளில் தலைவராகவும்ஆண்மாணவர்தான் இருப்பார், உபதலைவராகவும் ஆண் மாணவர்தான் இருப்பார். இங்கு பெண்களின்பிரதிநிதித்தவம்அதிகரிக்கப்படவேண்டும். பால்நிலைச் சமத்துவத்தைச்சமூகத்தில்உறுதிப்படுத்தும்வகையில்முன் மாதிரியாகப் பல்கலைக்கழக மாணவர்கள் பேரவையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும். 80 வீதமான பெண்கள் இருக்கும் இவ்வாறான அமைப்புக்களில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதில்லை. பெண்களுக்கான உரிமைகளை உத்தரவாதப்படுத்தும் வகையில் அடிப்படையாக, முன்மாதிரியாக இங்கேயே முதலில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் கொண்டுவரப்பட வேண்டும் - என்றார்.


கிழக்கு மாகாணத்தைச்சோர்ந்த 300க்கு அதிகமான பொது அமைப்புகளின்பிரதிநிதிகள்கலந்துகொண்டஇந்தநிகழ்வை இளைஞர்அபிவிருத்தி அகம்ஏற்பாடுசெய்திருந்தது. திருகோணமலைமாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் உள்ளிட்ட பெரும்திரளானோர் இதில் கலந்துகொண்டனர்.

## தலைமைத்துவ பயிற்சி முகாம்

மலையக இளையோருக்கான ஆன்மிக ரீதியான வதிவிடத் தலைமைத்துவ முகாம் கடந்த 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுத் தொடர்ந்து 3 நாள்களாக கொத்மலை நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவப்பன்னாட்டுப்பயிற்சி நிறுவனத்தில்நடந்தது. மலையக மாணவர்களிடையே தலைமைத்துவப் பண்பு உட்பட ஆன்மிகச்சிந்தனைகளைவளர்க்கும்நோக்கில் நடைபெற்ற இதில் மலையகத்தைச் சேர்ந்த 15 பாடசாலைகளின் உயர்தர மாணவர்கள் 120பேர் வரையில் கலந்து கொண்டார்கள்.

விளையாட்டுகள்ஊடாகத்தலைமைத்துவப் பயிற்சிகள், தலைமைத்துவம் சம்பந்தான விரிவுரைகள், யோகா பயிற்சி, குழுச் செயற்பாடுகள் ஆகிய விடயங்கள் இந்தப் பயிற்சி முகாமில் நடந்த. இவற்றில் வெற்றி பெற்ற குழுக்களுக்குப் பரிசில்களும், கலந்து கொண்டஅனைவருக்கும்சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இலங்கை சின்மயா மிசனின் கண்டி மற்றும் இறம்பொடை பிரமச்சாரிகளின் தலைமையில் இந்த நிகழ்வு நடந்தது.






## சிவனொளியில் கஞ்சா ; இளைஞர்கள் 7பேர் கைது

ஹற்றன்.டிசெ.27

கஞ்சாவுடன் சிவனொளிபாத மலையைத் தரிசிக்கச்சென்ற இளைஞர்கள் 7பேரை நேற்று முன்தினம் கைது செய்ததாகக் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். சிவனொளிபாதமலைக்குப் போதைப் பொருள்களைக் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காகக் ஹற்றன் பொலிஸார் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். ஹற்றன் - கொழும்பு முதன்மைவீதியில்வாகனச்சோதனையிலீடுபட்டபோதேகுறித்த 7பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை, கொழும்பு, உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளைச்சேர்ந்தவர்கள்என்றும்கைதுசெய்யப்பட்டவர்களைஹற்றன் நீதவானிடம்முன்னிலைப்படுத்தும்நடவடிக்கைகளைஎடுத்துள்ளதாகவும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.



## நித்திரை மயக்கத்தில் சாரத்தியம் மின்கம்பத்தில் மோதுண்டு விபத்து

காத்தான்குடி.டிசெ.27

வேகமாகப்பயணித்தவான் ஒன்று மின்கம்பம், வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை மோதியதால் சேதம் ஏற்பட்டிருப்பதாகக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11 மணியளவில் காத்தான்குடிநகரின் முதன்மைவீதியில் இந்தச்சம்பவம் இடம் பெற்றது.

சாரதி உட்பட வானுக்குள் இருந்தவர்கள் சிறு காயங்களுக்குஉள்ளாகினர். குறித்தவானின்சாரதிநித்திரை மயக்கத்தில் வானைச் செலுத்திச் சென்றதால் இந்த விபத்து நேர்ந்தமை ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்ததாகக் காத்தான்குடிப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 3 மோட்டார் சைக்கிள்களை மோதித் தள்ளிய வான் முடிவில் அங்கிருந்தமின்கம்பத்தில்மோதுண்டுஇயக்கத்தை நிறுத்தியுள்ளது. விபத்தைஏற்படுத்தியவானைக்கைப் பற்றியபொலிஸார்மேலதிகவிசாரணைகளில்ஈடுபட்டனர்.



## இந்தோனேசியா சுனாமி சாவுகள் அதிகரித்தன

ஜகார்த்தா.டிசெ.27
இந்தோனேசியாவின் மேற்கு ஜாவாத் தீவில் உள்ள அனாக் கிரகடாவ் என்ற எரிமலை கடந்த சனிக்கிழமை இரவு வெடித்து சிதறியது. இதனால் அந்தப் பகுதி முழுவதும்அதிர்ந்துகுலுங்கியது. பின்னர் சிறிது நேரத்தில் சுந்தா ஜலசந்திபகுதியில்இருந்துஎழுந்த சுனாமிஅலைகள்தெற்குசுமத்ரா மற்றும் மேற்கு ஜாவாத் தீவுகளைக் கடுமையாகத் தாக்கின. இதில் சிக்குண்டு சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 429 ஆக அதிகரித்துள்ளது. ஆயிரத்து 400க்கு அதிகமானோர் காயமடைந்ததுடன், 154 பேர் காணாமல் போயுள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்தும் நடந்து வருகின்றன. இடர்பாடுகளுக்கிடையில் சிக்குண்டிருப்பவர்களைத்தேடும் பணிதொடர்கிறது. இதன்முடிவில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கைஉறுதிபடத்தெரியவரும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தோனேசியாவில் சீரற்ற காலநிலை தொடர்வதால் பொதுமக்களைக் கடற்கரையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை விலகியிருக்கும்படியும்காரணம் மீண்டும் சுனாமி ஏற்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆங்கிலக் கால்வாயில் தத்தளித்த அகதிகள் மீட்பு




லண்டன்.டிசெ.27
நத்தார்நாளில்ஆங்கிலக்கால்வாயின் வெவ்வேறு பகுதிகளில் தத்தளித்த 40 அகதிகளைப் பிரித்தானியக் கடலோரப் பாதுகாப்புப் படையினர் மீட்டனர். உள்நாட்டுப் போர், வன்முறை மற்றும் வறுமை காரணமாக சிரியா, ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகியநாடுகளைச்சேர்ந்தவர்கள் அகதிகளாக வெளியேறி, ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றவண்ணம் உள்ளனர்.
இந்த, நிலையில், நத்தார் நாளன்றுஅகதிகள்பலர், படகுகள் மூலம் பிரிட்டனுக்கும் பிரான்ஸ்க்கும் இடைப்பட்ட கடல்பகுதியான ஆங்கிலக் கால்வாய் ஊடாகப் பிரிட்டனுக்குள் நுழைய முயன்றுள்ளனர். நாடுகளுக்கு ஆள்கடத்தும் கும்பல் மூலம் அவர்கள் சட்டவிரோதமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலர் பாதுகாப்பு உடை அணியாமல் சாதாரண படகில் பயணம் செய்துள்ளனர். படகு பழுதடைந்ததால் அது கடலில்தத்தளித்தது. இதையடுத்துப் பிரிட்டனின் கடலோர காவல்படையினர் உலங்கு வானூர்தி மூலமாகவும், படகுகளில் சென்றும் அவர்களை மீட்டனர். இவ்வாறு ஆங்கிலக் கால்வாயின் 5 இடங்களில் இருந்து 2 குழந்தைகள்உள்ளிட்ட40அகதிகள்மீட்கப்பட்டனர்.
மீட்கப்பட்டவர்களுக்குமருத்துவ உதவி அளிக்கப்பட்டது.
மீட்கப்பட்டவர்களில்சிலர் ஈராக், ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தானைச்சேர்ந்தவர்கள் எனத்தெரியவந்துள்ளது.



# திமிங்கல வேட்டையில் குதிக்கிறது ஜப்பான்



டோக்கியோ.டிசெ.27
**ஜப்பானில் வர்த்தக அடிப்படையிலான திமிங்கல வேட்டை மீண்டும்தொடங்கப்படவிருக்கிறது. எதிர்வரும் ஜூலை மாதத்தில் அதை ஆரம்பிக்கவுள்ளதாக ஜப்பான் அறிவித்துள்ளது. இதற்குப் பல தரப்புகளிலும் இருந்து எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.**



ஜப்பானில் திமிங்கல இறைச்சி விரும்பி உண்ணப்படுகிறது. கடலோரக் கிராமங்களைச் சேர்ந்தமக்கள்பலநூற்றாண்டுகளாகத்திமிங்கலஇறைச்சியை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். இரண்டாம்உலகப்போருக்குப் பிறகு அதன் நுகர்வு அதிகரித்தது.பின்னர்திமிங்கலஇறைச்சி சாப்பிடுவது படிப்படியாகக் குறைந்தது. ஒருசிலபகுதிகளில் மாத்திரமே இறைச்சிக்காகத் திமிங்கலங்கள்வேட்டையாடப்படுகின்றன. அதேசமயம் ஆராய்ச்சிக்காக ஜப்பான் அரசு குறிப்பிட்ட அளவுக்குத் திமிங்கலங்களை வேட்டையாடியது. பின்னர் அதன் இறைச்சி விற்பனை செய்யப்பட்டது. இதற்குப் பலரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். திமிங்கல வேட்டையில் ஈடுபடக்கூடாது என்று பன்னாட்டு நீதிமன்றம் 2014ஆம் ஆண்டு ஜப்பானுக்குத் தீர்ப்பு அளித்தது. 2014ஆம் ஆண்டில் மட்டும் வேட்டையை நிறுத்திய ஜப்பான், அடுத்த ஆண்டில் இருந்து வேட்டையை மீண்டும் ஆரம்பித்தது. இந்த நிலையில்தான் எதிர்வரும் ஜூலைமாதத்தில்இருந்துவர்த்தகஅடிப்படையில்திமிங்கல வேட்டையைமீண்டும்ஆரம்பிக்க உள்ளதாகஜப்பான் அறிவித்துள்ளது. வர்த்தக அடிப்படையிலான திமிங்கல வேட்டைக்குப்பன்னாட்டுத்திமிங்கலவேட்டைத்தடுப்பு அமைப்பு தடை விதித்துள்ளது. எனவே, அந்த அமைப்பிலிருந்து இருந்து விலகித் திமிங்கல வேட்டையை ஆரம்பிப்பதற்கு ஜப்பான் திட்டமிட்டுள்ளது. திமிங்கல இறைச்சி சாப்பிடுவது தங்கள் கலாச்சாரத்தின் ஓர் அங்கம் என்றும் ஜப்பான் அதிகாரிகள்கூறுகின்றனர். ஜப்பான்அரசின்இந்தநடவடிக்கைகடும் பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று பன்னாட்டுத் திமிங்கல வேட்டைத் தடுப்பு அமைப்பு எச்சரித்துள்ளது. அத்துடன் ஜப்பானின் திமிங்கல வேட்டைக்குப் பன்னாடுகள் பலவும் எதிர்ப்புத் தெரிவிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## அமெரிக்காவுக்குள் அகதியாக நுழைந்த 8 வயதுச்சிறுவன் எல்லையில் சாவு

வோஷிங்டன்.டிசெ.27
மெக்சிக்கோ - அமெரிக்கா எல்லையில் உள்ள அமெரிக்காவின் தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த அகதிகளில் 8 வயதுசிறுவன்ஒருவன்சாவடைந்துள்ளான். மத்திய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள், தங்கள் நாடுகளில் நிலவும் வறுமை, வன்முறைமற்றும்துன்புறுத்தல்கள் காரணமாக அங்கிருந்து அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்து வருகின்றனர். அவர்கள் குறிப்பாக மெக்சிக்கோ எல்லை வழியாக அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைகின்றனர். இதைத் தடுக்கும் நடவடிக்கையில்அமெரிக்கஅதிபர்டொனால்ட் ட்ரம்ப் கடுமையாக உள்ளார். தடையை மீறி அமெரிக்காவுக்குள் நுழைபவர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுகிறார்கள். மெக்சிக்கோ எல்லையில்தடுப்புசுவர்கட்டுவதற்கும் அமெரிக்கா நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் அமெரிக்க அரசின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட அகதிக் குழந்தை சாவடைந்ததானது இது இந்த மாதத்தின் இரண்டாவது சம்பவமாகும். இதற்கு முன்பு அதே கவுதமாலாவை சேர்ந்த




வைக்கப்பட்டிருந்த கவுதமாலாவைச் சேர்ந்த எட்டுவயதுச்சிறுவன் உடல்நலக்குறைவால் சாவடைந்துள்ளான். மெக்சிக்கோவழியாகஅமெரிக்காவுக்குள்நுழைந்ததாகத்தடுப்புக்காவலில் ஏழு வயதுச்சிறுமி அமெரிக்க அரசின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட சில மணிநேரங்களிலேயேசாவடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொலிவியாவில் கடத்தப்பட்ட பெண் 32 ஆண்டுகளுக்குப் பின் மீட்பு

லாபாஸ்.டிசெ.27
பொலிவியாவில் ஆட்கடத்தல் குழு ஒன்றால் கடத்தப்பட்ட பெண் 32 ஆண்டுகளுக்குப்பின்னர் மீட்கப்பட்டார். பொலிவியாவில் 1980ஆம் ஆண்டில் ஆர்ஜென்ரீனாவைச்சேர்ந்தஒருசிறுமிஆட்கடத்தல் கும்பலால் கடத்தப்பட்டார்.

இதுபற்றிப்பொலிஸார்விசாரணைநடத்தினர். அவரைப்பற்றிய எந்தத் தகவலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்த நிலையில் கடத்தப்பட்ட பெண் தெற்குப் பொலிவியான் பெர்மிஜோ பகுதியில் இருப்பதாக இந்தஆண்டின்ஆரம்பத்தில் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்துப் பொலிவியா மற்றும் ஆர்ஜென்ரீனா பெரலிஸார் இணைந்து அவரைத் தேடும் பணியில் ஈடுபட்டனர். நீண்ட முயற்சிக்குப் பிறகு அந்தப் பெண்ணைப் பொலிஸார் கண்டுபிடித்தனர். ஆட்கடத்தல்கும்பலில்சிக்கியிருந்தஅந்த பெண்ணையும், அவரது மகனையும் மீட்டுக்குடும்பத்தினருடன்சேர்த்துவைத்துள்ளனர்.

தற்போதுஅந்தப்பெண்ணுக்கு45வயது ஆகிறது. கடத்தப்பட்ட பெண்ணை 32 ஆண்டுகளுக்குப் பிறகு மீட்டு, அவரது குடும்பத்தினருடன்சேர்த்துவைத்திருப்பதாகஆர்ஜென்ரீனாபொலிஸார்அறிக்கை வெளியிட்டுள்ளனர். ஆனால், அந்தப் பெண்ணைக் கடத்திச் சென்றவர்கள் குறித்த எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

# கர்ப்பிணிக்குஎச்.ஐ.வி. குருதி ஏற்றப்பட்ட அதிர்ச்சி குருதி வங்கிகளைச் சேதனையிடுவதற்கு உத்தரவு



தமிழ்நாடு.டிசெ.27
கர்ப்பிணித் தாய் ஒருவருக்கு எச்.ஐ.வி. தொற்றுடைய குருதி ஏற்றப்பட்ட விவகாரம் தமிழகம் முழுதும் பெரும் பரபரப்புக்குள்ளாகியிருக்கிறது. இந்தத் தொற்றுடையகுருதிஏற்றப்பட்டவிவகாரத்தைவிசாரிப்பதற்காக,

உயர்மட்டதொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப்பட்டதோடு, சுகாதாரத்துறைச் செயலர் ராதாகிருஷ்ணன் பாதிக்கப்பட்ட கர்ப்பிணியிடம் விசாரணை நடத்தினார். இந்த விவகாரம் தமிழக சுகாதாரத்துறை வரலாற்றில்கரும்புள்ளியாகப் பார்க்கப்படுகிறது.

சுகாதாரத்துறைச் செயலர் ராதாகிருஷ்ணன் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணிடம் நேரடியாக விசாரணைநடத்தினார். அவரதுகணவர்மற்றும்உறவினர்கள் நடந்தவற்றைத் தெரிவித்தனர். அவர்களுக்கு ஆறுதல் தெரிவித்த அவர் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய சிகிச்சைஅளிக்கவும்ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அத்துடன் எச்.ஐ.வி. குருதி வைக்கப்பட்டிருந்தசாத்தூர்குருதிவங்கியையும்அவர்ஆய்வு நடத்த உள்ளார். இந்த விவகாரத்தை விசாரிப்பதற்காக, மதுரை ராஜாஜி மருத்துவமனையின் குருதி வங்கித் தலைவர் மருத்துவர் சிந்தா தலைமையில் உயர்மட்டதொழில்நுட்பக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.


இந்தக் குழுவினர் விருதுநகர் மற்றும் சிவகாசியில் உள்ள ரத்த வங்கிகளில் ஆய்வு நடத்த உள்ளனர். அத்துடன் தமிழகம் முழுவதும் உள்ள குருதி வங்கிகளில்வைக்கப்பட்டிருக்கும்குருதிகளைமறுபரிசோதனை செய்யவும் சுகாதாரத்துறை சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

# பாகிஸ்தானின் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டுக் கொலை



இஸ்லாமபாத்.டிசெ.27
பாகிஸ்தான் நாடராளுமன்றின் முன்னாள்உறுப்பினரும்பாகிஸ்தானின் தலைமை அமைச்சராகவுள்ள இம்ரான் கானைக் கடந்த தேர்தலில் எதிர்த்து போட்டியிட்ட வேட்பாளருமான சையத் அலி ராசா அபிடி சுட்டுக்கொல்லப்பட்டார். பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தின் தலைநகரான கராச்சிப் பகுதியைச் சேர்ந்த அலி ராசா அபிடி(வயது46) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டார். பிரபல தொழிலதிபரான இவர் முத்தாஹிதா குவாமி அமைப்புக் கட்சியின்முக்கியபிரமுகராகஅரசியலில் ஈடுபட்டு வந்தார். 2013ஆம் ஆண்டு பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் கராச்சிக்கு உட்பட்ட தொகுதியில் முத்தாஹிதா குவாமி அமைப்பின் சார்பில் இவர் போட்டியிட்டு வெற்றி யெற்றார். கடந்த ஜூலை மாதம் நடைபெற்றநாடராளுமன்றத்தேர்தலில் போட்டியிட்ட இவர் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சித் தலைவர் இம்ரான் கானிடம் தோல்விஅடைந்தார்.பின்னர்,தனிப்பட்ட காரணங்களுக்காகக் கடந்த செப்டம்பர் மாதம்முத்தாஹிதாகுவாமிஅமைப்பில் இருந்துவெளியேறினார்.

அவருடைய வீட்டில் வைத்து அவர் இனம்தெரியாத நபர்களால் சுடப்பட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சிகிச்சைப் பலனின்றிச் சாவடைந்தார். இந்தச் சம்பவத்துக்கு பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி, தலைமை அமைச்சர் இம்ரான் கான் மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.



*உலகிலேயே விலை உயர்ந்த (தங்கத்தைவிட) பாரம்பரிய மருத்துவ குணம் வாய்ந்த காளான் ஒன்றே 'யர்சாகும்பா' என்று அழைக்கப்படுகிறது. இமயமலையிலுள்ள வயகரா என்று சிலர் இதைக் கூறுகின்றனர். ஆயிரக்கணக்கான நேபாள மக்கள் இமயமலையின் உயரமான இடங்களில் ஏறிச் சில மாதங்கள் வரை இதைத் தேடுவதில் கழிக்கின்றனர். பாலுணர்வைத் தூண்டும் குணங்களுக்கு அப்பாற்பட்டு, ஆஸ்துமா முதல் புற்றுநோய் வரை பல நோய்களை இந்தக் காளான் குணமாக்கும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.*

# வீடுகளில் பிரசவங்கள் பார்த்த ‘பத்மசிறி’ புகழ் சுலாகிட்டி நரசம்மா சாவு



பெங்களூர்.டிசெ.27
கர்நாடக மாநிலத்தில் வீடுகளில் பிரசவம்பார்த்து15ஆயிரத்துக்கும் மேற்பட்டகுழந்தைகள்பிறப்பதற்கு உதவியதற்காகப்பத்மசிறி விருது பெற்ற'சுலாகிட்டி'நரசம்மாதன்னுடைய 98ஆவது வயதில் நேற்றுச் சாவடைந்தார். கர்நாடக மாநிலம், தும்கூர்மாவட்டம்,கிருஷ்ணாபுரம் பகுதியைச் சேர்ந்தவர் நரசம்மா. தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட இவரது முன்னோர்கள் நாடோடிகள்வம்சத்தினராகஇருந்தனர். கல்வியறிவுஇல்லர்தநரசம்மாவுக்கு 12ஆவது வயதில் திருமணம்நடந்தது. அவருக்குபிறந்த12 குழந்தைகளில் 4 மகன்கள் சிறுவயதில்இறந்துவிட்டனர். 1940ஆம் ஆண்டில் அவருக்கு 20 வயது. அப்போது அவரது அத்தைக்கு வீட்டில் குழந்தை பிறந்தது. அதற்கு மருத்துவச்சியாகஇருந்துபிரசவம் பார்த்த தனது பாட்டி மரிகெம்மா என்பவருக்கு நரசம்மா உறுதுணையாக இருந்தார்.

பிரசவம் பார்க்கும் முறையைத் தனது பாட்டியிடம் இருந்து படிப்படியாகக் கற்றுகொண்ட நரசம்மா அவரது உறவினர்கள் வீட்டில் நடந்த பிரசவங்களைப் பார்க்க ஆரம்பித்தார். இதனால், கன்னட மொழியில்'வீட்டில்பிரசவம்பார்க்கும் மருத்துவச்சி' என்னும் பொருள்படும் 'சுலாகட்டி' என்ற பெயர் அவருடன் ஒட்டிக் கொண்டது. காலப்போக்கில்பிரசவம்பார்க்கும்கலையில்கைதேர்ந்தமருத்துவச்சியாக மாறிவிட்ட 'சுலாகட்டி' நரசம்மா அதிகம் பேசப்படத் தொடங்கினார்.

நரசம்மாஇதுவரை15ஆயிரத்துக்கும் அதிகமான குழந்தைகளின் பிறப்புக்குஉறுதுணையாகஇருந்துள்ளார். 70 ஆண்டுகளாக இவர் ஆற்றிய அரும்சேவையைப் பாராட்டி 2012ஆம் ஆண்டில் 'இந்தியாவின் சிறந்த குடிமகள்' விருது நரசம்மாவுக்கு வழங்கப்பட்டது. இந்தியாவின்மிகப்பெரியசிறப்புக்குரியநான்காவதுவிருதான'பத்மசிறி' விருதை இந்த ஆண்டு அவர் பெற்றார். இந்த நிலையில், உடல் நலக்குறைவால் அவர் சாவடைந்தார்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# அடிப்படை மாற்றம் அவசியம்

நாட்டின் அரசியல் நெருக்கடிகள், குளறுபடிகள் மற்றும் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட இடர் என்பவற்றின் நடுவே, இலங்கையின் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் மிக முக்கியமான ஒரு விடயத்தைச் சாதாரணமாகக் கடந்து சென்றிருக்கின்றோம். அதிகளவில் கவனம் செலுத்தப்பட வேண்டிய, அடிப்படை மாற்றத்துக்கு அவசியமான அந்த விடயம் கூர்ந்த அவதானிப்புக்கும் விரிந்த விவாதத்துக்கும் வராமல் போனமை மிகப் பெரும் துன்பியலே!

வீதியில் தன்னை மறித்த போக்குவரத்துப் பொலிஸார், குற்றச்சாட்டுப் பத்திரத்தைச் சிங்கள மொழியில் வழங்கியமை தனது மொழி உரிமையை மீறும் செயல் என்று வடக்கு மாகாண எதிர்க் கட்சித் தலைவர் க.தவராசா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொண்ட குற்றச்சாட்டு விசாரணையில் எழுப்பப்பட்டிருந்தது அந்த விடயம்.

தமிழும் உத்தியோகபூர்வ மொழி என இலங்கையின் அரசமைப்பு அங்கீகரித்திருக்கும் நிலையில் தனக்குத் தெரியாத, புரியாத சிங்கள மொழியில் குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டமை தனது மொழி உரிமையை மீறும் செயல் என்பதே தவராசா எழுப்பிய பிரச்சினை. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக வந்த பொலிஸ் அதிகாரிகள் தமது பக்கத்துத் தவறை ஏற்றுக்கொண்டார்கள். அதற்கான காரணமாகத் தமிழ்ப் பொலிஸார் அதிகளவில் கடமையாற்றுவதில்லை என்று சொன்னார்கள்.

இந்த இடத்தில் தவராசா ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார். அதுதான் மிகவும் முக்கியமானது. இலங்கையின் நிகழ்காலத்தையும் கொழும்பு அரசின் மீதான தமிழ், முஸ்லிம் மக்களின் அச்சத்துக்கான காரணத்தையும் எதிர்காலம் குறித்த கேள்விகளையும் எழுப்புகின்ற விடயம் அது.

அரச ஊழியர் ஒருவர் இரண்டாவது மொழியை அறிந்திருப்பதும் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை உள்ளிட்ட முறைகளின் மூலம் அதனை நிரூபித்திருப்பதும் கட்டாயம் என்கிறபோது பொலிஸ் அலுவலர் ஒருவர் தனக்குத் தமிழ் தெரியாது என்று எப்படிச் சொல்ல முடியும் என்பதே தவராசா எழுப்பிய கேள்வி.

மிகச் சரியான கேள்வி அது. கொழும்பு அரசின் 2007 ஆம் ஆண்டு சுற்றிக்கையானது, அரச ஊழியர் ஒருவர் தனது பணி நிரந்தரத்தை உறுதிப்படுத்தவும் சம்பள உயர்வுகளைப் பெறுவதற்கும் இரண்டாவது மொழித் தேர்ச்சி அவசியம் என்று கூறுகின்றது. அதாவது சிங்கள ஊழியர்கள் தமிழ் மொழியையும் தமிழ் ஊழியர்கள் சிங்கள மொழியையும் ஆகக் குறைந்தது எழுத, வாசிக்க, பேசத் தெரிந்திருப்பது அவசியம்.

அரச அதிகாரிகளின் பதவி நிலைகளுக்கு ஏற்ப இந்த இரண்டாவது மொழியறிவின் மட்டம் கொழும்பு அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உயர் அதிகாரிகள் மொழிச் செழுமையையும் கீழ் நிலை அலுவலர்கள் எழுத, வாசிக்க, பேசக் கூடிய அறிவையும் கொண்டிருக்க வேண்டும். கிட்டத்தட்ட 99 வீதமான அரச ஊழியர்கள் இந்த இரண்டாவது மொழித் தேர்வை வெற்றிகரமாகக் கடந்து பணி நிரந்தரத்தையும் சம்பள உயர்வுகளையும் பெற்றிருக்கிறார்கள் என்கிறது அரச புள்ளிவிவரங்கள்.

அப்படியிருக்கும்போது பொலிஸார் தமக்குத் தமிழ் தெரியாது என்ற காரணத்தால் குற்றப் பத்திரத்தை சிங்களத்தில் எழுதியதாகத் தெரிவிப்பது முழுத் தவறு.

தவறு என்பதற்கும் அப்பால், மொழி உரிமை நிலைநாட்டப்படும் லட்சணத்தையும் இது வெளிப்படுத்துகின்றது. பொலிஸ் திணைக்களத்தில் உள்ள சில நூற்றுக்கணக்கான தமிழ்ப் பொலிஸார் அனைவரும் சிங்களம் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டுள்ள நிலையில், சிங்களப் பொலிஸார் குற்றப் பத்திரத்தை நிரப்புவதற்கான தமிழ் அறிவைக்கூடக் கொண்டவர்களாக இல்லை என்பதுதான் பொரும்பான்மை வாதம் குறித்த தமிழ், முஸ்லிம் மக்களின் அச்சத்துக்குக் காரணம்.

தமிழர்கள் சிங்களம் கற்பதற்கு அச்சப்படுவதன் பின்னணியும் இதுதான். அப்படி நடந்தால் பெரும்பான்மையினர் ஒருபோதும் இரண்டாவது மொழியைக் கற்றுக்கொள்ளப் போவதில்லை, சிங்களப் பொலிஸாரைப் போலவே. இதனை நெறிப்படுத்தி, முறைப்படுத்தி சரியான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டிய கொழும்பு அரசோ மும்மொழிக் கொள்கை என்கிற முழக்கத்தை மட்டும் முன்வைத்துவிட்டு அடித்தளத்தில் எந்த மாற்றத்தையும் செய்யமலேயே இருக்கின்றது.

இது தமிழ், முஸ்லிம் மக்களின் மொழி உரிமையை மீறும் செயல் மட்டும் அல்ல அவர்கள் மீதான பெரும்பான்மைவாத திணிப்பாகவும்கூட இருக்கின்றது. இத்தகைய அணுகுமுறையும் போக்கும்தான் இலங்கையின் அமைதியின்மைக்கு அடிப்படைக் காரணம். இதனை மாற்ற முற்படாதவரை அமைதியையும் நல்லிணக்கத்தையும் எதிர்பார்க்க முடியாது. சட்டங்களை ஆக்குவது மட்டும் முக்கியமில்லை. அதனை முறையாக நடைமுறைப்படுத்துவது அதைவிட முக்கியம்.




# ‘அரசியல் சாசனம்’ ஒன்றை உருவாக்குதல்!

## த.தே.கூட்டமைப்பின் முயற்சி வெற்றி பெற ஒற்றுமை அவசியம்

ம.கணபதிப்பிள்ளை

இன்றைய அரசியல் நெருக்கடிக்கு மூலகாரணமாக விளங்குவது அதிகாரப் போட்டி. இலங்கையின் அரசியல் சூழமைவை எடுத்து நோக்கின், இந்த அதிகாரப் போட்டி என்கிற மூலம் ஆரம்ப காலம் தொட்டே இருந்துவருகிறது. தற்போதும் முடிவின்றித் தொடர்கிறது. குறிப்பாக சிங்கள மக்களின் அபிமானத்தை வென்ற இருபெரும் அரசியல் கட்சிகளே இவ்விதம் மோதிக்கொள்கின்றன.

உலகில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்ற ஒரு நாடு இலங்கை. அந்த இலங்கை தங்களுக்கே உரியது என்பதே இவர்களின் சிந்தனை வெளிப்பாடாகக் காணப்படுகின்றது. இந்த விடயத்தில் இரு கட்சிகளும் ஒற்றுமைப்பட்டு நிற்கின்றன. தாம் கொண்டுள்ள மேற்போந்த மனோபாவத்தை ஏற்றுக்கொண்டு மற்றைய இனங்களும் இந்த நாட்டில் வாழலாம் என்பதே இவர்களுடைய அடிப்படைக் கோட்பாடாகக் காணப்படுகின்றது.

### தன்மானத்தோடு வாழ வேண்டும் என்பதே தமிழர்களின் விருப்பு!

உண்மையில் சிங்களத் தலைமைகளின் சிந்தனைக்கும் கோட்பாடுகளுக்கும் தடையாக இருப்பவர்கள் யார்? அற்ப வாழ்நாளை வசதி வாய்ப்போடு வாழ்ந்திட வேண்டும் என்று எண்ணாது நமது வழித்தோன்றல்கள், எதிர்காலச் சந்ததியினர் இந்த நாட்டில் தன்மானத்தோடும் உரிமைளோடும் வாழவேண்டும் என்ற உன்னத சிந்தனை. “மானம் அழிந்தபின் வாழாமை முன் இனிதே” என்ற கோட்பாட்டையுடைய மானத் தமிழன் நெஞ்சில் வைச்சிரம்போல் கெட்டியாய் உறைந்து நிலைத்திருக்கிறது. இப்படியான மானத் தமிழர்கள்தான் சிங்களத் தலைமைகளுக்கு விரோதிகளாகவும் எதிராளிகளாகவும் தோற்றமளிக்கிறார்கள்.

> இந்த நாட்டின் வரலாற்றில் தமிழர் உரிமைகள் தட்டிப் பறிக்கப்பட்ட பொருளாகவே காணப்படுகின்றது. அந்தப் பொருளை ஆற்றிலே போட்டுக் குளத்திலே தேடுவதா? தட்டிப் பறித்தவனிடமிருந்துதான் பெறவேண்டும். அவர்களிடமிருந்து அதைப் பெறுவ்தென்பது கல்லிலே நார் உரிப்பதற்கு ஒப்பான செயலாகவே காணப்படுகிறது.

### இனவாதிகள் பெருகிவிட்டனர்!

இலங்கை சுதந்திரமடைந்து எழுபதாண்டுகளைத் தாண்டும் நிலையிலும் பெரும்பான்மை வலுவைக்கொண்ட ஒரு இனத்தோடு, சிறுபான்மை இனமாக ஒரு குழு முட்டிமோதிக்கொண்டு உரிமைக்காக முழக்கமிடுவதையும், அந்தத் தன்மானத் தீச்சுடர் அணைந்து போகாமல் கொழுந்துவிட்டு எரியும் தீப்பிழம்பாய் மலையிடப்பட்ட தீபம்போல் உலகத்தின் கண்பார்வையில் ஒளிவீச வைத்திருப்பதையும் ஒரு சிறு விடயமாகக் கருதலாமா?

ஒரு காலத்தில் கே.எம்.பி.இராசரத்தினா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, டி.எஸ்.சேனநாயக்க போன்ற ஒருசில இனவாதிகள் இருந்தார்கள். இன்று இனவாதிகள் பெருகிவிட்டார்கள் . தென்னிலங்கையில் இனவாத வெள்ளம் அலைமோதும் ஆழ்கடலாய் உருமாறி விட்டது. இந்தப் பெருங்கடலில் ஆழ்ந்து அமிழ்ந்து போகாமல் எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு தமிழர் தலைமை உரிமை என்ற முத்தை எடுப்பதென்பது இலகுவான காரியமா?

### உறுதி மொழிகள் மாறுதலின்றிக் காப்பாற்றப்பட வேண்டும்!

ஔவை மூதவை நாலு கோடி பற்றிக் கூறியுள்ளார். அதிலொன்று, “கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடைநாக் கோடாமை கோடி பெறும்” என்பதாகும். இங்கு, “என்னதான் இக்கட்டு ஏற்பட்டாலும் ஒருவன் கூறிய உறுதிமொழியைக் கடைசிவரை காப்பாற்றுவானாயின் அவனது சொல்லும் செயலும் கோடி பெறும்.” என்பதாக இந்தக் கூற்றின் பொருள் அமைந்துள்ளது.

இதுவரை காலம் சிங்களத் தலைமைகள் தமிழ்த் தலைமைகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எத்தனை எத்தனை? சொல்லிய உறுதிமொழிகளைக் காற்றில் பறக்கவிட்டு விட்ட செய்திகள்தான் எத்தனை? இந்த உறுதி மொழிகளை நம்பி தமிழ் தலைமைகள் தமிழ் மக்களுக்கு வாக்குறுதி அளித்து வரு

வதையும், அந்த வாக்குறுதிகள் நிறைவேறாத நிலையில் தமிழ்த் தலைமைகளை நம்மில் சிலர் குறை கூறுவதையும், எள்ளி நகையாடுவதையும் அவதானித்து வருகிறோம்.

மகிந்தராஜபக்ச 'பதின்மூன்று பிளஸ்' என்று கூறி எம்மையும் உலகத்தையும் ஏமாற்றவில்லையா? இனப்பிரச்சினைக்காக நீலன் திருச்செல்வத்தால் உருவாக்கப்பட்ட பொதியொன்றை சந்திரிகா அம்மையார் கொண்டுவந்த போது, அதைத்தீயிட்டுக்கொழுத்திய ரணில் விக்கிரமசிங்காவை நம்பலாமா? நாணயத் தன்மையற்ற சிங்களத் தலைமைகளின் சொல்லைத்தான் நம்பலாமா? அன்றி எழுத்து மூலமான உடன்பாட்டைத் தான் நம்பலாமா? 'பண்டா -செல்வா' ஒப்பந்தம், 'டட்லி-செல்வா' ஒப்பந்தம் இவற்றுக்கு என்ன நடந்தது? சிங்களத் தலைமைகள் தமிழ்த் தலைமைகளைத்தான் ஏமாற்றுகிறார்கள் என்றால், இன்று அவர்கள் உலகத்தையும் அல்லவா ஏமாற்றத் தலைப்பட்டு விட்டார்கள்.


ஐ.நா. அவையிலே போர்குற்றச்சாட்டுக் குறித்துக் கேள்வி எழுப்பப்பட்டபோது, ஆட்சித் தலைவர் மைத்திரி எத்தனை எத்தனை வாக்குறுதிகளை வழங்கினார்? அவற்றுள் ஒன்றைத் தானும் சரிவரச் செய்திருக்கிறாரா? அவர்களுக்கே போக்குக் காட்டுகிறார்கள் என்றால் நாம் அவர்களுக்கு எம்மாத்திரம்?

உலகில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்ற ஒரு நாடு இலங்கை. அந்த இலங்கை தங்களுக்கே உரியது என்பதே இவர்களின் சிந்தனை வெளிப்பாடாகக் காணப்படுகின்றது. இந்த விடயத்தில் இரு கட்சிகளும் ஒற்றுமைப்பட்டு நிற்கின்றன. தாம் கொண்டுள்ள மேற்போந்த மனோபாவத்தை ஏற்றுக்கொண்டு மற்றைய இனங்களும் இந்த நாட்டில் வாழலாம் என்பதே இவர்களுடைய அடிப்படைக் கோட்பாடாகக் காணப்படுகின்றது.



**இலங்கையின் நீதித்துறை சீர்குலைந்து போய்விட்டது!**

இந்த நாட்டில் நீதிபடும்பாடு பெரும்பாடாக இருக்கின்றதே! சட்டக் காவலராகக் கருதப்படும் காவல் படையினரில் சிலர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதை நாளேடுகளில் இருந்து அறிகிறோமே. நாட்டைப் பாதுகாக்கும் முப்படையின் மத்தியிலும் /இனவாத உணர்வு செறிந்து விட்டதே. நீதி தேவதையின் முன்னே சீருடை அணிந்து கொண்டு பொறுப்போடு அந்தத் தேவதையைக் காக்க வேண்டிய பொறுப்பதிகாரிகளில் சிலர் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதால் கைகளிலே விலங்கிடப்பட்டுப் போகக் கூடாத சிறைக்கூடம் போவதைத் தொலைக்காட்சியில் காணுகின்றோமே. என்னே! என்னே! அவர்களின் மடமை. என்னே! என்ன! நீதி தேவதையின் விளையாட்டு.





**'தமிழர்களுக்கான உரிமையை நாடல்!' கல்லிலே நார் உரிப்பதற்கு ஒப்பான செயல்**

இந்த நாட்டின் வரலாற்றில் தமிழர் உரிமைகள் தட்டிப் பறிக்கப்பட்ட பொருளாகவே காணப்படுகின்றது. அந்தப் பொருளை ஆற்றிலே போட்டுக் குளத்திலே தேடுவதா? தட்டிப் பறித்தவனிடமிருந்துதான் பெறவேண்டும். அவர்களிடமிருந்து அதைப் பெறுவதென்பது கல்லிலே நார் உரிப்பதற்கு ஒப்பான செயலாகவே காணப்படுகிறது.

கற்பாறையின் இடுக்கிலே நுழைந்த நுண்ணிய மரவேர் நாளது வட்டத்தில் வலிய அப்பாறையைப் பிளக்க வில்லையா? இதைத்தான் இன்றைய தமிழ்த்தலைமை செய்து வருகின்றது. இதைத் தமிழ்மக்கள் உணரவேண்டும்.

எதிர்க்கவேண்டிய நேரத்தில் எதிர்த்தும், இணங்க வேண்டிய நேரத்தில் இணங்கியும், வீரம் பேச வேண்டிய நேரத்தில் வீரம் பேசியும் தமிழர் தலைமை செயற்படுவதையும் இன்றைய தலைமுறையினர் உணரவேண்டும்.

**'தமிழ்தேசியக் கூட்டமைப்பு' தமிழ் அன்னையை அரியாசனம் ஏற்றிய கட்சி!**

பெரும்பான்மைப் பலம் என்ற ஒன்று இருப்பதை இருப்பாக வைத்துக் கொண்டு, துடிப்போடும் மிடுக்கோடும் சிங்கள மொழியை அரசிருக்கையில் ஏற்றிவைத்துவிட்டுத் தமிழர் தலைமைத்துவத்தைப் பார்த்து ஓர் குரல் ஒலித்தது. இன்றைய இனவாத வித்தகர் தினேஸ் குணவர்த்தனாவின் தந்தையார் பிலிப் குணவர்த்தனா அன்று தமிழர் தலைமைகளுக்கு ஆலோசனை ஒன்று கூறினார். "ஆங்கிலேயேர் ஆட்சியிலே தமிழர்கள் ஆங்கிலத்தைக் கற்றுப் பெரும் பதவிகளில் இருந்ததைப் போன்று, இனிமேல் நீங்கள் அரசமொழியான சிங்களத்தைக் கற்றுப் பதவிகளைப் பெறலாம் தானே!" என்று நப்பாசையோடு கூறினார். அப்போது தமிழர் தலைமையில் ஒருவரான கோப்பாய்க் கோமான் 'வன்னிய சிங்கம்' இப்படியான கருத்தை நீங்கள் கொண்டிருப்பீர்களேயானால், இலங்கையின் வடபுலத்திலே ஒரு தமிழரசு தோன்றியே தீரும் என்று அறைந்து சொன்னார்.

**ஒற்றுமை இன்றேல் தீர்வில்லை!**

தனிச் சிங்களச் சட்டத்தை சிதைத்துத் தமிழ் அன்னையை அரியாசனம் ஏற்றிய கட்சிதான் இன்று கூட்டமைப்பாக பரிணமித்து நிற்கிறது. நம்பிக்கைதான் வாழ்க்கை. அந்த நம்பிக்கையோடு 'அரசியல் சாசனம்' ஒன்றை உருவாக்க தமிழ் தேசியக்கூட்டமைப்பு முயலுகின்றது என்பதை இன்றைய தலைமுறையினர் உணரவேண்டும். அதை உளமார ஏற்றுக்கொண்டு இருந்துவரும் ஒற்றுமையைப் பேணிப்பாதுகாக்கப் பாடுபட வேண்டும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# சைவ சமயத்தவர்களுக்குப் பசு ஒரு தெய்வம்!

கோமாதா எங்கள் குலமாதா! இதை யாரும் மறுத்துரைத்துவிட முடியாது. ஆவினங்கள் தமிழர்களின் சொத்து என்றே சொல்லிவிடலாம். இதில் ஆடு கூடப் பலியிடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. இதைமீறிச் சாப்பிடுவதும் தவிர்ப்பதும் அவரவர் உரிமை என்ற வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பத்து மாதங்கள் தவமிருந்து கருவைச் சுமக்கின்ற கன்றுத் தாச்சியும், பிள்ளைத் தாச்சியும் தெய்வங்களுக்குச் சமனாகும்.

இரைபோடும் மனிதனுக்கே இரையாகும் வாய்பேசாத பிராணிகளிடத்தே இரக்க மனோபாவத்தை கொண்டிருப்பதுதான் பண்பு நலன். அவற்றை மனிதனுக்கே இரையாக்குவது தர்மமல்ல. ஒரு சாராருக்கு இது ஒரு பெரிய விடயமில்லாமல் தோன்றினாலும் மற்றொரு சாராருக்குப் பசுவதையானது மிகவும் வேதனையளிக்கிறது. எம்மைப் பொறுத்தவரை பசுவதையென்றாலும் சரி, பயிரை மேய்வதாக இருந்தாலும் சரி, மிருக பலி எதுவாயினும் சரி அனைத்துமே பாவ காரியம்! செய்வினைக்கான பலாபலனாக பாவம் கிடைத்தே தீரும். அது சந்ததி சந்ததியாகத் துரத்திக் கொண்டே இருக்கும். சும்மா ஒரு போதும் விடாது.

எந்த மதமும் சமூகத் தனிமங்கள் கொண்டிருக்க வேண்டிய பண்பு நலன்கள் குறித்து ஆழமான கருத்துக்களை முன்னிலைப்படுத்து கின்ற போது, அவற்றை ஏற்றுக் கொண்டு கீழ்படிந்து நடப்பவர்களாக நாம் இருப்பதில் எந்தவித தவறும் இல்லை. சட்டமும் சரி, சமயமும் சரி பொதுவாகவே இவ்வாறான வதைகளுக்கு எதிராகவே தமது நியாயமான வாதங்களை முன்வைக்கின்றன. பிராணிகளுக்கும் வாய் பேசுமாக இருந்தால் ஐக்கிய நாடுகள் சபை வரை இந்தப் பிரச்சினை கொண்டு செல்லப்பட்டிருக்கும். இது விடயம் குறித்து தனித்து அதிகார மையங்கள் சிந்திக்க வேண்டும் என்ற நிலையில் இருந்து மீண்டு, சமூகப் பொதுமை என்ற நிலைக்கு எண்ணங்களைக் கட்டமைத்து தீர்வுகளைக் கண்டுகொள்ள அனைவரும் ஒருமனதோடு இணைந்து பணி செய்ய முன்வர வேண்டும். ஒருவரை ஒருவர் சார்ந்து குறைகூறிக் கொண்டிருப்பதில் பயனேதுமில்லை!

கருடன்

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.



# நத்தார் பரிசு

வேலைக்குச் சென்றிருந்த தியாவின் அப்பா மதியா பரணம் வீட்டுக்குத் திரும்பியிருந்தார். அம்மா வேலைகளில் மூழ்கியிருந்தார். இயேசு கிறிஸ்துவின் படத்தைப் பார்த்தவாறு சிந்தனையில் மூழ்கியிருந்தாள் தியா. "தியாக்குட்டி என்னடா கண்ணு யோசிக்கிறாய்?" என்றவாறு அவளை முத்தமிட்டு அணைத்தார் அப்பா. "அப்பா உலகத்திலேயே ஏன் ஏழைகள் பிறக்கிறார்கள்?" என்று கேட்டாள் தியா. "பாவம் செய்பவர்கள் ஏழைகளாகவும் புண்ணியம் செய்பவர்கள் பணக்காரர்களாகவும் பிறக்கின்றார்கள். இதெல்லாம் உனக்குப் புரியாது அம்மா" என்றார் அப்பா. "ஏழைகள் வடிவில் இறைவனைக் காணலாம் என்று எங்கள் ரீச்சர் கூறினார். அப்போது கடவுளும் பாவம் செய்தவரா அப்பா?" என்றாள் தியா. அத்துடன் பத்து ஏழைப்பிள்ளைகளுக்குப் பரிசாக புத்தாடைகள் வாங்கித் தரும்படியும் அவள் கேட்டாள். அவை எதற்குமே பதிலளிக்காது குளிக்கச் சென்றுவிட்டார் அப்பா. இரு வாரங்கள் கடந்தன.

இன்று நத்தார் பண்டிகை தேவாலயம் சென்றிருந்த தியாவும் பெற்றோரும் வீட்டுக்குத் திரும்பினர். பத்து வயதேயான தியாவின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. வீட்டில் இருந்த பாலன் பிறப்பைப் பிரதிபலிக்கும் கூட்டின் முன் நின்று அவள் அழுது கொண்டிருந்தாள். அவளுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க நினைத்த அப்பா, "தியாக்குட்டி வெளியே போய் வருவோமா" என்று கேட்டார் அவள் மறுத்தாள். ஆனால் அவளை வலிந்து வெளியே அழைத்துச் சென்றார் அப்பா. கருணை இல்லத்தின் முன் அவர்கள் சென்ற கார் நின்றது. புன்னகையுடன் அவர்களை வரவேற்றார் பொறுப்பாளர் அருட்சகோதரி மரியா. மூவரும் அங்கிருந்த ஒரு அலங்கரிக்கப்பட்ட மண்டபம் நோக்கி நடந்தனர். அங்கே வண்ண வண்ணப் பூக்கள் போன்று சிரித்துக் கொண்டிருந்தனர் பல சிறுவர்கள். அவர்களுடன் ஓடோடிப் போய் ஒட்டிக் கொண்டாள் தியா. ஒரே ஆட்டம் பாட்டம் கொண் டாட்டம்.

விழாவின் முடிவில் கிறிஸ்மஸ் தாத்தா தோன்றி அங்கிருந்த குழந்தைகள் எல்லோருக்கும் இனிப்புப் பண்டங்களை வழங்கினார். எல்லோரும் மகிழ்வுடன் உண்டு கொண்டிருந்தனர். அப்போது அங்கிருந்த சிறுவர்களுக்குப் புத்தாடைகளையும் பாடசாலை உபகரணங்களையும் மற்றும் இனிப்புப் பண்டங்களையும் இல்லப் பொறுப்பாளர் வழங்கியதோடு அவர்களுக்கான நத்தார் தினத்துக்கான மூன்று வேளை உணவுகளையும் அந்தப் பரிசுகளையும் வழங்குவதற்கு நிதி உதவி வழங்கியவரை அங்கிருந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

இப்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அந்தப் பெரியவரைக் கண்ட தியா அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் அடைந்தாள். ஏனெனில் அந்தப் பெரியவர் அவளது தந்தையாக இருக்கக் கண்டாள். இப்போது பொறுப்பாளரால் நன்றியுரை கூறப்பட்டதோடு தியாவின் குடும்பத்தினருக்கு நத்தார் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது. விழா முடிந்ததும் அப்பாவை ஆரத் தழுவி முத்த மிட்டாள் தியா. அவளது கரிய கண்ட விழிகளில் நீர்த்துளிகள் நிரம்பி வழிந்தன. "அப்பா எனக்கு நீங்கள் இன்று தந்த நத்தார் பரிசுக்கு மிகவும் நன்றிகள்" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.



## வர்ணம் தீட்டுவோம்



## நத்தார் பண்டிகை

உலகில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இறைதூதர் இயேசு கிறீஸ்து மனிதனாக இந்த உலகில் அவதரித்த திருநாளை இன்று உலகளாவிய ரீதியில் கிறிஸ்தவ மக்கள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

மக்கள் செய்த பாவங்களை ஏற்றுக் கொண்டு அதற்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த புனிதரை நினைவுகூரும் நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களால் மட்டுமல்லாது உலகெங்கும் வாழும் அனைத்து மக்களாலும் விரும்பிக் கொண்டாடப்படும் சிறப்புப்பண்டிகையாகும். கிறிஸ்மஸ் என்றாலே மகிழ்ச்சியும் குதூகலமும் பரஸ்பர வாழ்த்துப் பரிமாற்றங்களும் புதிய நம்பிக்கைகளும் மக்கள் மனதில் குடிகொள்ளும். நத்தார் தினத்தன்று நள்ளிரவு மாட்டுத்தொழுவத்தில் பிறந்தவரான பாலன் இயேசுவை மையப்படுத்தி ஆலயங்களில் திருப்பலிகளும் குடில்களில் நத்தார் மரங்களும் கீதங்களும் வண்ண அலங்காரங்களும் அவரது பிறப்பின் மகிமையை தரணி எங்கும் பறைசாற்றி நிற்கின்றன. கிறிஸ்தவர்கள் இல்லங்கள் தோறும் அலங்கரிக்கப்பட்டு கிறீஸ்துவின் பிறப்பின் அடையாளமான குடில்களும் மரங்களும் அலங்கரிக்கப்படுகின்றன.

- ✦ மக்கள் நடுஇரவு முதற்கொண்டே கிறிஸ்துவின் பிறப்பை பட்டாசுகள் வெடித்துக் கொண்டாடி மகிழ்வர். அதிகாலையில் குடும்பம் குடும்பமாக புத்தாடை உடுத்தி ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்வர்.
- ✦ வழியில் சந்திக்கும் உறவினர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் கைலாகு கொடுத்து கிறிஸ்மஸ் வாழ்த்துக் கூறி மகிழ்வர்.
- ✦ வீடுகளில் இன்றைய தினம் சிற்றுண்டி வகைகளில் கிறிஸ்மஸ் கேக் முதலிடம் வகிக்கும். இந்த சிற்றுண்டி வகைகளை தாம் உண்டு மகிழ்வதோடு தமது உறவினர், நண்பர் வீடுகளுக்குச் சென்று கிறிஸ்மஸ் பரிசுகளையும் கொடுத்து மகிழ்வர். பல குடும்பத்தவர்கள் கருணை இல்லங்களுக்கும் முதியோர் இல்லங்களுக்கும் பல தானதர்மங்களை வழங்குவர்.
- ✦ மாலை வேளையில் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் எனப் பல தரப்பினரும் குழாம் குழாமாக ஒன்று கூடி கிறிஸ்மஸ் பற்றிய கரோல் பாடல்களைப் பாடியும் ஆடியும் மகிழ்வதோடு ஆலயங்களுக்கும் வீடுகளுக்கும் சமூகம் தந்து மக்களையும் சிறுவர்களையும் மகிழச் செய்வர்.
- ✦ இந்த நிகழ்வுகளில் நத்தார் தத்தாவின் வருகையும் பரிசளிப்பும் முக்கியமானவை.
- ✦ இந்த நிகழ்வுகளுக்கு ஊர் மக்களும் சிறுவர்களும் மகிழ்ச்சியுடன் தங்கள் பங்களிப்புக்களை செய்து மகிழ்வர்.
- ✦ மாலை வேளைகளில் கிறிஸ்மஸ் மரங்கள் ஒளிமயமாகத் தோன்ற வானவேடிக்கைகளும் இடம்பெறும்.
- ✦ நாமும் இயேசுவின் பிறப்பை மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழ்வோம்.

## மாட்டுத் தொழுவம் அதில் இயேசு பாலன்


மார்கழி குளிர் வாட்டிடவே
இயேசுபாலன் பிறந்தான் தொழுவத்தில்
மாந்தர் தம்மை மீட்டிடவே
இயேசு பாலன் பிறந்தான் தொழுவத்திலே

பனி மலர் பாலன் கதை உரைக்க
இந்தப் பாரே மகிழ்ந்தது நொடியினிலே
இனியவன் அவன் முகம் பார்த்திடவே
அந்தத் தூதரும் விரைந்தனர் கொடியினிலே

இறையவன் நடந்த வழிதனிலே
நாம் நிறைவுடன் சென்று நலம் பெறுவோம்
மறையவன் அனைவர் மனங்களிலும்
தினம் பிறந்திட நன்று வழிபடுவோம்!



## கிறிஸ்மஸ் தாத்தா



துருக்கி நாட்டின் மிரா நகரில் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவ ஆயர் புனித நிக்கோலாஸ். இவர் ஏழைகளுக்கு உதவி செய்வதிலும் குழந்தைகளை மகிழ்விப்பதிலும் ஆர்வம்-காட்டி வந்தார். சிறப்பாக பகிர்தலின் விழாவாகிய கிறிஸ்மஸ் நாள்களில் ஏழைக்குழந்தைகளுக்குப் பரிசுப் பொருள்களையும் வழங்கி மகிழ்வித்தார். அவரது முன் மாதிரியைப் பின்பற்றி கிறிஸ்மஸ் காலத்தில் தாத்தா வேடம் அணிந்து குழந்தைகளை மகிழ்விக்கும் வழக்கம் 19ஆம் நூற்றாண்டில் தோன்றியது. கிறிஸ்மஸ் தாத்தாவைக் குறிக்கும் 'சான்டாகிளாஸ்' என்ற பெயர் செயின்ட் நிக்கோலாஸ் என்பதில் இருந்தே உருவானது. தொப்பி, தொப்பையுடன் கூடிய தற்போதைய 'சான்டாகிளாஸ்' உருவம் தாமஸ் நாஸ்ட் என்ற அமெரிக்கரால் 1863ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.

### தேவை

யாழ். நகருக்கு அருகில்
அமைந்துள்ள பல்பொருள்
விற்பனை நிலையத்திற்கு பெண்
விற்பனையாளர் தேவை.

**077 437 4093**

(CS 22100) (14.17)



## ES Printers

2019 இற்கான அனைத்து வகையான
கலண்டர்களையும் குறைந்த விலையில் செய்து
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.




357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com


### கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக களஞ்சியக் கிளையில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றும் **திரு.ம. தினேஸ்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சிவமணி மகேந்திரன்**

அவர்கள் 26.12.2018 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்.**

(IN 8852) (14.17)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை**

34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா
(பகுதி I) 22.01.2019 (செவ்வாய்க்கிழமை)
கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

**பதிவாளர்**
**26.12.2018**

(IN 8853) (14.17)

## கேள்வி அறிவித்தல் - 2018
## தேக்கம்(குஞ்சுக்குளம்) சுற்றுலா மைய உணவு விடுதி
## நானாட்டான் பிரதேச சபை

நானாட்டான் பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட தேக்கம்(குஞ்சுக்குளம்) உணவு விடுதியினை மூன்று வருட காலத்திற்கு (01.01.2019 - 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 27.12.2018 – 18.01.2019 பி.ப 2.00 மணிவரை
கேள்வி ஏற்கும் இறுதித்திகதி :- 18.01.2019 பி.ப 2.30 மணிவரை
கேள்வி திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 18.01.2019 பி.ப 2.30

கேள்விப் பத்திரம் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு தலைவர். நானாட்டான் பிரதேசசபை. நானாட்டான் எனும் முகவரிக்கு அரக்கு (சீல்) முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு நானாட்டான் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 18.01.2019 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். கேள்விகள் உடனே பிரதேசசபையின் பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். அதற்கு பின் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

01. கேள்வி கோரும் தேக்கம் உணவு விடுதிக்கான கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப் படாத படிவக் கட்டணம், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணமும் செலுத்தி மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.
02. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரங்கள் வழங்கப் படமாட்டாது. எனினும், தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் ஏதும் மீளளிக்கப்படமாட்டாது.
03. ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படு வதுடன் கேள்வியின் வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
04. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியோ சமுகளிக்க முடியும்.
05. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்த வொரு கேள்விதாரரை காரணம் காட்டாது ஏற்கவோ. நிராகரிக்கவோ சபையினது தலைவருக்கும். கேள்விச்சபைக்கும் அதிகாரம் உண்டு.
06. விடுதியை வாடகைக்கு எடுப்பவராலேயே விடுதி நடத்தப்பட வேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவர். (மகன்.மகள்)
07. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதி முற்பணமாக செலுத்தி தலைவர். அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இத் தொகை இறுதி 12 மாத குத்தகைப் பணத்திற்கு ஈடு செய்யப்படும்.
08. உணவு விடுதிக்குரிய தளபாடங்கள் குத்தகைக்கு பெறுபவராலேயே ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.
09. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புகளுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடைய வராவார்.
10. சித்தி பெறும் கேள்விதாரர் பிரதேச சபையால் அங்கீகரிக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதோ, மதுபானவகைகளோ, போதை வஸ்துக்களோ அல்லது தடைசெய்யப்பட்ட வேறு எந்த பொருட்களையோ விற்பனை செய்வது தடைசெய்யப்படுவதுடன், கடைக் கட்டட வளாகத்தினுள் மதுபானங்கள் மற்றும் போதை வஸ்துக்களின் பாவனையும் தடைசெய்யப்படுகின்றது. மேலும், கடைக்கட்டடம் வேறு எந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கும் பாவித்தல் கூடாது.
11. மாதாந்த குத்தகைப்பணம். குறித்த மாதத்தின் இறுதி வேலை நாளுக்கு பிந்தாமல் தாங்களாகவே முருங்கன் உப அலுவலகத்தில் செலுத்த வேண்டும். தவறின், குத்தகைப்பணத்துடன் குத்தகைப் பணத்தின் பத்து சதவீதமான தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் தொடர்ந்து இரு மாதங்கள் செலுத்தத்தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
12. சபையின் தலைவரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்விதமுடிவையும் ஏற்கவேண்டும். இது தொடர்பாக சபைக்கெதிராகவோ/ தலைவருக்கெதிராகவோ நீதிமன்ற மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
13. கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை பிரதேசசபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| தொ.இல | குத்தகை விபரம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|
| 01 | தேக்கம்(குஞ்சுக்குளம்) சுற்றுலா மைய உணவு விடுதி | 180,000.00 | 1,000.00 | 5,000.00 |

**திரு.தி.பரஞ்சோதி**
**தலைவர்,**
**நானாட்டான் பிரதேசசபை.**
**27.12.2018**

(IN 8848)(14.17)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 08 . 05 . 1992
ஆண்டவன் அடியில் 27 . 12 . 2016



**செல்வி ஹம்சுஜா கணேசலிங்கம்**

பாசத்தின் திருவுருவே பண்பின் இருப்பிடமே!
நீவளர்ந்து நிழல்தந்து எமைக் காப்பாய்!
என நினைத்து நாம் இருந்த வேளைதனில்
அக்கா உன்னை அழைத்தாளோ!
ஆண்டு இரண்டு ஆனதம்மா - திருமகளே
உன்னை மணமகளாய் காண இருந்தோம்.
மூஎட்டு வயது தனில் எமைப் பிரிந்து சென்றனையோ!
உன் பிரிவால் நாம் என்றும் அழுகின்றோம்.
அக்காளும் தங்காளும் மீண்டும் வர மாட்டீர்களோ!

நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்.
மா.கணேசலிங்கம் (அப்பா)
077 977 3624

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 09 . 1948
மறைவு 06 . 01 . 2018



**திருமதி ஸ்ரீதேவி துரைராசா**

திதி: அபரபக்க பஞ்சமி (27.12.2018))



பொன்மலர்ந்த முகமும் புன்சிரிப்பும் கொண்டவரே
மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரோ
புன்னகையால் வெல்லுவோம்
என புதுவேகம் படைத்தவரே
எமக்கெல்லாம் நல் வழிகாட்டிய தீபமே
எம் குடும்ப விளக்கே நீங்கள்
எம்மை விட்டு சென்று
ஓராண்டு உருண்டோடி விட்டதுவே
முகம் எம் கண்களில் இன்றும் நிற்கிறது

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

203, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS.22075)(13.17)

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**மயில்வாகனம் சிவபாக்கியம்**

*(6ஆம் வட்டாரம், புங்குடுதீவு)*



புங்குடுதீவு. 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சிவபாக்கியம் கடந்த (25.12.2018) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - திரு வாத்துப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சோமசுந்தரம் ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2018) வியாழக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பெறாமகன்
(ந.கமலதாசன் - தபாலதிபர்)
நயினாதீவு. 071899 4855

(CS 22108/15/17)

# 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(மாவிலங்கை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி)

**அமரர் நமசிவாயம் வாதவூரர்**

(முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியர்)



மலர்வு 10.11.1924 உதிர்வு 27.12.1999

திதி : 27.12.2018

அன்பும் பாசமும், கல்வியும் அளித்து எம்மை நற்பிரஜைகளாக வாழவைத்த அப்பா நீங்கள் மறைந்து பத்தொன்பது ஆண்டுகளானாலும் உங்கள் நினைவுகள் எம் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும்

மாவிலங்கை, அளவெட்டி.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன், பூட்டப்பிள்ளைகளும்.

(CS 22083) (4.17)

## மரண அறிவித்தல்

**திருமதி சிவகாமிப்பிள்ளை இராசரத்தினம்**



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை இராசரத்தினம் நேற்று (26.12.2018) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

தகவல் : குடும்பத்தினர் நா.தினேஸ்குமார், பெறாமக்கள்.

(cs.22103) (13.17)

## தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை.

077 546 0028

(CS 22098) (4.17)

## பணிப்பெண் தேவை

வல்வெட்டித்துறையில் வேலைக்குச் செல்லும் குடும்பத்தினரின் பிள்ளையைப் பராமரிப்பதற்கும். வீட்டு வேலை செய்வதற்கும் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

078 5000 580/077 9074 944

(CS 22102) (4.17)

## மாட்டு பண்ணைக்கு பராமரிப்பாளர் தேவை

பண்டத்தரிப்பு பிரதேசத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பசு மாட்டு பண்ணைக்கு தங்கியிருந்து பணியாற்றக்கூடிய தனிநபர் or சிறு குடும்பம் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

077 416 5473

(CS 22104) (4.17)

## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண் ஒருவர் தேவை. உடனே தொடர்பு கொள்ளவும்.

077 052 7090

(CS 22097)(4.17)


# பொது அறிவித்தல் - 2019
# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்பு பட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதன வரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2019ம் ஆண்டுக்கான ஆதன வரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதன வரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2019ம் ஆண்டுக்கான ஆதன வரியை 31.01.2019ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டுற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15%உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதன வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2019ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேசசபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்<br>2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்:-<br>5. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்காக பின்வருமாறு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும்.<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் அமைத்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது |

| தொ இல | அனுமதியற்று கட்டப்பட்ட கட்டட விபரம் | கீழ் தளத்தில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு (ரூபா) | மேல் மாடியில் ஒவ்வொரு சதுர அடிக்குமான விதிப்பனவு (ரூபா) |
|---|---|---|---|
| 01 | அத்திவார வேலை மட்டும் பூர்த்தியாக்கப்பட்டது | 5.00 | - |
| 02 | கூரை வரை நிர்மாணித்தல் (கூரை தவிர்ந்த) | 10.00 | 10.00 |
| 03 | கூரை உட்பட நிர்மாணித்தல் | 15.00 | 15.00 |
| 04 | முழுமையாக நிர்மாணித்தல் | 20.00 | 20.00 |
| 05 | மதில் அமைத்தல் | 5.00 (அடிக்கு) | - |

| இல | விடயம் | தொடர்பு பட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பபடிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். |
| 06 | வியாபார அனுமதிப்பத்திரம் 2019 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/ தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2019ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2019ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2019ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கர வண்டி உரிமம் | துவிச்சக்கர வண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2019.03.31ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2019ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08 | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2019.03.31ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2019ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும் |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.<br>கட்டண விபரம் பின்வரும் |

| தொ. இல | விபரம் | கட்டணம் ( 1 சதுர அடி) |
|---|---|---|
| 01 | சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் (தகரம், பிலெக்ஸ், லூமினஸ்) அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தல் | ரூபா 100.00 |
| 02 | ஒரு மாதத்திற்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லைக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | ரூபா 30.00 |
| 03 | ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு குறைவாகக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | ரூபா 20.00 |
| 04. | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான கால எல்லை | ரூபா 40.00 |
| 05 | கட்அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லை | ரூபா 30.00 |
| 06 | வர்த்தக நிலையங்களுக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தக நாமத்தை உடைய வர்த்தக பெயர்பலகை தவிர்ந்த வேறு பெயர்ப்பலகை | ரூபா 100.00 |
| 07 | டிஜிட்டல் பெயர்ப்பலகை | ரூபா 150.00 |
| 08 | ஒளிபுக கூடிய விளம்பரம் | ரூபா 150.00 |

| இல | விடயம் | தொடர்பு பட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 10 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள்,மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 12 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையம் | உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33ஆம் இலக்க 2017.09.01ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானிப்பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. |
| 13 | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்.<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 14 | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2019ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2019ஆம் ஆண்டு பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/புதுப்பித்துக்கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளவும். |
| 15 | தரகர் முறை நீக்கல் | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.தர்சன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**
**0212244045, 0212240017**

(IN 8847)(14.17)

விளம்பர தொடர்புகளுக்கு 021 493 1111
advt@uthayan.com
உதயன்

# அமைச்சுப்பொறுப்புக்கான அரசிதழ் இன்னமும் வெளியிடப்படவில்லை

கொழும்பு, டிசெ. 27

புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு ஒரு வாரம் கடந்துள்ளபோதும், அவர்களுக்கான அமைச்சுக்கள், பொறுப்புகள் தொடர்பான அரசிதழ் அறிவிப்பு நேற்று வரையில் வெளியிடப்படவில்லை.

கடந்த 16ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்க அரசதலைவரால் தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்டதை அடுத்து 28அமைச்சர்களும்நியமிக்கப்பட்டனர்.

அதன் பின்னர், அமைச்சரவையில் இடம்பெறாத அமைச்சர்கள், இராஜாங்கமற்றும் பிரதி அமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர். எனினும், புதிய அமைச்சர்களுக்கானபொறுப்புகள், துறைகளை உள்ளடக்கிய அரசிதழ் அறிவிப்பு இன்னமும் வெளியிடப்படவில்லை. அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் இடையில், திணைக்களங்கள், அதிகார சபைகளைப் பங்கீடு செய்வதில் காணப்படும் இழுபறியே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (ம-5)


## அகவை 60 இல் வாழ்த்தும் மணிவிழா நாயகனின் பணி ஓய்வும்




**திரு. செல்லையா ஜெயநாதன்**
(சிரேஸ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)

அவர்களின் சேவைநலன் பாராட்டும் பணி ஓய்வும்
34 வருடங்கள் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையில் சேவையாற்றி 27.12.2018 இன்றுடன் ஓய்வுபெறுகின்றார்.
இவர் மட்டக்களப்பு, யாழ்ப்பாண மாவட்டங்களில் சிரேஸ்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகவும்,
(CDO Special Grade) வவுனியா மாவட்டத்தில் உதவிப் பிராந்திய முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

தென்னை அபிவிருத்தி துறையில் 34 ஆண்டுகள் சாலவே
நற்பணி புரிந்தவரே!
அன்புடன் அனைவரோடும் பழகி தம் ஆளுமையினால்
எம்மைக் கவர்ந்தவரே!
ஓய்வு காலம் உமக்கு சிறப்பாக அமைய
ஒப்பில்லா மகிழ்வோடு ஒளிரட்டும்!

தென்னைச் செய்கையாளர்களுக்கு விரிவாக்க மற்றும் சேவைகளை செய்த இவரின் ஓய்வு காலம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**பிராந்திய முகாமையாளர் உட்பட**
**அனைத்து உத்தியோகத்தர்களும்,**
**நலன்புரிச்சங்கம்,**
**தென்னைப் பயிர்ச் செய்கை யாழ்ப்பாணம்.**








## KINGS ELECTRONICS(PVT) LTD

★SPECIAL★ ★OFFERS★

ELECTONICS | FURNITURES | BABYCARE | TOYS

**மாபெரும் மலிவு விற்பனை DECEMBER 31 வரை**

**மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்**

**LED TELEVISIONS**



3 YEARS WARRANTY

| | |
|---|---|
| Samsung 32" | -29500/= |
| LG 32" | -29600/= |
| Hisence 32" | -22900/= |
| Sony 32 | -34500/= |
| VideoCon 32" | -21500/= |
| Innovex 24" | -16900/= |
| Panasonic 32" | -27500/= |
| Abans 32" | -21900/= |
| Sony 40" | -81500/= |
| Maxmo 32" | -19500/= |
| Haier 32" smart | -28900/= |

**SAMSUNG R19 REFRIGERATOR** 36,900/= (10 YEAR WARRANTY)

**LG INVERTER REFRIGERATOR** RS.67,900/= (10 YEAR WARRANTY)

6KG INNOVEX **WASHING MACHINE** 36,900/= FIVE YEAR WARRANTY

**SOFA SET 3+1+1 39,900/= ONLY**



OPEN 9.00AM TO 8.00PM 365 DAYS

Stand Fan Rs. 3,900 (1 YEARS)

**LG TOP LOADER WASHING MACHINE** 7KG WS-2107 INVERTER RS.55,900/=

**Hisense 55 4K SMART** RS.126,900 ONLY

**LG 43" FULL HD** RS.78,500 ONLY

**SAMSUNG 43" 4K SMART** RS.109,000 ONLY

3 YEARS WARRANTY

**LG DVD HOME THEATRE LHD677** RS.35,900/=

**HAIER WASHING MACHINE** RS.36,500/=

021-4546699 | mykings.lk | kingsjaffna | 12, Point Petro Road, Jaffna



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பேச்சில் மங்கலத்தன்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி நிலை உருவாகும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** நல்லவர்களின் நட்பு மனநிறைவைத் தரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** உணர்ச்சி வசப்படுகிற சூழல் ஏற்படலாம். குடும்ப விடயங்களை பிறரிடம் விவாதிக்க வேண்டாம். கடின உழைப்பு தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற உதவும்.

**கடகம்:** சொந்தப் பிரச்சினையை பிறரிடம் சொல்ல வேண்டாம். செயல் நிறைவேற ஒருமுகத் தன்மை அவசியம். தொழிலில் சராசரி உற்பத்தி விற்பனை இருக்கும்.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற, தகுந்த மாற்றம் செய்வீர்கள். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாக இருக்கும்.

**கன்னி:** செயலில் திறமை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி மன மகிழ்வைத் தரும். உபரி வருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபார வளர்ச்சி படிப்படியாக நிறைவேறும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நிதானமாகச் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சீரான அளவு பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** மனதில் நம்பிக்கையும், பெருமிதமும் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். நிலுவைப் பணம் வசூலாகும்.

**மகரம்:** சிலர்நெருக்கீடுகளை உருவாக்குவர். குடும்பத்தில் ஒற்றுமை அவசியம். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் பணி புரிவீர்கள்.

**கும்பம்:** விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் உருவான இடையூறு விலகும். உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். மேலதிக வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** சிறிய செயலும் கடினமாகத் தோன்றலாம். நண்பரின் ஆலோசனை புதிய நம்பிக்கையைத் தரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

## வாழ்க்கைக் கீதங்கள்

★ பிறந்ததிலிருந்து ஐந்துவயசுவரையானவாழ்க்கைஎஸ்.ஏ.ராஜ்குமார்மியூசிக் மாதிரி... எங்கேயும் எப்போதும் 'லலலாலா லலலாலா'தான்!

★ ஐந்து வயதில் இருந்து பத்து வயதுவரையான வாழ்க்கை அனிருத் மியூசிக் மாதிரி... நாளைக்கு எப்படி இருக்கும்னு நினைக் காம இண்டைக்கு 'என்ஜாய்' பண்ணி நகர்ந்துக்கிட்டே இருக்கணும்.

★ பத்து வயதில் இருந்து கட்டிளமைப்பருவத்தைக் கடக்கும் வரையான வாழ்க்கை, யுவன்ஷங்கர் ராஜா இசை மாதிரி... கொஞ்சம் ஃபீலிங்ஸ், கொஞ்சம் ஜாலி, கொஞ்சம் கவலை, கொஞ்சம் சேட்டையென கலந்து கட்டி வாழணும்.


★ இருபது வயுது முதல் இருபத்தி ஐந்து வயது வரையிலான வாழ்க்கை, தேவா கானா மாதிரி... காலேஜ் வாழ்க்கையில கொண்டாடித் தீர்க்கணும்.

★ இருபத்தைந்து வயது முதல் முப்பது வயது வரையான வாழ்க்கை, பாட்டு/இசை என இரண்டுக்கும் போதிய இடம் தருகின்ற ஹாரிஸ்ஜெயராஜ் மியூசிக் மாதிரி... இங்க காதலுக்கும் வேலைக்கும் சரிசம உரிமை தந்திடணும்.

★ முப்பதுமுதல்ஐம்பதுவயதுவரையானவாழ்க்கைரஹ்மான்மியூசிக்மாதிரி... புதுசு புதுசா முயற்சி பண்ணி நிறையத் தேடணும்; நிறைவா வாழணும்.

★ ஐம்பது முதல் அறுபது வயது வரையான வாழ்க்கை, இளையராஜா மியூசிக் மாதிரி... பழைய நினைவுகளை நினைத்தும், புது வரவுகளை அணைத்தும் வாழப் பழகிக்கணும்.

★ அதற்கும் மேலான வாழ்க்கை எம்.எஸ்.விஸ்வநாதன் மியூசிக் மாதிரி... ஒரு தனித்தன்மையோடு ஓய்வு பெறவேண்டும்.






# அதிவேக படப்பிடிப்பில் விக்ரமின் 'கடாரம் கொண்டான்'

'சாமிஸ்கொயர்' படத்தைத்தொடர்ந்து, 'கடாரம்கொண்டான்' திரைப்படத்தில் நடித்து வருகிறார் நடிகர் விக்ரம்.

இந்தப் படத்தை தூங்காவனம் படத்தை இயக்கிய, ராஜேஷ் எம் செல்வா இயக்குகிறார். விக்ரமின் 56 ஆவது படமான இதில் கமலின் இளையமகள் அக்ஷரா ஹாசன் நாயகியாக நடிக்கிறார். நடிகர் நாசரின் மகன் அபி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இசையமைப்பாளர் ஜிப்ரான் இசையமைக்கிறார்.

இந்த நிலையில் இந்தப் படத்தின் படபிடிப்பை ஜனவரியில் நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளனர் படக்குழுவினர். அத்தோடு ஏப்ரலில் படத்தை வெளியிடவும் மிக வேகமாக வேலைகள் நடந்து வருகிறது.










## twitter

Maran Retweeted

நித்ரா @nithratweets · Aug 27

துளியும் ஒளி இல்லாத இருட்டில் பாலும் காக்கையும் ஒரே நிறம்தான்! வெளிச்சம் என்பது கண்ணுக்குத் தேவையில்லை எண்ணத்துக்குத்தான் தேவை.

9 151 161

குரலுயர்த்தும்முன்னர், அடிக்கும்முன்னர், உடைக்கும்முன்னர் கொஞ்சம் நிதானியுங்கள்! வெளிப்படுத்தப்போவதோ உங்கள் இயலாமை!

மூத்தவர்களின் பேச்சையும் தோற்றவர்களின் பேச்சையும் அடிக்கடி கேட்டு நடந்துகொள்வது நல்லது!

சிரிப்பு ஒரு நல்ல உணர்வு. மனித உயிர்களுக்கு மட்டுமே இது சொந்தமானது.

## ஜனநாயகம்

இன்று, இந்த வருடம்,
எப்போதுமே
சமாதானம் , அச்சம் மூலமாக
ஜனநாயகத்தைப் பெறமுடியாது
என்று கூறி இரண்டு காலில் நிற்கவும்
நிலத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளவும்
எனக்கும் எல்லா உரிமைகளும் உண்டு
அவனுக்கு இருப்பது போலவே.
நடக்கும் போது நடக்கும் என்று
எல்லோரும் சொல்வதைக் கேட்டுப் புளித்துப்
போனது.

நாளை மற்றுமொரு நாளே
நான் இறக்கும் போது எனக்குச் சுதந்திரம்
தேவையில்லை
நாளைய பொழுதை நினைத்து என்னால்
வாழமுடியாது.

சுதந்திரம்
என்பது ஆழமான விதை
விடுதலை விருட்சத்தைக் காணும்
தேவையோடு பயிரிடப்பட்டது.
நானும் இங்குதான் வாழ்கிறேன்,
உன்னைப் போல.
சுதந்திரம் எனக்கும் வேண்டும்!

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | | 9 | | | | | |
| | | | | | | 5 | 1 | 8 |
| | | | | 8 | 5 | | 3 | |
| | 2 | | | | 4 | 8 | | 5 |
| 7 | | | 2 | 1 | 8 | | | 3 |
| 9 | | 8 | 3 | | | | 2 | |
| | 9 | | 4 | 2 | | | 8 | |
| 2 | 8 | 7 | | | | | | |
| | | | 8 | | 7 | | 5 | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 5 | 7 | 8 | 3 | 2 | 6 | 4 |
| 3 | 8 | 6 | 1 | 2 | 4 | 5 | 7 | 9 |
| 2 | 7 | 4 | 5 | 9 | 6 | 1 | 8 | 3 |
| 8 | 5 | 3 | 9 | 7 | 2 | 4 | 1 | 6 |
| 7 | 6 | 1 | 3 | 4 | 8 | 9 | 5 | 2 |
| 9 | 4 | 2 | 6 | 1 | 5 | 8 | 3 | 7 |
| 4 | 3 | 8 | 2 | 6 | 1 | 7 | 9 | 5 |
| 6 | 2 | 7 | 8 | 5 | 9 | 3 | 4 | 1 |
| 5 | 1 | 9 | 4 | 3 | 7 | 6 | 2 | 8 |

அபிவிருத்திக்கு

## ஒதுக்கிய நிதியைத் திருப்பி அனுப்பியதே மகிந்தவின் 50 நாள் ஆட்சியின் சாதனை

சஜித் சாட்டையடி

வீடமைப்பு அமைச்சு ஊடாக 2 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா நிதி வீடுகள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த நிதியை திறைசேரிக்கு திருப்பி அனுப்பியதே மகிந்த 50 நாள் ஆட்சியில் செய்த சாதனை. இவ்வாறு அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"50 நாள் அரசியல் நெருக்கடியின் போது, நாட்டின் தலைமை அமைச்சராகப் பதவி வகித்த மகிந்த ராஜபக்ச நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்து விட்டார். வறிய மக்களுக்காக வீடுகளை அமைப்பதற்கு, வீடமைப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்ட 2 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா இந்தக் காலகட்டத்தில் திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. அடுத்த ஓர் ஆண்டு காலப்பகுதியில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், இணைந்து பணியாற்ற வேண்டும். 2015ஆம் ஆண்டு இரண்டு பேரும் இணைந்து பணியாற்றுவதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். இது இரட்டை அதிகாரம். யாரும் தனி ஆதிக்கம் செலுத்த முடியாது" - என்றார். (ம-5)

## யாழில் பெண்ணின் தங்கச்சங்கிலி திருட்டு

யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் தொலைபேசி மீள் நிரப்பு அட்டை கொள்வனவு செய்வதுபோல் பாசாங்கு செய்த இரு இளைஞர்கள் வர்த்தக நிலையத்தில் நின்ற பெண்ணொருவரின் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச் சென்றனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. குறித்த சம்பவம் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் அமைந்துள்ள நீர்த்தாங்கி அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் உள்ளே வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் நின்றிருந்த சமயம் வர்த்தக நிலையம் முன்பாக உரிமையாளரின் தாயார் கதிரையில் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த மோட்டார் சைக்கிளில் வந்த இருவருள் ஒருவர் தொலைபேசி மீள் நிரப்பு அட்டை ஒன்றினை கொள்வனவு செய்துள்ளார். குறித்த சமயம் மற்றைய நபர் மோட்டார் சைக்கிளைத் தயார் நிலையில் வைத்திருந்தார்.

மீள் நிரப்பு அட்டையைக் கொள்வனவு செய்தவர் வர்த்தக நிலையத்தின் முன்னால் அமர்ந்திருந்த பெண்ணின் 3 பவுண் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு மிகவேகமாக ஓடிச் சென்று மோட்டார் சைக்கிளில் ஏறிய நிலையில் மோட்டார் சைக்கிள் வேகமாகத் தப்பிச் சென்றது என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (ம-105)


## உடனடி வேலைவாய்ப்பு

- அலுவலக பணியாளர் பெண்
- காட்சியறை பணியாளர் பெண்
- கணினி வடிவமைப்பாளர்
- தொழிற்சாலை பணியாளர் ஆண் / பெண்
- வேலை மேற்பார்வையாளர் பெண்

**நேர்முகத்தேர்வு** - **29.12.2018 சனிக்கிழமை**
**நேரம்** - 8 Am - 5 P.m
**இடம்** - EUT (PVT) LTD
**புன்னாலைக்கட்டுவன் தெற்கு,**
**புன்னாலைக்கட்டுவன்.**

(ni 8849) (13.17)

**021 224 0110/ 077 656 6873**


## கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 14 . 05 . 1940
இறப்பு 22 . 12 . 2018


## பொற்கொடி கனகசுந்தரம்

அன்னார் திருநெல்வேலி கிழக்கு முடமாவடியைப் பிறப்பிடமாக கொண்ட P.V. ராசையாவின் அன்பு மருமகளாகிய பொற்கொடி கனடாவில் காலமானதையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞானவைரவரை பிரார்த்திக்கின்றோம்.

(IN 7006) (14.17)

குட்டி.

## மரண அறிவித்தல்



மலர்வு 08 . 09 . 1951
உதிர்வு 26 . 12 . 2018

## கதிரவேலு வேலுப்பிள்ளை

பொற்றொழிலாளர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு வேலுப்பிள்ளை நேற்று (26.12.2018) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு - சோதி தம்பதிகளின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற வர்களான மணியம் - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் நாகராணியின் அன்புக் கணவரும் மார்க்கண்டு (கண்டு), குணசேகரம் (ராசன்), விமலாதேவி (கிளி), கமலாதேவி (சின்னத்தங்கச்சி), மனோகரன் (அப்பன்), சிவகுமார் (சிவா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நாகராசா (கண்ணன்), நல்லராசா (குஞ்சு), ரெங்கநாதன் (குட்டி), மகேந்திரன் (மகேந்தி), குணபாலசிங்கம் (குணம்), மல்லிகாதேவி (தேவி), இராஜேஸ்வரி (குஞ்சு), பிரியதர்சினி (பிரியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் டெசிறூபா, டெசீலா, விஜிதா, சபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இரவீந்திரன், ஞானசோதி, மோகன், றெஜிந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் டிலோஜன், றெனிற்ரா, தமீனா, கனீஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2018) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 614 6819** **தகவல்: குடும்பத்தினர்.**

## எனது நன்றிகள்

இலங்கை திருநாட்டிலும், வெளிநாடுகளிலும் இலகுவாக பட்டப் படிப்புக்களை கற்பதிலும், அதன்பின் இலகுவாக வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு அதிகளவான வசதிகளையும், வாய்ப்புக்களையும் வழங்குவதில் முன்னோடியான தனியார் பல்கலைக்கழகமான ICBT CAMPUS இன் முகாமைக்கும் அதன் யாழ்ப்பாணக் கிளையின் உயர்திரு கு.அமரேஷ் தலைமையிலான அனைத்து உத்தியோகத்தர்களுக்கும், மாணவர்களுக்கு சிறப்பான விரிவுரைகளை அளித்த அனைத்து விரிவுரையாளருக்கும், அப்பல்கலைக்கழகத்தில் கல்விபயின்று வெற்றிகரமாக பட்டப் படிப்பை நிறைவு செய்ய ஆசீர்வாதமளித்த இறைவனுக்கும், எனது பெற்றோருக்கும், அதற்கு உதவிய உற்றார், உறவினருக்கும், நண்பர்களுக்கும் எனது இருகரம் கூப்பி நன்றிகள் பலகோடி தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு 15.11.2018 ஆம் திகதி பட்டமளிப்பு கௌரவத்தை என்னோடு பெற்ற சக மாணவர்களுக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கீ.அச்சுதன்,
1ஆம் அணி மாணவன்,
Higher National Diploma in
Business Management(Spl.in Finance)

(C/8858)(10)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சூசானம் கணபதிப்பிள்ளை (ராணி)



பிறப்பு 02.10.1935
இறப்பு 26.12.2018


புலோலி சூசையப்பர் கோவில் பங்கைப் பிறப்பிடமாகவும், 18 A கோவில் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சூசானம் கணபதிப்பிள்ளை (ராணி)நேற்று(26.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் கிருத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான அன்னம்மா, அருட்சகோதரி டெலா சலேற் (தி.கு.சபை), அக்னேஸ், ஞானம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்புமனைவியும் கிறிஸ்ரி ஜோய், காலஞ்சென்ற கிறிஸ்ரி ஜொய்சி, கிறிஸ்ரி எல்மன் ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்ற மரியரெட்ணம், கலிஸ்ரா (ஆசிரியை, சென். பத்திரிசியார் கல்லூரி), யூடித் (ஆசிரியை, தி.கு. க. மடம் முன்பள்ளி) ஆகியோரின் அன்பு மாமியும் டினேஸ், டெரிக், ஜக்குலின்,கஜன், பெனிற்றன், நொயிலின், கரோலின் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.12.2018) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.



மலர்வு 20 . 04 . 1981
உதிர்வு 26 . 12 . 2018

### ஈஸ்வரன் சுதாகரன்

பணிப்புலம் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், சிவன் கோயிலடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஈஸ்வரன் சுதாகரன் நேற்று (26.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரன் மற்றும் சியாமளாதேவி தம்பதியரின் அன்புமகனும் ராங்கநாதன் காலஞ்சென்ற கோகிலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் ராதிகாவின் அன்புக்கணவரும் பூஜா, தருண், கிரிஜா, சஞ்ஜய் ஆகியோரின் அன்புத்தந்தையும் கதீசன் (ஜேர்மனி), கவிதா ( கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஜெயகௌரி, குகானந்தன் ஆகியோரின் அன்புமைத்துனரும் கரீபாஸ், கிருஷ்டிகா, நிருஷா ஆகியோரின் சித்தப்பாவும் கிருஷனின் அன்பு மாமனும் தேவிகா காலஞ்சென்ற சதீஸ் மற்றும் ரேணுகா ஆகியோரின் அன்பு மைத்துனரும் கேசவன், சுதாஸ்கரன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2018) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இல. 25, சிவன்கோவில் வீதி,
சாவகச்சேரி.

தகவல் குடும்பத்தினர்
077 063 9072

# தோல்வியே வெற்றிக்கான நெடும் பாதை!

மு.கரன்

இயற்கையில் இரவும்பகலும்எப்படியோ அதுவிதமே மனித வாழ்வில் வெற்றியும் தோல்வியும் சகஜம்தான். இரண்டையும் நேசிக்கப் பழகிக்கொள்வதே நல்ல அனுபவம் என்று கருதப்படுகிறது. வெற்றிகளிலிருந்து நாம் கற்றுக்கொள்வது குறைவு என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆனால், தோல்விகளிலிருந்தும் தவறுகளிலிருந்தும் நாம் நிறையக் கற்றுக்கொள்ள முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்றால் அதனை மறுக்க இயலாது. நாம் வெற்றியையும் தோல்வியையும் ஒன்று போல் நினைக்க வேண்டும். அப்போதுதான், இரண்டுமே நம்மையே ஏமாற்றி அருகிலும் வரும், விலகியும் செல்லும். மோசமான தோல்விகளைச் சந்திக்கும் துணிவு கொண்டவர்களால்தான் பெரும் சாதனைகளை நிகழ்த்த முடியும் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றே ஆகும்.

**வெற்றி என்பது குறிக்கோளை அடைவது!**

வெற்றி என்பது தற்செயலாக நிகழ்வ தில்லை. இது நமது மனப்பாங்கின் விளைவே ஆகும். நமது மனப்பாங்கே நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் ஒன்றாகும். வெற்றி என்பதே குறிக்கோளை அடைவதே என பொருள்படும். குறிக்கோள் இல்லாமல் இருந்தால் நிச்சயமாக வெற்றி என்பதே கிடையாது. குறிக்கோள் இல்லாதவரின் வாழ்க்கை, நடுக்காட்டில் வழி தெரியாமல் தவிக்கும் குருடரின் வாழ்க்கையைப் போன்றது என்கிறார்கள்.

வெற்றி என்பது வாழ்வில் நாம் எவ்வளவு உயர்ந்திருக்கிறோம் என்பதைக் கொண்டு அளக்கப்படுவதில்லை என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் விழும் போது எத்தனை முறை மீண்டும் உடனே எழுந்து நின்றிருக்கிறோம் என்பதைக் கொண்டே அளக்கப்படுவதுதான் வெற்றியாகும். மீண்டும் மீண்டும் எழும் இந்தத் திறமையே வெற்றியைத் தீர்மானிக்கின்றது. 'வீழ்வதே மீண்டும் எழுவதற்குத்தானே!' என்ற அற்புதமான வரிகள் நம் மனதில் பசுமரத்தாணி போலப் பதிய வேண்டும். இங்கு, விழுவதுஎன்பதுதோல்வி என்றும், எழுவது என்பது வெற்றி என்றும் பொருள்படுகின்றது. இதனை உணர்ந்தே, 'ஒரு மனிதனின் வெற்றி, அவனது தோல்விகளில்தான் நிர்ணயிக்கப்படுகின்றது.

ஏனெனில், அவன் கீழே விழுகின்ற ஒவ்வொரு முறையும், வேகமாய் முன்னேறு கிறான்' என்று அழுத்தத் திருத்தமாய்ச் சொல்கிறார் 'ரால்ஃப் வால்டோ எமர்சன்' என்கிற ஓர் அறிஞர். விழும் ஒவ்வொரு முறையும் எழுவதில்தான் நம் சிறப்பு வெளிப்படுமே தவிர, விழுவதில் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தோல்வி என்பது கடுமையானதுதான். ஆனால், வெற்றி பெறுவதற்காக முயற்சி செய்யாமல் இருப்பதுதான் அதைவிட மோசமானதாகக் கருதப்படுகிறது.

**வெற்றிக்கு மனபலம் வேண்டும்!**

நெஞ்சிலே துணிவில்லாத வனுக்குத் தோல்விகளெல்லாம் தடைக்கற்கள். துணிவுள்ளவனுக்கோ தடைக்கற்கள்கூட அவனைத் தூக்கி நிறுத்துகின்ற படிக்கற்கள்தான் என கூறினால் அது மிகையாகாது. தோல்வி என்பது நம்மோடு நிரந்தர வாசம் புரிய வருகிற ஒன்றல்ல. அது சில சமயங்களில், சில சந்தர்ப்பங்களில், சில இடங்களில் நம்மைத் தொட்டு விடுகிறது. எல்லாத் துறைகளிலும் முழுமை பெற்றவனாக, வெற்றி அடைந்தவனாக, எந்தவொரு மனிதனையும் நாம் இனம் காட்டுதல் இயலாது. ஒன்றில் கொடி கட்டிப் பறக்கிறவன், இன்னொன்றில் குப்புற விழுந்து மண்ணைக் கவ்வுகின்றான். ஆக, இப்படி வெற்றியும் தோல்வியும் சராசரி மனிதனின் வாழ்க்கையில் வந்து போகிற சாதாரண சங்கதிகளே என்பதனை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றையே எண்ணி எண்ணி மனச்சோர்வு காணக்கூடாது.

எனவே, இனியாவது புரிந்து கொள்ளுங்கள் வெற்றியின் திரைமறைவில் தோல்விகளும் நம்மைத் தொடரலாம்! தோல்விகளைப் படிக்கற்களாக்கிக் கொண்டால் வெற்றியின் விளிம்பையும் நாம் எட்டிவிடலாம். இதனால்தான், தோல்வியே வெற்றியின் முதற்படி என்ற பழமொழியைக் கூறுகின்றனர். இப்பழமொழி பொய்யல்ல. ஒவ்வொருவரும் உணர வேண்டிய உண்மை என்றால் அது மிகையாகாது. வெற்றி பெற்றவர்கள் அப்படியிலே அமர்ந்து விடுவார்கள். ஆனால், தோல்வி அடைந்தவர்கள்தான் மீண்டும் மீண்டும் முயன்று கொண்டே இருப்பார்கள்.

**தோல்விகள் நிரந்தரமானவையல்ல!**

எந்தத் தோல்வியும் நிரந்தரமில்லை என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு கதவு மூடினால், அடுத்த கதவைத் திறக்க முயல வேண்டும். தோல்வி என்பது வாழ்வின் ஓர் அங்கம் என்பது அனைவருக்கும் தெரியும். அதிலிருந்து பல அனுபவப் பாடங்களைப் படிக்க முடியும் என்பதை நாம் கண்டிப்பாக அறிந்துகொள்ள வேண்டும். தோல்வியின் சுவையை நாம் அனுபவித்து அறிந்திருந்தால் 'இனியொருமுறை தோற்கக்கூடாது' என்கிற மனப்பக்குவம் நமக்குள் வந்து விடும். தோல்வியே வெற்றிக்கான நெடும் பாதையாகும். 'டாம் வாட்சன் சீனியர்' என்பவர், "நீங்கள் வெற்றி பெற விரும்பினால், உங்களுடைய தோல்வியின் சதவீதத்தை இரண்டு மடங்கு ஆக்குங்கள்" என்று கூறியிருக்கின்றார். அவரின் கூற்றானது முற்றிலும் உண்மையே என்று கூறினால் அதுவே உண்மையாகும்.

தோல்வியின்றி வரலாறு படைக்க இயலுமா? நாம் வரலாற்றைப் படிக்கையில், எல்லா வெற்றிக் கதைகளுமே பெரிய தோல்விகளின் கதைகள் என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்வோம். ஒரே வித்தியாசம் என்னவென்றால், ஒவ்வொரு முறை அவர்கள் தோல்வி அடையும் போதும், அவர்கள் மீண்டும் எழுகின்றார்கள். இதைப் பின்னடைவு தரும் தோல்வி என்று சொல்வதை விட முன்னேற்றம் தரும் தோல்வி என்று சொல்லலாம். ஆனால், பலரும் வெற்றியின் தாரக மந்திரம் தோல்விதான் என்பதை உணர்வதும் இல்லை, ஏற்றுக் கொள்வதும் இல்லை. மானிடர்களின் இந்த அறியாமை நீங்கும் காலம் எப்போது வருமோ என்று வழி மேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறேன். வெற்றி என்பது நாம் சாதிக்கும் விடயங்களில் இல்லை சாதிப்பதிலேயே இருக்கின்றது.

**தன்னம்பிக்கையோடு கூடிய முயற்சி வேண்டும்!**

தோல்விக்குப் பயந்து சிலர் எப்போதும் முயற்சி செய்வதே இல்லை. அதே சமயம், அவர்கள் இருக்கும் இடத்திலேயே இருக்கவும் விரும்பமாட்டார்கள். சாதிக்க விரும்பும் மனிதன் தோல்விகளைப் பற்றியோ எதிர்ப்புகளைப் பற்றியோ, எதிரிகளைப் பற்றியோ, வறுமையைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டு ஒரே இடத்தில் நின்று காலத்தை வீணாக்க மாட்டான். எப்படி இதை எதிர்கொள்வது என்று செயல்பட ஏற்ற வழி எதுவோ அதைத் தேர்ந்தெடுத்து முடிக்க நடை போட ஆரம்பித்து விடுவார்கள். 'தன்னம்பிக்கை உள்ளவனுக்கு எல்லா வாசல்களும் திறந்து வரவேற்பு கொடுக்கும்!' என்கிறார் எமர்சன்.

நாம் சரியான மனப்பாங்கு உள்ளவராக இருந்தால், தோல்வியை ஓர் ஆசிரியராகத் தான் கருதுவோம். ஆசிரியர் என்பவர், நாம் ஒன்றைப் பற்றி தெள்ளத் தெளிவாகவும், ஆழமாகவும் கற்றுக் கொள்வதற்கு எவ்வாறு துணைபுரிகிறாரோ, அவ்வாறே இந்தத் தோல்வியும் வெற்றி என்னும் சிகரத்தை அடைவதற்கான நேர் பாதையை நன்றாக தெரிந்து கொள்ளத் துணை புரிகின்றது. தோல்வி அடையும் போது நாம் ஏமாற்றமடையலாம். ஆனால், முயற்சி செய்யாமலேயே இருந்து விட்டால், முற்றிலும் அழிந்துபோக நேரிடலாம். எனவேதான், தோல்வியிலிருந்து ஆதாயமடைவதே வெற்றியின் திறவுகோல் என்றும் கூறுகின்றனர்.

**தோல்வி என்பது ஒரு சுற்றுப் பாதையே!**

ஒவ்வொரு தோல்வியும் நமக்குப்பாடம் சொல்லிக் கொடுக்கும் ஒரு பள்ளிக்கூடம், ஒரு பாடநூல், ஒரு ஆய்வுக்கூடம், ஒரு அனுபவம் என பலவாறு கூறுகின்றனர். தோல்வி என்பது ஒரு சுற்றுப் பாதையே தவிர அதுவே முடிவாகாது. இது ஒரு தாமதமே தவிர பேரிடியில்லை என்பதை முதலில் நாம் மனதில் ஆழமாக பதிய செய்ய வேண்டும். அப்போதுதான், தோல்வியைக் கண்டு பயப்படாமல் அதனை துச்சமாக எண்ணி வெற்றியின் இலக்கை நோக்கிப் பீடுநடைப் போடுவோம். நாம் பெற்ற அனுபவத்திலிருந்துதான் ஒன்றைப் பற்றி நாம் கற்றுக்கொள்வோம். எனவே, நாம் செய்த தவறுகளுக்கு அனுபவம் என்ற பெயர் பொருந்தும் என்றால் அது மிகையாகாது.

வெற்றி பெற வேண்டும் என்றுதான் ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள், அப்படி விரும்பினால் மட்டும் போதுமா? எதிர்ப்படும் தோல்வியைப் புறமுதுகு காட்டாமல் எதிர்கொள்ள வேண்டும். தோல்வி எனும் மூன்றெழுத்தின் பயம் சூரியனைக் கண்ட பனிப்போல மறைந்துவிடும். தோல்வி பற்றிய பயம் பல சமயம் தோல்வியை விட மோசமாக இருக்கலாம். ஆனால், நாம் அதனைக் கண்டு ஒரு போதும் துவண்டு விடக்கூடாது.

தோல்வியைக் கண்டு துவண்டு போவதால் ஒரு பயனுமில்லை. அதை நேருக்கு நேர் எதிர்கொண்டு, எந்தத் தோல்வியும் என்னை தடுத்துவிட முடியாது என்றும், அதை நான் அனுமதித்தால் மட்டுமே என்னை அது முடக்க முடியும் என்று உறுதி கொள்வபர்களே வெற்றியாளர்கள். தோல்விகள் கொடுத்த பாடங்களிலிருந்து புதிய வெற்றிக்கான அடித்தளம் அமைக்க வேண்டும். தோல்வி என்பது நம் வாழ்வில் நடக்கும் ஒரு பயங்கர நிகழ்ச்சியில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். தோல்விகள் நம்மைத் துன்புறுத்தும் போது அந்த எண்ணத்தை விரட்டி அடிக்க நாம் முன்பு அடைந்த சிறு சிறு வெற்றிகளை நினைத்து மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.

**மன உறுதியுடன் போராடுவோம்!**

முயற்சியில் வெல்ல வேண்டும், எடுத்த காரியத்தில் வெற்றி பெற வேண்டும் என்று நாம் விரும்பினால் 'இயலும்' என எண்ணித் துணிந்தால் தான் உண்டு. இல்லையேல் தோல்வியும் துயரமும்தான் நம் முயற்சிகள் அனைத்தையும் பின் தொடர்ந்து கொண்டு இருக்கும். இயலாது என்பது முட்டாள்களின் வாதம். எனவே என்னால் இது இயலாது, எனக்கு அது தெரியாது, இது தெரியாது என்று சொல்லாதே 'முயற்சி செய்து பழகிக்கொள்' என்கிறார் நம் புரட்சிக்கவி பாரதியார்.

எனவேதான், 'வெற்றியில் ஆசை வை' என்கிறார் அறிஞர் அப்துல் ரஹீம். என்னால் இயலாது என எண்ணிக் கொண்டிருப்பவன் ஒருமுறை தோல்வியுற்ற பின், 'இயலாது' எனும் பயனற்ற மந்திரத்தைத் தன் மனதில் பதித்துக் கொண்டு மீண்டும் முயல முற்படமாட்டான். அந்த மந்திரத்தைக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டு, வெற்றி கிட்டும் வரை நாம் கண்டிப்பாக முயல வேண்டும் என்று மன உறுதியுடன் போராட வேண்டும்.











## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி குணரட்னம்



பிறப்பு 25.03.1935 இறப்பு 26.12.2018

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி குணரட்ணம் நேற்று (26.12.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - முத்துமாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குணரட்னத்தின் பாசமிகு மனைவியும், சுமணா, அருணா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற ஜெயவீரசிங்கத்தின் (பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை) அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, பாலசிங்கம் பரமேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகம்மா, அன்னபூரணி, பத்மாவதி மகாதேவன், காலஞ்சென்றவர்களான இராசதுரை, சோமசேகரம், பத்மநாதன், தவமணி, இரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு 47, இலந்தைக்குளம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை.

தகவல் :
குடும்பத்தினர்.

077 087 9701 (cs.22101) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக திட்டமிடல் கிளையில் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும் **திரு.கு. கோபிராஜ்** அவர்களின் அன்புத் தந்தை

### திரு. ஆறுமுகம் குணரத்தினம்

அவர்கள் 22.12.2018 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத்தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழகம்.**

(N 8852) (14.17)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



பிறப்பு 08 . 08 . 1948

இறப்பு 27 . 11 . 2018

திருமதி

### லோகநாயகி கதிர்காமநாதன்

*தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த*
*பிறப்பின் உயர்வே - உமை*
*பிரிந்து நிதம் வாடுகிறோம்*
*இனிமைகள் போய் தனிமைகள் உணர்கிறோம்*
*விழிகளில் நீர் சுமந்து வழிகளில் தேடுகிறோம்*
*கடந்துபோகும் காலங்கள் முழுவதும் .......*

இன்று (27.12.2018) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

(CS 22096)(14.17)

குடும்பத்தினர்.



மலர்வு 28 . 12 . 1964

உதிர்வு 25 . 12 . 2018

*வைத்தியகலாநிதி*

### குணரட்னம் ஜெயசுந்தரம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி குணரட்னம் ஜெயசுந்தரம் (Lady Ridgeway Children's Hospital, Borella.) கடந்த (25.12.2018) செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரட்னம் - பூபதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் தாரணியின் (HNB) அன்புக் கணவரும் கோபினேஷின் (பரிதோமாவின் கல்லூரி, கல்கிஸை) பாசமிகு தந்தையும் ஓய்வுபெற்ற சிரேஷ்ட வங்கி முகாமையாளர் (HNB) K. விஸ்வநாத முதலியார் தவமணிதேவி தம்பதிகளின் மருமகனும் பவானி, ஜெயேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் குகநாதன், ஞானசம்பந்தன், சிந்தா மோகனாம்பாள் ஆகியோரின் மைத்துனரும் சர்வேஷ், ஐங்கரன் ஆகியோரின் மாமனாரும் திலக்ஷன், தர்ஷிகா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.12.2018) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணிமுதல் பொரளை, ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 4.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நிறைவு பெற்று கனத்தை பொதுமயானத்தில் தகனம் செய்வதற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி
மற்றும் குடும்பத்தினர்.

011 205 5701 (C 8856/15/17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 08 . 1958

இறப்பு 25 . 12 . 2018

### செல்வி பத்மநிதி இராசேந்திரம்

*(ஓய்வு பெற்ற இலிகிதர் - யா/கல்வித்திணைக்களம்)*

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பத்மநிதி இராசேந்திரம் 25.12.2018 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சுதாநிதி (இளைப்பாறிய ஆசிரியர் யா/ இந்து தமிழ் பெண்கள் பாடசாலை), கலாநிதி (கனடா), ஜெயநிதி (கனடா), குலநிதி (கனடா), உதயேந்திரன் (கனடா), தவேந்திரன் (கனடா), விஜேந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற யோகேஸ்வரன், இரவீந்திரராசா (கனடா), கிருஸ்ணதாஸ் (கனடா), கதிர்காமசேகரன் (கனடா), துஷாதா (கனடா), யாழினி (கனடா), தீபா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிஷாந்தன் (ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) - ஆர்த்தி (ஆசிரியை - யா / இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை), அனுசாந்தன் - அனிதா (கனடா), யசோதா (ஆசிரியை - யா / திருக்குடும்ப கன்னியர் மடம்) - ஸ்ரீகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - சுகாதார அமைச்சு, வடமாகாணம்), கிருத்திகா - முரளி (கனடா), ஜசிந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச் சிறியதாயாரும் கிருஷ்ரிகா, கிஷானி, நிஸ்மியா, ரொஷான், மகிதா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் விதுன், அர்ச்சனா, அஜய், ஜெனிலியா, அயானா, மெலோனா, லிஸ்னா ஆகியோரின் அன்பு மாமியாரும் அர்த்தஷா, அக்நிஷன், அரியானா, ஆர்னிஷா, ஆதீஷ், துஜானா, அபரணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.12.2018) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

16, கைலாசபிள்ளையார் கோயிலடி,
நல்லூர்.

(CS 22105) (14,17)

தகவல்:
குடும்பத்தினர்

# இறுதியாட்டம் இன்று





முல்லைத்தீவு, டிசெ. 27

புதுகுடியிருப்பு விடியல் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை புதுகுடியிருப்பு விடியல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முல்லைத்தீவு சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

இறுதியாட்டத்துக்கு முதன்மை விருந்னரால் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலக கணக்காளர் திருமதி சுதர்ஜனி சிவசிறிதரன், வலைஞர் மடப் பங்குத் தந்தை லியோ ஆம்ஸ்ரோங், மதிப்புறு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் ஜெய பாபு, முறிவு நெறிவு வைத்தியர் சொ.செபமாலை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5,23)

## வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பரீட்சை பெறுபேறு வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 27

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான ஏ,பி,சி, தரப் பரீட்சார்த்திகளுக்கான தமிழ் மொழிமூல எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த வர்களின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

ஏ தர நடுவர் களுக்கான பரீட்சையில் சித்திபெற்றோர்

செல்வராசா சஞ்சயன், தங்கன் இன்பதாஸ், காந்தராஜா கஜேந்திரன், சந்திரசோதி சிறிசக்தி, சபாநாதன் ஜசிதரன், கௌரி நிகொலஸ் பிராங் தொரம்.

பி தர நடுவர்;களுக்கான பரீட்சையில் சித்திபெற்றோர் இராமஜெயம் சத்தியகாந்தி, கோபிநாத் பிரதீபா, பரமசிவம் ரதிதேவி, இராசரட்ணம் மோகனா, எஸ். சுகிர்தன், பி. கிரிஷ்ணபிரபு, கே. அருள்ராஜ், அகல்யா கமலகோபன் சி தர நடுவர்;களுக்கான எழுத்துப் பரீட்சையில் சித்திபெற்றோர் ஜோசப் சிறி காஞ்சி, கிருஸ்ணசாமி நிறஞ்சனி, வி. சுரேஸ்குமார், ஏ.நொயாலின், ரி. கோகுலன், ஏ.ஷமின்டகுமார், சிவகுமார் நிஷாந்தன், சோதிலிங்கம் விபுலன், சுகுனேஸ்வரி காத்தமுத்து, சண்முகசுந்தரம் லிங்கமூர்த்தி, சுபாஸ்கணேசன் கோபிசன், கோபால் குணாலன், இராமநாதன் பிரஷாந்த், எஸ். தீபா, கணேசன் ஜீவறானி, இராமகிருஸ்ணன் கிருஸ்ணகுமார், மகேந்திரராஜா நிதர்சன், டனிஷ் அனுஷியா, கே.ஜூலிற் நிஜந்தினி, எம்.அன்ரனிஸ், என்.வசீகரன், நவரட்ணம் சந்துஷா, குமாரசாமி மலரவன், என்.துர்க்கா, சக்திவேல் சதீஸ், அஸ்வினி மேரி பஸ்ரியன், டி.ஏ.ரி. ஜனனி, ஆர். பிரஷன்னா, கௌஷல்யா அசோகாந், எஸ் ஜிவிந்தன், எஸ். ரம்மியாராகுலன், தனராஜ் நவனீதராஜா, அருள்பிரகாசம் கிரிஜா, எஸ்.டரினா லம்பேட், எஸ்.சிறிதேவகரன், பெருமாள் திவ்வியா, மெய்யழகன் அரன்யா, ஆர். நித்தியானந்தகுமார், கமலநாதன் ஞானசேகரன், இராமநாதன் மகேந்திரம், அடைக்கன் பன்னீர்ச்செல்வம், கே.நதுஷா, கிரிபாபு டினிஜா, ஜி.தனுஷன், பி.ஆரோக்கியராஜா, தர்மலிங்கம் ஜனரஞ்ஜன், சுலக்ஷனா தர்மலிங்கம்.

இதேவேளை இவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (5,23)

# இன்னிங்ஸ் வெற்றியை பெற்றது சென்.ஜோன்ஸ்



அபினாஸ் டினோசன்

யாழ்ப்பாணம், டிசெ. 27

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், களுத்துறை சிறிபிரியரத்ன மத்திய கல்லூரிக்கும் இடையிலான ஆட்டத்தில், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 33 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான சிங்கர் கிண்ணத்துக்கான பிரிவு 2 இற்காக துடுப்பாட்டத் தொடரின் ஆட்டம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், சிறிபிரியரத்ன கல்லூரிக்கும் இடையில் இரண்டு நாள் ஆட்டம் கடந்த சனிக்கிழமை சிறிபாளி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிபிரியரத்ன கல்லூரி 32.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணிக்காக கவிந்த 47 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பில் அபினாஸ் 5 இலக்குகளையும், அபிசேக் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 52.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணிக்காக டினோசன் 125 ஓட்டங்களையும், சௌமியன் 78 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மதுசங்க 4 இலக்குகளைப் கைப்பற்றினார்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த சிறிபிரியரத்ன கல்லூரி 39 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. கவிந்து பெர்னாண்டோ 56 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் அபினாஸ் 5 இலக்குகளைக் கைப்பற்றினார். (5,23)

## 7 இலக்குகளால் வெற்றி பெற்றது செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி

யாழ்ப்பாணம், டிசெ. 27

செந்தமிழ் விளையாட்டுக் கழகத்துக்கும் காமாட்சி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான நட்பு ரீதியிலான துடுப்பாட்டப் போட்டியில், 7 இலக்குகளால் செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இரண்டு அணிகளுக்கும் இடையே அண்மையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக்கழக அணி 29 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பில் தர்சன் 59 ஓட்டங்களையும், துவாரகன் 45 ஓட்டங்களையும், பிரதாப் 24 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி சார்பில் மோகப்பிரியன் 3 இலக்குகளையும், தினேஸ், சுவேந்திரன் இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

171 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய செந்தமிழ் விளையாட்டுக் கழக அணி 23 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 3 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. சொரூபன் 83 ஓட்டங்களையும், பிரகோபன் 51 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் காமாட்சி விளையாட்டுக் கழகம் சார்பில் துவாரகன் ஓர் இலக்கைக் கைப்பற்றினார். (5,23)

## சென்னிஸ்ரார் வி.க. வெற்றி



யாழ்ப்பாணம், டிசெ. 27

சென்னிஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் கண்ணகி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான ஆட்டத்தில், 1:0 என்ற கோல் கணக்கில் சென்னிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் உழவர் விழாவை முன்னிட்டு நடத்தும் கால்ப்பந்தாட்டத் தொடர் அந்த விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

நேற்றுமாலை 3.30மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில், சென்னிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கண்ணகி விளையாட்டுக் கழகம் மோதியது.

ஆட்டத்தின் முதல்பாதியில் இரு அணிகளாலும் எந்தக் கோலையும் போடமுடியவில்லை. இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்து 6 ஆவது நிமிடத்தில் சென்னிஸ்ரார் விளையாட்டுக் கழக வீரர் டேவிட் அன்ரனி முதலாவது கோலைப் பதிவு செய்தார். இதன் பின்னர் இரு அணிகளும் மேலதிகமாக எந்தக் கோலையும் பதிவு செய்யவில்லை.

ஆட்டநேர இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் சென்னிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (5,23)

# அகர்வால், புஜாரா, கோக்லி நிதானம் இந்திய அணி பாதுகாப்பான ஆரம்பம்






ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாள் நிலவரத்தின்படி இந்திய அணி பாதுகாப்பான ஆரம்பம் கண்டுள்ளது. நாள் முடிவில் இந்திய அணி 2 இலக்குகளை இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ள நிலையில்' இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியுடன் சமநிலையில் உள்ளன. மூன்றாவது ஆட்டம் உலகின் மிகப்பெரிய மைதானமான மெல்பேர்ணில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பாண்டியா நீக்கப்பட்டிருந்தார். ஆரம்ப வீரர்களாக விகாரி மற்றும் அகர்வால். 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் விகாரி. அகர்வால் - புஜாரா இணைந்து இந்திய அணியை மீட்டெடுத்தனர். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இந்திய அணி. அணி 123 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அகர்வால். அதன் பின்னர் இலக்குகளைக் கைப்பற்றும் வாய்ப்பு ஆஸ்திரேலிய அணிக்குக் கிடைக்கவேயில்லை.

ஸ்ராக் ஹசில்வூட் கூட்டணி நேற்று 34 பந்துப்பரிமாற்றங்களை வீசிய போதிலும் இலக்குகள் எதையும் கைப்பற்றவில்லை. ஆட்டத்தின் 84ஆவது பந்துவீச்சை ஸ்ராக் வீசினார். அதன் நான்காவது பந்தை 'கவர் ட்ரைவ்' ஆட முற்பட்ட போது பந்து மட்டையில்பட்டு இலக்குக் காப்பாளர் ரிம் பெய்னிடம் சென்றது. எனினும் வாய்ப்பை வீணாக்கினார் பெய்ப். அடுத்த வாய்ப்பை பின்ஞ் தவறவிட்டார். ஆக 47 ஓட்டங்களில் கோக்லி ஆட்டமிழக்க வேண்டியவர். ஆஸியின் தவறால் அவர் தொடர்ந்து களத்தில் உள்ளார். புஜாரா 68 ஓட்டங்களுடனும், கோக்லி 47 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)





## நாணயச் சுழற்சிக்கு வந்த சிறுவன் ஆர்ச்சி சில்லர்!

ஆஸ்திரேலிய அணியின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்ட ஏழு வயதுச் சிறுவனான ஆர்ச்சி சில்லர், ஆஸியின் தலைவர் பெய்னுடன் இணைந்து நேற்று நாணயச் சுழற்சிக்கு வந்தான்.


ஆர்ச்சி சில்லர் அரிய வகை இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளான். இதுவரை பல அறுவைச் சிகிச்சைகளை அவன் சந்தித்துள்ளான். ஆஸ்திரேலிய அணியின் தலைவராக வேண்டும் என்பது அவனின் மிகப்பெரிய ஆசை. அவனின் விருப்பத்தை சில்லரின் தந்தை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து அவன் ஆஸ்திரேலிய அணியின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டான். நாணயச் சுழற்சிக்கும் அவன் அழைக்கப்பட்டான். (ம)

## மிச்செல் மார்ஷுக்கு எதிராக ஆஸியின் ரசிகர்கள் கூக்குரல்

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று மிச்செல் மார்ஷுக்கு எதிராக ஆஸ்திரேலிய ரசிகர்கள் கூக்குரல் எழுப்பினார்கள். இதற்கு ஆஸ்திரேலிய வீரர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் விளையாடிய ஆஸ்திரேலிய வீரர் ஹான்ட்ஸ்கொம் நேற்று ஆரம்பமான மூன்றாவது ஆட்டத்தில் விளையாடவில்லை. இரண்டாவது ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் கோக்லியை மோசடியான முறையில் ஆட்டமிழக்கச் செய்தமையாலேயே ஹான்ஸ்கொம் மூன்றாவது ஆட்டத்தில் இருந்து நீக்கப்பட்டார் என்று ஊடகங்கள் கருத்துத் தெரிவித்திருந்த நிலையில் ஹான்ஸ்கொம்முக்கு பதிலாகச் சேர்க்கப்பட்ட மிச்செல் மார்ஷுக்கு எதிராக ரசிகர்கள் கூக்குரல் எழுப்பினார்கள்.

(ம)



## அஸ்வின் காயத்தால் அவதி!



இந்திய அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளர் அஸ்வின் தொடர்ந்து காயம் காரணமாக அவதிப்பட்டு வருகிறார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் அஸ்வின் சிறந்த பந்துவீச்சுப் பெறுதியை வெளிப்படுத்தினார். இரண்டாவது ஆட்டத்தில் காயம் காரணமாக அஸ்வின் விளையாடவில்லை. மூன்றாவது ஆட்டம் நேற்று ஆரம்பமானது. இந்த ஆட்டத்தில் அஸ்வின் விளையாடுவாரா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவியது. இந்த நிலையில் காயம் காரணமாக அவர் நேற்றைய ஆட்டத்திலும் களமிறங்கவில்லை. பதில் வீரராக ஜடேயா சேர்க்கப்பட்டார். நான்காவது ஆட்டத்தில் அஸ்வின் விளையாடுவார் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது.

(ம)

# லக்மல் அபாரமான பந்துவீச்சு ஆதிக்கத்தில் இலங்கை அணி

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் நாளான நேற்று இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லக்மல் வெளிப் படுத்திய அபாரமான பெறுபேற்றை அடுத்து நியூ சிலாந்து அணி 178 ஓட்டங்களில் சகல இலக்குக ளையும் இழந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. நியூசிலாந்து அணியின் ஆரம்ப வீரர்களாக ராவல் மற்றும் லாதம். ஆரம்ப வீரர்கள் இருவ ரும் லக்மலின் அசுர வேகத்தால் வெளியேற்றப் பட்டனர். ராவல் 6 ஓட்டங்களுடனும் லாதம் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்திருந்தனர். அணித் தலைவர் வில்லியம்சனால் முடிந்தது வெறும் இரண்டு ஓட்டங் கள் மட்டுமே. நிக்கொல்ஸ் ஓர் ஓட்டத்துடன் லக்ம



லின் பந்துவீச்சில் போல்ட் முறையில் வீழ்ந்தார். ரெய்லர், வற்லிங் இருவ ரும் இணைந்து ஓரளவு போராட்டம் காட்டினார் கள். 27 ஓட்டங்களுடன் ரெய்லர் ரண்அவுட் முறை யில் ஆட்டமிழந்தார். கிரான்ட்ஹோம் ஓர் ஓட்டத் துடன் வெளியேற்றினார் குமார. கிரான்ட்ஹோம் ஆட்டமிழந்த போது இலங்கை அணி 64 ஓட் டங்களுக்கு 6 இலக்குகளை இழந்திருந்தது. சவுத்தி பின்வரிசையில் போராட்டம் காட்டினார். அவர் 65 பந்துகளில் 68 ஓட்டங்களைக் குவித் தார். முடிவில் 178 ஓட்டங்களில் சகல இலக்குக ளையும் இழந்தது நியூசிலாந்து அணி.

பந்துவீச்சில் லக்மல் 5 இலக்குகளையும், குமார 3 இலக்குகளையும், பெரேரா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணிக்கு முன்வரிசை முழுவதுமாக ஏமாற்றியது. ஆரம்ப வீரர்களான குணதிலக 8 ஓட்டங்களுடனும், கருணாரத்ன 7 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் சந்திமல் 6 ஓட்டங்களுடனும் சவுத்தி யின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். குசல் மென் டிசை 15 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் கிரான்ட்ஹோம். குசல் மென்டிஸ் ஆட்டமிழந்த போது இலங்கை அணி 4 இலக்குகளை இழந்து 51 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மத்தியூஸ், றோசன் சில்வா இருவரும் இணைந்து நாள் முடிவு வரை தாக்குப்பிடித்தனர். நாள் முடிவில் இலங்கை அணி 4 இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. மத்தியூஸ் 27 ஓட் டங்களுடனும் றோசன் சில்வா 15 ஓட்டங்களுட னும் களத்தில் உள்ளனர்.



## அசத்தல் வீரராக ஐ.பி.எல். உதவும்

### ராகுல் தெரிவிப்பு

எதிர்காலத்தில் மிகச் சிறந்த வீரராக உருவெடுக்க ஐ.பி. எல். தொடர் உதவும் என்று தெரிவித்தார் இந்திய அணி யின் வீரரும் கடந்த ஐ.பி.எல். தொடரில் பஞ்சாப் அணிக்காக விளையாடியவருமான ராகுல்.

கடந்த ஐ.பி.எல். தொடரில் ராகுல் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். பலரை யும் கவர்ந்த வீரராக அவர் இருந்தார். அடுத்த ஐ.பி.எல். தொடர்பான கருத்துக்கள் தற்போதே உச்சம் தொட்டுள் ளன. இந்த நிலையில் இவ் வாறு தெரிவித்தார் ராவிட்.

“ரி20 ஆட்டங்களில் சூழ்நி லைக்கு ஏற்றவாறு விளை யாட வேண்டும் என்பதை நான் எப்போதுமே நம்புகிற வன். குறிப்பாக ரி20 ஆட்டங் களில் ஒவ்வொரு பந்தும் முக் கியத்துவம் வாய்ந்தது. ஒவ் வொரு பந்திலும் ஆட்டத்தின் நிலை மாறும். அணிக்கு என்ன தேவையோ அதைக் கருதி. அதற்கேற்றபடி விளை யாட வேண்டும். இந்தியாவுக் காக கடந்த இரண்டு மூன்று வருடங்கள் நான் விளையா டிய போதிலும் கடந்த வருட ஐ.பி.எல். தொடர் என்னை மேலும் மெருகேற்றியுள்ளது” என ராகுல் மேலும் தெரிவித் தார். (ம)


விசேட கருத்தரங்குகள்
M. Ed தெரிவு
வெள்ளி 9.00 → 4.00
புகையிரத அத்தியட்சகர்
வெள்ளி, சனி 9.00 → 3.30
அலுவலக பணியாளர்
வெள்ளி, சனி 9.30 → 2.30
அதிபர் சேவை
புதிய பிரிவு
வெள்ளி, சனி 9.00 → 3.00
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

சிறுநீரகம் தேவை
51 வயதுடைய ஆண் ஒருவருக்கு B+, O+ (பொசிட்டிவ்) சிறுநீரகம் ஒன்று தேவை. கொடுக்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். (IN 8850)(14.17)
077 369 6476 / 077 361 8696

பணியாளர்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.
- விற்பனையாளர் (ஆண்)
- சிட்டை எழுதுநர் (ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சரளமாக உரையாற்றக் கூடியவர்கள் விரும்பத்தக்கது)
நாளை (28/12/2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.
Jaffna Electricals
No.94(06) Stanley Road, Jaffna.
T.P : 021 222 2353 Fax : 021 222 4302
(IN 8854)(14.17)

மஞ்சவனப்பதி முருகன் துணை
உடனடி வேலை வாய்ப்பு
★ கணக்காளர் (Accountant)
CIMA விரும்பத்தக்கது, கணினி அறிவு முன்னுரிமை (ஆண் / பெண் இருபாலாரும்)
★ சுப்பர் மார்க்கட் ஊழியர்கள் (ஆண் / பெண் இருபாலாரும்)
★ சமையலாளர் பொதியிடல் (சிற்றுண்டிகள் தயாரிப்பு உட்பட சமையல் வேலைகள், ஆண் / பெண் இருபாலாரும்)
முக்கிய குறிப்பு - உங்கள் சுயவிவரக்கோவை, கிராமசேவையாளர் உறுதிப் படுத்தல் உடன் பிற்பகல் 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் கீழுள்ள முகவரிக்கு நேரில் வரவும். அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
SUNJEYS A TO Z SUPER MART
100, Arasady Road, Jaffna, (யா /இந்து மகளிர் கல்லூரி அருகில்)
Email - jarul82@gmail.com 021 205 3077

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 26 . 06 . 1962
மறைவு 27 . 12 . 2016
அமரர் செபரட்ணம் பிரான்சிஸ் அரியநேசன்
உயிருக்கு உயிராக இருந்து
எம்மைக் காத்த எமது அப்பாவே
ஆண்டுகள் இரண்டு ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
08, நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்.
நீங்காத நினைவுகளுடன்
குடும்பத்தினர், சகோதரர்கள்.




கிரிஸ்டியானோ ரொனால்டோ கிறிஸ்மஸ் தினத்தை அவரது குடும்பத்தினருடன் வெகு விமர்சையாகக் கொண்டாடியுள்ளார். அதனை தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.